உதயன்
விலை ரூபா 20.00
www.uthayan.com
சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 வைகாசி 32 புதன்கிழமை (15.06.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 201

# போர்க்குற்றம் தொடர்பில் விசாரணை அவசியம்
# ஈழத்தமிழர் நிலைமையை நேரில் கண்டறியக் குழு



14
இலங்கை - இந்தியா கூட்டறிக்கையால் வலுக்கிறது நெருக்கடி



21
தடையை நீக்க வழக்கை விரைவில் விசாரணை செய்க



25
நான் தகுதியானவன் அல்ல..!

**கல்விச் சுடர்**

தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களை இறுதிப்பரீட்சைக்கு தயார்ப்படுத்தும் படிமுறைப் பரீட்சை இல. 5 வினாத்தாள்- I இன்றைய உதயனின் 16,17 ஆம் பக்கங்களில் வெளியாகியுள்ளது.

## இலங்கையிடமிருந்து கச்சதீவை மீட்கவேண்டும் மன்மோகன் சிங்கிடம் ஜெயலலிதா வலியுறுத்து

கொழும்பு, ஜூன் 15

இலங்கையில் இடம்பெற்றுள்ள போர்க்குற்றங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் எனவும் இலங்கை முகாம்களில் உள்ள தமிழர்களின் நிலைமையை நேரில் கண்டறிய, தமிழக சட்டமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழுவொன்றை இலங்கைக்கு அனுப்பிவைக்கவேண்டும் என்றும் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கிடம் தமிழக முதல்வர் ஜெயலலிதா நேற்று வலியுறுத்தினார் என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

தமிழ்நாட்டில் மூன்றாவது தடவையாக முதலமைச்சராகப் பதவியேற்றுள்ள ஜெயலலிதா நேற்றுப் பகல் புதுடில்லியில் இந்தியப் பிரதமர் மன்



மோகன் சிங்கை சந்தித்துப் பேசினார்.

தமிழக மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் தொடர்ந்து தாக்கி வருவதை (27ஆம் பக்கம் பார்க்க)

## பஸில் திங்களன்று யாழ். வருகிறார்

யாழ்ப்பாணம், ஜூன் 15

வடமராட்சி கிழக்கில் மீள்குடியேற்றத்தை ஆரம்பித்து வைப்பதற்கும், வலி.வடக்கில் மேற்கொள்ளப்பட்டு வரும் புனரமைப்பு மற்றும் அபிவிருத்தி திட்டங்களைப் பார்வையிடுவதற்கும் எதிர்வரும் 20 ஆம் திகதி திங்கட்கிழமை பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ யாழ்ப்பாணத்துக்கு வருகைதரவுள்ளார் என்று தெரிவிக்கப் படுகின்றது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் பல்வேறுபட்ட வேலைத்திட்டங்கள் நேற்று வலி.வடக்கில் ஆரம்பிக்கப் பட்டன. இந்த நிகழ்வில் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ கலந்துகொள்வதாக முன்னர் அறிவிக்கப்பட்டிருந்த போதும் இறுதி நேரத்தில் அவர் வரவில்லை. அமைச்சர் வெளிநாடு சென்றிருப்பதாலேயே வரவில்லை என்று தெரிவிக் கப்பட்டது. (28 ஆம் பக்கம் பார்க்க)

## கப்பல் சேவையை இடைநிறுத்துங்கள் மன்மோகனிடம் 'ஜெ' கோரிக்கை

### மகஜர் ஒன்றையும் கையளித்தார்

கொழும்பு, ஜூன் 15

கொழும்புக்கும், தமிழ்நாடு தூத்துக்குடிக்கும் இடையில் நேற்று ஆரம்பிக்கப்பட்ட கப்பல் சேவையை உடன் இடைநிறுத்துமாறு தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா நேற்று இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்கிடம் கேட்டுள்ளார்.

மன்மோகன்சிங்கை நேற்று புதுடில்லியில் சந்தித்து உரையாடிய ஜெயலலிதா மேற்படி விடயம் தொடர்பாக மன்மோகன்சிங்கிடம் மகஜர் ஒன்றையும் கையளித்தார். அதன் பிரதிகளை சென்னையில் ஊடகங்களுக்கும் அனுப்பி வைத்தார்.

இந்தக் கப்பல் சேவையை ஆரம்பிப்பது பற்றி தனது அரசுடன் கலந்தாலோசிக்கப்படவில்லை என்று ஜெயலலிதா அந்த மகஜரில் குறிப்பிட்டுள்ளார். துரதிஷ்டமான நேரத்தில் இந்தக் கப்பல் சேவை

(28 ஆம் பக்கம் பார்க்க)

## தூத்துக்குடியிலிருந்து முதலாவது கப்பல் நேற்று கொழும்புத் துறைமுகம் வந்தது

கொழும்பு, ஜூன் 15

தூத்துக்குடி - கொழும்பு பயணிகள் சொகுசு கப்பல் நேற்றுக் காலை 6மணிக்கு கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது.

30 வருடங்களின் பின்னர் இந்தக் கப்பல் சேவை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. நேற்றுக்காலை கொழும்பை வந்தடைந்த கப்பலில் 80பிரதிநிதிகள் உட்பட 201 பயணிகள் இருந்தனர். இருந்தும் இக்கப்பலில் ஆயிரத்து 44 பயணிகள் பயணம் செய்ய வசதிகள் உள்ளன.

மூன்று நட்சத்திர ஹோட்டலைப் போன்ற சகல வசதிகளையும் கொண்ட சொகுசு கப்பலான 'ஸ்கொட்டியா பிரின்ஸ்' தூத்துக்குடி - கொழும்பு சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. இந்தக் கப்பலில் (27ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டில் மக்கள் பதிவு நடவடிக்கை குறித்து அரசிடமிருந்து முன்பின் முரணான தகவல்கள்

### தமக்கு எதுவும் தெரியாது என்கிறார் அரச அதிபர் இமெல்டா

கொழும்பு, ஜூன் 15

யாழ். குடாநாட்டில் மக்களைப் புகைப்படம் எடுத்து பதிவுசெய்யும் நடவடிக்கை குறித்து முன்னுக்குப் பின் முரணான தகவல்கள் அரச தரப்பிலிருந்து வெளியிடப் படுகின்றன.

யாழ். குடாநாட்டுக்குப் பொறுப்பான கட்டளைத் தளபதி மஹிந்த ஹத்துருசிங்க யாழ். குடா நாட்டில் மக்களைப் பதிவு செய்யும் நடவடிக்கைகளில் இராணுவத்தினர் ஈடுபடவில்லை எனத் தெரிவிக்

(27ஆம் பக்கம் பார்க்க)

## நாடாளுமன்றத் தெரிவுக்குழு அடுத்தவாரம் நியமிக்கப்படும்

கொழும்பு, ஜூன் 15

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அரசியல் வரைவொன்றைத் தயாரிக்க சபா நாயகர் சமல் ராஜபக்ஷ அடுத்த வாரம் சர்வகட்சி நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஒன்றை நியமிப்பார் என அரச வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ரஷ்ய விஜயத்தை மேற்கொள்வதற்கு முன்னர் வடக்கு, கிழக்குப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் வகையில் சர்வகட்சி நாடாளுமன்றத் தெரிவுக் குழுவொன்றை நியமிக்கும் படி சபாநாயகர் சமல் ராஜபக்ஷவிடம் பணிப்புரை விடுப்பார் என அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

(28 ஆம் பக்கம் பார்க்க)

## வலி.வடக்கில் புனரமைப்புப் பணிகள் தாமதம் அதிகாரிகளைச் சாடினார் ஆளுநர் சந்திரசிறி

### பதிலளிக்க முடியாமல் திக்குமுக்காடினர் அவர்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 15

வலி. வடக்கில் மக்கள் மீளக்குடியமர்ந்த பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் புனரமைப்பு அபிவிருத்தித் திட்டங்கள் தாமதமடைவது தொடர்பில் வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ. சந்திரசிறி அதிகாரிகளை கடுமையாகச் சாடினார். தாமதத்துக்கான சரியான காரணம்- பொருத்தமான பதிலைக்கூற முடியாது அதிகாரிகள் திக்குமுக்காடினர். அவர்கள் தடுமாற்றத்துடன் பதிலளித்தனர்.

வலி. வடக்கில் மக்கள் மீளக்குடியமர அனுமதிகக்கப்பட்டுள்ள பிரதேசங்களில் அரசினால் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பிக்கும் நிகழ்வுகள் வலி.வடக்கில் நேற்று இடம்பெற்றன. இந்த நிகழ்வுகள் ஆரம்பிப்பதற்கு முன்னதாக தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் பிரதேச செயலர் எஸ்.முரளிதரன் மற்றும் திணைக்களத் தலைவர்களுடன் கலந்துரையாடல் இடம்பெற்றது. கலந்துரையாடலின்



போதே ஆளுநர் இவ்வாறு கடுமையாகச்சாடினார்.

அங்கு அளுநர் தெரிவித்தவை வருமாறு:-


வலி. வடக்கின் பல்வேறு புனரமைப்பு வேலைகள் மற்றும் அபிவிருத்தித் திட்டங்களுக்கு அரசு பெருமளவு நிதியை ஒதுக்கியுள்ளது. இருப்பினும் புனரமைப்பு பணிகள் முழுமையாக இந்தப் பிரதேசத்தில் இடம்பெறவில்லை.

எனவே தாமதமடையாது (28 ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: admin@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




தெளிவான வானிலை அனைத்து மாவட்டங்களிலும் நிலவுவதற்கான சாத்தியம் . அநேக மாவட்டங்களில் வெப்பமான கால நிலை நாள் முழுவதும் நிலவும்.

CSE
COLOMBO STOCK EXCHANGE

பங்குச்சந்தை μ யாழ்ப்பாணம்
ஆனி 14, 2011
பங்குச்சந்தைச் சுட்டிகள்
அனைத்துப்பங்கு(ASPI) 7083.05↓
மிலங்கா(MPI) 6637.18↓
உரிமைமுதல் தகவல்கள்
வியாபாரப்புரள்வு(Rs.) 4.1Bn
பங்குகளின் அளவு(No.) 235.32Mn
வியாபாரம்(No.) 17421
விலை அசைவுகளின் அடிப்படையில்
அதிகரிப்பு(Top 5 gainers)விலை Rs.
சிங்கலங்கா கெமிக்கல் 2000.00
பிபுத் 37.10
பறகன் சிலோன் 2399.00
டியுனமிஸ் கெபிரல் 25.00
கறிஸ்சந்திரா 2999.00
குறைவு(Top 5 losers) - விலை Rs.
ஈஸ்ரேன் மேக்கன்ர் 1200.00
சாலிமார் 660.20
கொழும்பு போட் 330.00
மல்வத்தே 8.70
ஒட்டோறோம் 910.00
மேலதிக தகவல்கள்- www.cse.lk

### இரு தசாப்தங்களுக்குப் பின்னர்

# குடாநாட்டு ஆயுள்வேத வைத்தியருக்கு மீண்டும் அரசால் அபின் விநியோகம்

யாழ்ப்பாணம், ஜூன் 15

போர்க்காலச் சூழ்நிலையைத் தொடர்ந்து வடமாகாணத்திலுள்ள ஆயுள்வேத வைத்தியர்களுக்கு இரு தசாப்தங்களுக்கு மேலாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த அபின், தற்பொழுது நாட்டில் ஏற்பட்டுள்ள சமாதானச் சூழ் நிலையைத் தொடர்ந்து மீண்டும் வழங்கப்படுகின்றது. இதனால் வைத்தியர்கள் மட்டுமல்ல, நோயாளர்களும் நன்மை அடைகின்றனர்.

இலங்கையிலுள்ள ஆயுள்வேத வைத்தியத்தில் ஈடுபட்டுள்ள வைத்தியர்களுக்கு காலாண்டுக்கு ஒரு தடவை குறிப்பிட்ட அளவு அபின் வழங்கப்பட்டு வந்தது. நாட்டில் ஏற்பட்ட போர்க்காலச் சூழ்நிலையைத் தொடர்ந்து, கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த வைத்தியர்களுக்கு வழங்கப்பட்டு வந்த அபின் நிறுத்தப்பட்டது. அபின் தேவை குறித்து சம்பந்தப்பட்டவர்களுக்கு வைத்தியர்கள் பல தடவை விண்ணப்பித்திருந்தபோதிலும் அரசு அபினை வழங்க முன்வரவில்லை.

ஆயுள்வேத வைத்தியத் துறையில் அபின் என்பது முக்கிய பங்கை வகிக்கின்றது. சல ரோகம் உட்பட மாறாத நோய்களுக்கு அபின் கலந்த மருந்தை வழங்குவதன் மூலம் நோயைக் கட்டுப்படுத்த முடியும் என்ற நம்பிக்கை வைத்தியர் மத்தியில் நிலவுகின்றது.

அபின் கலந்து செய்யப்படும் ''அமுதுசர்க்கரை'' மருந்து மூலம் பல வகையான நோய்களைக் கட்டுப்படுத்த முடியும் என்றும் வைத்தியர்கள் தெரிவித்துள்ளார்கள். ஆயுள்வேத வைத்தியர்களின் கோரிக்கையைத் தொடர்ந்து அபினை வழங்க முன்வந்துள்ள அரசு குறிப்பிட்ட வைத்தியர்களுக்கு தற்பொழுது 5கிராம் முதல் 10கிராம் அபின்வரை வழங்கி வருகின்றது. (ஒ-115)

## சிறுகதைத்தொகுதி வெளியீடு

செல்வி உஷானி ஜெயானந்தகுமார் எழுதிய ''அருஞ்சொத்து'' என்னும் சிறுகதைத்தொகுதி வெளியீட்டு விழா இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு உடுப்பிட்டி மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரியின் ஓய்வுபெற்ற அதிபர் கி.நடராசா தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசாவும், சிறப்பு விருந்தினர்களாக வட மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள்-விளையாட்டுத்துறை அமைச்சின் பிரதிச் செயலாளர் வே.தி.செல்வரத்தினமும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்த சிறுகதைத் தொகுதியின் வெளியீட்டுரையை பிரபல எழுத்தாளரான குப்பிழான் ஐ. சண்முகனும், நூலின் நயப்புரையை யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் இ.இராஜேஸ் கண்ணாவும் நிகழ்த்தவுள்ளனர். (ற-190)

### கொழும்பு - யாழ். பஸ்ஸில்

# சாரதியின் ஆசனம் அருகில் கஞ்சாபொதி அவரும் நடத்துநரும் விளக்கமறியலில்

தென்மராட்சி, ஜூன் 15

பஸ் சாரதியின் ஆசனத்துக்கு அருகில் வைக்கப்பட்டிருந்த உரிமைகோரப்படாத பயணப் பொதியால் பேருந்தின் சாரதியும் நடத்துநரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாகப் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து தென்னிலங்கையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த தனியார் பேருந்தை பொலிஸார் சோதனையிட்ட வேளை சாரதியின் ஆசனத்துக்கு அருகில் காணப்பட்ட பயணப் பொதிக்குள் கஞ்சா இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தையடுத்து பேருந்தின் சாரதியையும் நடத்துநரையும் பொலிஸார் சாவகச்சேரி மாவட்ட நீதிமன்ற நீதிவானின் முன்னிலையில் ஆஜர்செய்தனர். இதனையடுத்து இந்த இருவரையும் எதிர்வரும் 24 ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் மா.கணேசராசா உத்தரவிட்டார்.

வாகனம் தொடர்பாக நேற்று முன்தினம் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட மனுவை விசாரித்த நீதிவான் வாகனத்தை 30 ஆயிரம் ரொக்கப் பிணையிலும் 10 மில்லியன் ரூபா பிணையிலும் கொண்டுசெல்ல அனுமதித்தார். (ஒ-வ-207)

# ஒலிம்பிக் போட்டிக்குப் புறப்படுகிறார் 'சிவபூமி' மாணவன் துஷ்யந்தன்

### வழியனுப்பும் நிகழ்வு இன்று

யாழ்ப்பாணம், ஜூன் 15

கிறீஸின் ஏதென்ஸ் நகரில் எதிர்வரும் 19 ஆம் திகதி ஆரம்பமாகவிருக்கும் மாற்று வலுவுடையோருக்கான ஒலிம்பிக் போட்டியில் கோண்டாவில் ''சிவபூமி'' பாடசாலை மாணவன் சி.துஷ்யந்தன் பங்கேற்கிறார்.

இந்த மாணவனை வழியனுப்பும் நிகழ்வு இன்று பிற்பகல் 3 மணிக்கு பாடசாலையில் இடம்பெறவுள்ளது.

சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெறும். இந்த நிகழ்வில் யாழ்.இந்திய துணைத்தூதரக அதிகாரி க.மகாலிங்கம் கலந்துகொள்கிறார்.

இலங்கையில் இருந்து ஒலிம்பிக் போட்டியில் ஆறு வீரர்கள் பங்குபற்றுகின்றனர். துஷ்யந்தன் ஒருவரே தமிழராவார்.

நீண்ட காலத்தின் பின்னர் தமிழ் பகுதியில் இருந்து ஒலிம்பிக் போட்டியில் பங்குபற்றும் முதல் மாணவர் இவராவார்.

100 மீற்றர் போட்டியில் இவர் பங்கேற்கவிருக்கிறார்.

இந்தப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்ட பின்னர் இவர் யாழ்.பல்கலைக்கழகம், மாத்தறை விளையாட்டரங்கு ஆகியவற்றில் பயிற்சிகளைப் பெற்று வந்தார். (ஒ-ஐ)

### யாழ்.துரையப்பா விளையாட்டு மைதானத்தில் உதைபந்தாட்டம்:

# கிளிநொச்சி - மன்னார் அணியினர் கைகலப்பு; 6 பேர் காயம்



யாழ்ப்பாணம், ஜூன் 15

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் நடத்தப்படும் மாவட்ட அணிகளுக்கு இடையிலான உதைபந்தாட்டப் போட்டியில் நேற்றைய ஆட்டத்தின்போது கிளிநொச்சி - மன்னார் மாவட்ட அணிகளுக்கு இடையில் ஏற்பட்ட மோதலால் 6 பேர் காயமடைந்ததுடன் கதிரைகளும் சேதமாக்கப்பட்டன.

நேற்றுக் காலை யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

கிளிநொச்சி - மன்னார் மாவட்ட அணிகள் மோதிய போட்டியின் போது மன்னார் அணி 2 கோல்களைப் போட்டு முன்னிலையில் இருந்தது. போட்டி முடிவடைவதற்கு 15 நிமிடங்கள் இருக்கையில் இரு அணி வீரர்களுக்கும் இடையில் ஏற்பட்ட வாய்த் தர்க்கம் கைகலப்பாக மாறியது.

இதனை அடுத்து கிளிநொச்சி மாவட்ட அணி சார்பாக வெளியில் பார்வையாளர்களாக நின்றவர்கள் மைதானத்தில் இறங்கி மன்னார் வீரர்களைத் தாக்கினர் என்று கூறப்பட்டது.

இந்தக் கைகலப்பின்போது மன்னார் வீரர்கள் 4 பேரும் கிளிநொச்சி மாவட்ட வீரர்கள் இருவரும் காயமடைந்தனர். கைகலப்பில் மைதானத்தில் இருந்த கதிரைகளும் உடைத்து நொறுக்கப்பட்டன.

சம்பவத்தை மைதானத்தில் நின்ற பொலிஸாரும் மேலதிகமாக அழைக்கப்பட்ட பொலிஸாரும் இணைந்து கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். கிளிநொச்சி மாவட்ட வீரர்களை மைதானத்தை விட்டு வெறியேற்றப்பட்டனர்.

தொடர்ந்து ஏனைய போட்டிகள் சுமுகமாக நடைபெற்றன. (ஒ-10-86-23)

# நிகழ்வுகள்

## மணி விழா நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூன் 15

ஓய்வுபெற்ற யாழ். வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி அருளேஸ்வரி வேதநாயகத்தின் மணிவிழா நிகழ்வு இன்று புதன்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலையின் அதிபர் வீ.கணேசராசா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா, யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் செல்வி வசந்தி அரசரட்ணம் மற்றும் மதகுருமார்கள், கல்விமான்கள் உட்படப் பலர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்த நிகழ்வில் மூன்று மதத் தலைவர்கள் ஆசிகளை வழங்கவுள்ளனர். (ற-313)

## பழைய மாணவர் சங்கக் கூட்டம்

தென்மராட்சி, ஜூன் 15

மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கக் கூட்டம் இன்று புதன்கிழமை பிற்பகல் 4 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் வித்தியாலய அபிவிருத்தி தொடர்பாக ஆராயப்படவுள்ளதால் சங்க உறுப்பினர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அதிபர் வே.விநாயகமூர்த்தி அறிவித்துள்ளார். (ற-207)

## கிராம அபி.சங்க அங்குரார்ப்பணம்

தென்மராட்சி, ஜூன் 15

தென்மராட்சி கிழக்கு கரம்பகம் கிராம அபிவிருத்திச் சங்கப் புனரமைப்பும் மாதர் கிராம அபிவிருத்திச் சங்க அங்குரார்ப்பணமும் நாளை வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு கரம்பகம் அ.த.க. பாடசாலை மண்டபத்தில் பிரதேச கிராம அபிவிருத்தி அலுவலர் தலைமையில் நடைபெறவுள்ளது. (ற-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழினப் படுகொலையை மூடி மறைக்கும் தீவிர முயற்சியில் இலங்கை அரசு!

இலங்கையில் யுத்தக்குற்றம் இடம்பெற்றதாகக் கூறப்படும் சனல்-4 தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்ட காணொளிகள் டிஜிட்டல் தொழில்நுட்ப முறையினால் உருவாக்கப்பட்டவை. என்று ஆஸ்திரேலியாவின் சிட்னி நகர ஐ.பி.ரி.வி. சிஸ்டம்ஸ் நிறுவனத்தின் பணிப்பாளரும், டிஜிட்டல் வீடியோ பயிற்சிப் பிரிவின் முன்னாள் தலைவருமான சிறி ஹேவவித்தாரண தெரிவித்துள்ளார்.

சித்திரவதைகள் மற்றும் படுகொலைகள் தொடர்பான ஐக்கிய நாடுகளின் விசேட பிரதிநிதி கிறிஸ்டோபர் ஹெய்ன்ஸ் அண்மையில் ஜெனீவாவில் இடம்பெற்ற மனிதஉரிமைகள் மாநாட்டின் போது சனல்-4 வெளியிட்ட காணொளிகளை காட்சிப் படுத்தினார்.

நிராயுதபாணிகளான தமிழ் மக்கள் இலங்கை இராணுவத்தினரால் கொல்லப்படும் காணொளிகள் உண்மையானவை என்று அமெரிக்கக் காணொளி நிபுணர்கள் உறுதிப்படுத்தியுள்ளதாக கிறிஸ்டோபர் ஹெய்ன்ஸ் தெரிவித்தார்.

இதுகுறித்து ஹேவவித்தாரண கருத்து தெரிவிக்கையில், வாடகைக்கு அமர்த்தப்பட்ட நிபுணர்கள் எந்தவித ஆதரமுமின்றி காணொளியில் அடங்கியுள்ள விடயங்கள் உண்மையானது எனக்கூறுவது புதுமையான விடயமாகும்.

இவர்களை விசேட நிபுணர்களாக அறிமுகப்படுத்துவது நகைப்புக்குரிய ஒன்றாகும் என்று குறிப்பிட்டார்.

அண்மையில் வெளியிடப்பட்ட காணொளிகள், ஏற்கனவே, காணொளிகளை தயாரித்தவரினால் அவற்றில் சில பகுதிகளைக் கொண்டு உருவாக்கப்பட்டவையாகும்.

சனல் - 4 தொலைக்காட்சியின் ஒளிபரப்பப்பட்ட காணொளிகள் கையடக்க தொலைபேசியில் பெறப்பட்டவையல்ல.

இவற்றை ஆராய்ந்து பார்க்கும்போது இவை புகைப்படக் கருவியினாலேயே பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும் என்று ஹேவவித்தாரண மேலும் தெரிவித்தார்



இணையச் செய்திகள்

# அமெரிக்காவில் 17ஆம் திகதி முதல் 10ஆவது தமிழ் இணைய மாநாடு

10ஆவது தமிழ் இணைய மாநாடு, அமெரிக்காவின் பிலடெல்பியாவில் உள்ள பென்சில்வேனியாப் பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ளது. ஜூன் மாதம் 17ஆம் திகதி தொடங்கி 19ஆம் திகதி வரையான 3 நாள்கள் நடைபெறும் இந்த மாநாட்டில் 10 நாடுகளில் இருந்து தமிழ் அறிஞர்கள் பங்கேற்கின்றனர்.

கலிபோர்னியா மாநிலத்தில் உள்ள பதிவு பெற்ற தன்னார்வலர் நிறுவனம் சார்பில் நடத்தப்படும் இந்த மாநாட்டில் டெலவர் பெருநிலத் தமிழ்ச்சங்கத்தின் சிறுவர் திருக்குறள் போட்டி நடக்கிறது. கணித்தமிழ்ச்சங்க உறுப்பினர்களின் குறுந்தகடுகளும் பார்வைக்காக வைக்கப்படுகிறது.

இந்த மாநாட்டில் இலங்கை, சிங்கப்பூர், மலேசியா, ஆஸ்திரேலியா, இங்கிலாந்து, கனடா, அமெரிக்கா, ஜேர்மனி, சுவிற்சர்லாந்து உள்ளிட்ட பல நாடுகளிலிருந்து அறிஞர்கள் கலந்து கொண்டு ஆய்வுக்கட்டுரைகளைச் சமர்ப்பிக்கவுள்ளனர். இணையத்தில் தமிழ் வளர்ச்சி அடைந்துள்ள விதம், தமிழ் மென்பொருள்கள் பற்றி விவாதிக்கின்றனர்.

மேலும் மு.அனந்தகிருட்டினன், பொன்னவைக்கோ, பென்சில்வேனியா பல்கலை தெற்கு ஆசிய துறைத்தலைவர் தாவூத் அலி, பேராசிரியர் ஹெரால்ட் ஷிப்மன், பேராசிரியர் அண்ணாமலை, பிரெஞ்சு பேராசிரியர் ஏ.முருகையன், தமிழக தகவல் தொழில்நுட்பத்துறை செயலாளர் சந்தோஷபாபு, கனடா பேராசிரியர் செல்வகுமார், ஈழத்தின் சிவா அனுராஜ் உள்ளிட்டோரும் கலந்து கொள்கின்றனர்.

இந்த தகவலை அமெரிக்கா பன்னாட்டுக்குழு தமிழ் இணையம் சார்பில் வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஐ.நா. நிபுணர் குழு அறிக்கைக்கு இலங்கை அரசு பதிலளிக்க வேண்டும்!

ஐக்கிய நாடுகள் சபையின் நிபுணர்குழு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்கு இலங்கை அரசாங்கம் பதிலளிக்க வேண்டும் என்று பிரிட்டிஷ் தொழிற்கட்சியின் நிழல் வெளிவிவகாரச் செயலாளர் டக்ளஸ் அலெக்சாண்டர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இலங்கையின் அண்மைய அபிவிருத்திகள் தொடர்பாகவும், ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத்தொடரில் நவநீதம்பிள்ளை உரையாற்றியது தொடர்பாகவும் வெளியிட்டுள்ள அறிக்கையில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இறுதிக்கட்டப் போரில் 2009ஆம் ஆண்டு ஜனவரி முதல் மே மாதத்துக்கிடையிலான காலப் பகுதியில் அரச படைகளும், தமிழீழ விடுதலைப் புலிகளும் பெரும் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டுள்ளனர் என நிபுணர்குழு அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

மனிதஉரிமை மீறலாக அமைந்துள்ளதுடன் போர்க்குற்றத்துக்கு இட்டுச் செல்லக்கூடியது என்று அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஐ.நா அறிக்கையில் கூறப்பட்டுள்ள விடயங்களுக்கு அரசு பதிலளிக்கவேண்டும். அதே வேளை அறிக்கையில் கூறப்பட்டுள்ள பரிந்துரைகளையும் கவனத்தில் கொள்ளவேண்டும்.

அரசின் சொந்த விசாரணைக் குழுவான கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவினது நம்பகத்தன்மை குறித்து பல கருத்துக்கள் வெளியிடப்பட்டுள்ளன.

எனவே இந்த ஆணைக்குழு அனைத்துலகப் பிரதிநிதிகளையும் உள்வாங்கிக்கொள்ள வேண்டும். ஏற்கனவே கால எல்லை நீடிக்கப்பட்டுள்ள இந்த வருடம் நவம்பருக்கு முன்னர் தனது அறிக்கையை வெளியிட வேண்டும்.

இந்த அறிக்கை ஐ.நா நிபுணர் குழு பரிந்துரைத்துள்ள விடயங்களை உள்ளடக்கியதாகவும், நம்பகத்தன்மை கொண்டதாகவும், வெளிப்படையானதாகவும் இருக்க வேண்டும்.

உண்மையான இன நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதுடன், பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நீதி கிடைக்க வழிசெய்து, போர்க் குற்றம் புரிந்தவர்கள் நீதியின் முன் நிறுத்தப்பட்டால் மாத்திரமே இலங்கையில் அமைதியைக் கட்டியெழுப்ப முடியும் என்று அந்த அறிக்கையில் அவர் குறிப்பிட்டுள்ளார்

உதயன் வெளியீட்டகத்தின்

இரு சஞ்சிகைகளின் வெளியீட்டு விழா

இந்நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு தங்களை அன்புடன் அழைக்கிறோம்

உதயன் கேட்போர் கூடத்தில்
இன்று 15-06-2011 புதன்கிழமை
பி.ப 3.00 மணிக்கு நடைபெறவுள்ளது.



பல்சுவை மாத இதழ்

சிறுவர்களுக்கான மாத இதழ்

உங்கள் பிரதிகளுக்கு முகவர்களிடம் இப்போதே பதிவு செய்யுங்கள்

உதயன் வெளியீட்டகம்
361. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாசையூர் அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்தப் பெருவிழா நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றது. தேர்ப்பவனியும் புனிதருடைய திருச்சொரூப ஆசீரும் இடம்பெறுகின்றன. (23-135)

# வடக்கு-கிழக்கில் இராணுவ ஆட்சி உடனடியாகக் களையப்பட வேண்டும்

## இந்தியக் குழுவிடம் ஆனந்தசங்கரி வலியுறுத்து

கொழும்பு, ஜூன்.15

வடக்கு-கிழக்கில் இராணுவ ஆட்சி உடனடியாகக் களையப்படவேண்டும். இந்த இராணுவ ஆட்சியைத் தமிழ் மக்கள் விரும்பவில்லை.

இலங்கைக்கு விஜயம் செய்த இந்திய அரசின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன், நிரூபமா ராவ் மற்றும் பிரதீப் குமார் ஆகியோர் அடங்கிய தூதுக் குழுவை வீ.ஆனந்த சங்கரி, த.சித்தார்த்தன் மற்றும் தி.சிறீதரன் ஆகியோர் சந்தித்த போது இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இந்த சந்திப்பின்போது வலியுறுத்தப்பட்ட விடயங்கள் வருமாறு:

* இனைப்பிரச்சினைக்குத் தீர்வு காணப் பல்வேறு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ள போதிலும், பலரின் ஆதரவைப் பெற்றுள்ள எனது இந்திய முறையிலான தீர்வுத் திட்டத்தை, திருப்திகரமான ஓர் தீர்வாக ஏற்றுக்கொள்ளலாம். அரசு ஒற்றையாட்சி முறையையே தொடர்ந்து வற்புறுத்தி வந்தாலும் அத்தகைய ஓர் தீர்வு எம்மக்களுக்கு ஏற்புடையதாக ஒரு போதும் அமையாது.

* பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் சிறு குற்றங்களுக்காக விசாரணை இன்றி தடுத்து வைக்கப்பட்டுள்ள பல நூற்றுக்கணக்கான இளைஞர்களை உடனடியாகவே நீதிமன்றின் முன் நிறுத்த வேண்டும் அன்றேல் விடுதலை செய்யப்படவேண்டும்.

* விரைவில் விடுவிக்கப்படுவர் என அரசு உறுதியளித்தமையால் புலிகளுடன் தொடர்பு ஏதேனும் வைத்திருந்தவர்கள் அரசின் வேண்டுகோளுக்கு அமைய தாமாக முன்வந்து ஆயிரக்கணக்கான இளைஞர்கள் சரணடைந்தனர். அவர்கள் அனைவரும் விடுதலைப்புலிகள் என முத்திரை குத்தப்பட்டு புனர்வாழ்வு மையங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் எவர் மீதும் குற்றம் இருப்பின் அவர்களை மட்டும் நீதிமன்றத்தின் முன்னிறுத்தி ஏனையவர்களை உடனடியாக விடுவிக்க வேண்டும். தற்போதுள்ள அபிவிருத்தி வேலைகளில் மிகக் குறைவான உள்ளூர் வாசிகளே பங்குபற்ற அனுமதிக்கப்பட்டுள்ளனர். வெளிநாட்டு உதவியுடன் செயற்படுத்தப்படும் திட்டங்கள், அல்லது அவை போன்றவற்றில் உள்ளூர் வாசிகளின் பங்களிப்பை உறுதிப்படுத்த வேண்டும். அரச காணிகளுக்கு உறுதிப்பத்திரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இடம்பெயர்ந்த மக்கள் முழுமையாக தத்தமது காணிகளுக்கு இன்னும் போய்ச் சேரவில்லை. இந்த நிலையில் உறுதிகள் காணிகளுக்கு வழங்குவது பல்வேறு பிரச்சினைகளை உருவாக்கும். சொந்தக்காரர்கள் தமது காணிகளை அடையாளம் கண்டு குடியேறும் வரை உறுதிகள் வழங்கப்படுவது நிறுத்தப்பட வேண்டும்.

* அவசரகாலச்சட்டம் உடனடியாக வாபஸ் பெறப்பட வேண்டும்.

* உள்ளூர் மற்றும் வெளிநாட்டு அரச சார்பற்ற தாபனங்கள் மீண்டும் செயற் பட அனுமதிக்க வேண்டும்.

* இனம் காணப்படாத பலருக்கு பெறுமதிமிக்க அரச காணிகள் வழங்கப்படுகின்மை தெளிவாகத் தெரிகின்றது. வடக்கு, கிழக்கில் பெறுமதி மிக்க பல காணித்துண்டுகள் வெளியாருக்கு முறைதலை இன்றி கொடுக்கப்படுவது உள்ளூர் மக்களுடன் பெரும் பிரச்சினைகளை ஏற்படுத்தும்.

* மற்றைய ஏழு மாகாணங்களைப் போலல்லாது வடக்கு கிழக்கு நிர்வாகங்களை உரிய அதிகாரிகளிடமும் அப்பகுதி மக்களிடமும் விட்டு விடாமை துர் அதிர்ஸ்டமே. இப்பகுதி மக்களை அரசு ஒன்றும் தெரியாத ஆதிவாசிகள் போல் நடத்தி உள்ளூர் மக்களின் கருத் துக்களையும் பெறாமல் அவர்களின் உதவிகளையும் பெறாமல், அரசு பொறுக்கிஎடுக்கும் ஒருசில கையாள்களை வைத்து தனது செயற்றிட்டங்களை, தமது விருப்பம் போல் நிறை வேற்றுகின்றது. இது தவிர்க்கப்பட வேண்டும். (த)

# திஸ்ஸ, நுவர வாவிகளில் பக்தர்கள் நீராடத் தடை

கொழும்பு, ஜூன் 15

அனுராதபுரத்துக்கு வரும் பக்தர்கள் அங்குள்ள திஸ்ஸ வாவியிலும் நுவர வாவியிலும் நீராடுவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த வாவிகளில் உள்ள தண்ணீர் குடிப்பதற்கு பாவிக்கப்படுவதனால் குளிப்பதன் மூலம் நீரை அசுத்தம் செய்வதைத் தடுக்கவே இந்தத் தடை விதிக்கப்பட்டதாக அனுராதபுர பிராந்திய நீர்ப்பாசனப் பணிப்பாளர் வசந்த பண்டார பளுகஸ்வேவ தெரிவித்தார்.

இது சம்பந்தமாக அனுராதபுரம் மகா நாயக்க தேரர் மற்றும் பிரதேச செயலாளர் ஆகியோரிடமும் கலந்தாலோசித்த பின்பே இந்தத் தடை முடிவு எடுக்கப்பட்டது.

பக்தர்கள் நீராடுவதற்கு பசவக்குள நாச்சாதுவ, ராஜாங்கனை, மஹகதைராவ, புளியங்குளம் ஆகிய குளங்களைப் பயன்படுத்தலாம் என அவர் தெரிவித்தார்.

நீராடுவதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ள இந்தக் குளங்களில் நீர் மட்டம் அதிகரிப்பதனால் நீராடுவதற்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளை பக்தர்கள் பின்பற்றுவது அவசியம் என அவர் மேலும் தெரிவித்தார். (ச-5)

## மரண அறிவித்தல்



### விஸ்வலிங்கம் சுந்தரலிங்கம்

சாவகச்சேரி, சங்கத்தானையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட விஸ்வலிங்கம் சுந்தரலிங்கம் 11.06.2011 சனிக்கிழமை அன்று அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விஸ்வலிங்கம்- செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும் கமலாம்பிகையின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான கமலாம்பிகை, சிவசோதி, மனோன்மணி மற்றும் துரைராஜா (ஜேர்மனி), சிவராஜா (சுவிஸ்), கனகாம்பிகை (இந்தியா), தனலட்சுமி (கொழும்பு), பரமேஸ்வரி (சுவிஸ்), யோகலிங்கம் (மல்லாவி), சக்திவடிவேல் (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதர னும் நேமிராஜ், மதிநாத், கிரிசாந் (U.K), பிருந்தாபன் பிருந்திகா ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.06.2011) புதன்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பகல் ஒரு மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பசுபதியார் வீதி,
சங்கத்தானை,
சாவகச்சேரி.

தகவல்:
குடும்பத்தினர்.


## மணமகன் தேவை

இந்து கௌரவ குடும்பம் வயது 26, கல்வியியற் கல்லூரி ஆசிரியை, நட்சத்திரம் கார்த்திகை 4, 3 சுற்று கிரக பாவம் 25, லக்கினம் மிதுனம், சூரியன் செவ்வாய் 12 ஆம் வீட்டில், வயது வித்தியாசம் 5 வரை சமதராதரம் அல்லது அதற்கு மேல், சீதனம், வீடு, தோட்டம், வயல், ரொக்கம். வலிகாமம் அல்லது தென்மராட்சி விரும்பத்தக்கது.

மே.பா.விளம்பர இல. 4152, உதயன் பணிமனை. 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## வேலையாள்கள் தேவை

யாழ்ப்பாணம், தெல்லிப்பழை, குடத்தனை, அம்பன் ஆகிய பகுதிகளில் வீதி வேலை செய்வதற்கு தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், மேற்பார்வையாளர்கள், கூலியாள்கள், உழவு இயந்திர சாரதிகள் ஆகியோர் உடன் தேவை.

தொடர்பு: மாஸ்டர் பில்டர்ஸ்
தொ.பே: 0771098600, 0772301447

## CNNP GROUP
## Nation Popular Travels & Tours
பிரபல்யமான நேசன் சுற்றுலாவும் போக்குவரத்தும்
### யாழ்.கிளை திறப்புவிழா

* திகதி: இன்று (15.06.2011) புதன்கிழமை
* நேரம்: காலை 9.30 மணி
* இடம்: #82, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

திறப்புவிழாவைச் சிறப்பிக்கும் பிரமுகர்கள்:-

T.V.மகாலிங்கம் (இலங்கைக்கான இந்தியத்துணைத் தூதர், யாழ்ப்பாணம்.)
திரு. முருகேசு சந்திரகுமார் (நாடாளுமன்ற உறுப்பினர், யாழ்மாவட்டம்)
திரு. மாவை சேனாதிராஜா (நாடாளுமன்ற உறுப்பினர், யாழ்ப்பாணம்)
திரு.க.சுப்பிரமணியம் (ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதி)
திரு.மு.திருநாவுக்கரசு (ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதி)
திருமதி R.மோகனேஸ்வரன் (உதவித் திட்டப்பணிப்பாளர், யாழ்.செயலகம்)
திரு.T.புவனேந்திரம் (முகாமையாளர்- இலங்கை வங்கி அச்சுவேலிக் கிளை)
திரு.B.காண்டீபன் (சவல் ஜெட் பணிப்பாளர், சக்தி எவ்.எம்)
திரு.K.ஸ்ரீதர் (முகாமையாளர், இந்திய வங்கி, யாழ்ப்பாணம்)

நிகழ்ச்சித் தொகுப்பு: திரு.K.சூரியா (சூரியன் Fm)

வாடிக்கையாளர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(CNNP குழுமத்தினர்)

(49,19,50)

## Computer Express
Institute of Information Technology

பாடசாலை மாணவர்களுக்கும், கணனி ஆர்வலர்களுக்குமான தொழில்சார் கற்கைநெறிகள் ஆரம்பமாகின்றன....

* Dip. in computer science. 4 Months 1000/=
* Dip. in web page Designing. 4 Months 1000/=
* Dip. in Graphic Designing. 4 Months 1000/=
* Dip. in Desk top publishing. 4 Months 1000/=
* Dip. in Hardware Engineering. 3 Months 1000/=
* Dip. in Auto CAD. 3 Months 1000/=
* Dip. in MicroSoft Office. 3 Months 1000/=
* Dip. in Acc.Package (MYOB, Accpac, Q book) 3 Months 1000/=
* Dip.in programming language
* Honours Dip. in computer science. 5 Months 1000/=

Advances Courses
Diploma in Video Editing 4Months 1000/=
Diploma in Multimedia 4Months 1000/=

பதிவுகளுக்கு முந்துங்கள்

மேலும் எமது நிறுவனத்தில்...
Fast track Courses ஆக
1Week course / 1 Month Course
Diploma in Graphic Designing
Diploma in Video Editing
Diploma in Hardware Engineering.
Diploma in Acc.Package.
Monday to Friday 9Am to 3.30Pm
Course Fee 1000/=

Batch I -15-06-2011 9Am or 3pm Batch II -17-06-2011 9Am or 3pm
Batch III-18-06-2011 9Am or 3pm Batch IV -19-06-2011 9Am or 3pm

Tally புதிய பிரிவுகளும் ஆரம்பமாகின்றன

No.15 Sirampiyady lane, off Stanly Road, (Cosy Hotel 2nd floor) Jaffna.
021 2223250, 0777222422, 0774907444


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# நோர்வேக்குத் திடீர் திக்விஜயம் ஏனோ?

நோர்வே நாட்டுடன் மீண்டும் மிக நெருங்கிய அளவில் அரசியல் நட் புறவைப் பேணுவதற்கு இலங்கை அரசாங்கம் இப்போது துடியாய்த் துடிக்கிறது.

போர் நிகழ்ந்த காலத்தில், அந்த நாட்டை தமிழர்களுக்கு ஆதரவான தேசமாகவே மஹிந்த அரசாங்கம் பார்த்தது. இத்தனைக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவி சந்திரிகா பண்டாரநாயக்காவின் விருப் பத்துடனும் இணக்கத்துடனுமே நோர்வேயின் சமாதானத்துக்கான அனுசரணைப் பணி ஆரம்பமாகியது.

இதற்கு முன்னதாக 1999 ஆம் ஆண்டு டிசெம்பரில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் சந்திரிகா பண்டாரநாயக்கா மீண்டும் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார். 2001 ஆம் ஆண்டு டிசெம்பரில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் ஐக் கிய தேசியக் கட்சியின் அரசின் பிரதமராக ரணில் விக்கிரமசிங்க பதவி ஏற்றார்.

நிறைவேற்று ஜனாதிபதி ஒரு கட்சியைச் சேர்ந்தவராகவும், ஆளும் தரப்பு மற்றொரு கட்சியாகவும் இருந்ததால், இரண்டு சாராருக்கும் இடையில் அரசியல் மற்றும் நிர்வாகம் சம்பந்தப்பட்ட தகராறுகளும் பிணக்குகளும் விவகாரங்களும் ஊதிப்பெருத்தன.

அதன் எதிரொலியாக, 2004 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் ஜனாதிபதி சந்திரிகா நாடாளுமன்றத்தைக் கலைத்தார். அதே வருடம் ஏப்ரல் மாதம் புதிய பொதுத் தேர்தல் நடைபெற்று ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு ஆட்சி அமைத் தது. மஹிந்த ராஜபக்ஷ பிரத மரானார். அதன் பின்னர் 2005 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் ரணில் தோல்வியுற மஹிந்த ராஜபக்ஷ முதலாவது தடவையாக ஜனாதிபதியாகப் பதவி ஏற்றிருந்தார். அதுவரை அவரும், அவர் சார்ந்த அரசும் நோர்வே நாட்டு டன் சராசரி நட்புறவு பாராட்டும் நிலையையே பேணினர் எனலாம். எனினும்-

2000ஆம் ஆண்டு நவம்பரில் வன்னி சென்ற நோர்வேத் தூதுவர் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரனுடன் பேச்சு நடத்தியமை, அதனைத் தொடர்ந்து 2002 ஆம் ஆண்டு பெப்ரவரியில் ரணில் - பிரபா போர் நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்தானமை என்ப வற்றை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியாலும் அதன் தோழமைக் கட்சிகளா லும் சீரணிக்க முடியவில்லை.

2005 ஆம் ஆண்டில் ஜனாதிபதியாகப் பதிவியேற்ற மஹிந்தவின் அரசு 2 வருடங்களின் பின்னர், 2008 ஆம் ஆண்டு ஜனவரியிலேயே போர் நிறுத்த ஒப்பந்தத்தில் இருந்து விலகுவதாக உத்தியோகபூர்வமாக அறிவித்தது.

அதனோடு -

நோர்வே அனுசரணையுடன் முன்னெடுக்கப்பட்ட சமாதான முயற்சிகள் முறிந்தன; முடிவுக்கு வந்தன. நோர்வே தலைமையிலான போர் நிறுத்தக் கண்காணிப்புப் பணியும் நிறுத்தப்பட்டது.

அன்றிலிருந்து நோர்வேயைஇலங்கை அரசு தூர விலக்கி வைத்தது. அந்த நாட்டில் இருந்து பெறக்கூடிய பொருளாதார மற்றும் துறை சார் உதவி களைப் பெறுவதற்காக அந்த நாட்டுடனான ராஜீக உறவுகளை முறிக்காமல் பட்டும் படாமலும் செயற்பட்டு வருகின்றது என்றே சொல்லலாம். மொத்தத்தில் இரு நாடுகளுக்கும் இடையில் இறுக்கமான, நெருக்கமான உறவு இல்லை. பெயருக்கு மட்டுமே உறவு.

வன்னிப் போர் முடிவுற்ற பின்னர், மெனிக்பாம் மற்றும் முட்கம்பிகளுக்குள் அடிமைகள் போன்று அடைத்து வைக்கப்பட்ட தமிழ்ப் பொது மக்களை விடுவிக்குமாறு புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்களால் முதன் முதலில் மிகப்பெரிய ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்தி, அரச பிரதிநிதிகளிடம் மகஜர் கையளிக்கப்பட்டது நோர்வே நாட்டிலேயே ஆகும்.

அதன் பின்னரே ஏனைய வெளிநாடுகளில் புலம்பெயர் உறவுகளால் அடுத்தடுத்து ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள், நீண்ட தூரப் பாதயாத்திரைகள் என்று இலங்கை அரசுக்கு எதிரான ' போராட்டங்கள்' நடத்தப்பட்டன. தமிழ் மக்களுக்கு எதிரான உரிமைப் பறிப்புகளும் ஒடுக்கு முறைகளும் போர் அநீதியும் வெளிச்சம் போட்டுக் காட்டப் பட்டன.

அதன் காரணமாகவும், இறுதிப்போரின் கடைசிக்கட்டத்தில், தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய தலைவர்கள் சரணடைய வேண்டுகோள் விடுத்த விவகாரத்தில், நோர்வே அமைச்சர் எரிக்சொல்ஹெய்ம் முயற்சித்தார், சம்பந்தப்பட்டவர் என்பதாலும் இலங்கை அரசு அவரையும் நோர்வே அர சினையும் அந்த நாட்டினையும் தனது ராஜீகத்துறை நிகழ்ச்சி நிரலில் மிகப்பெரும் தொலைவில் வைத்தமை சர்வதேச இரகசியம்.

ஆனால் இப்பொழுது, நோர்வேயுடன் மிகநெருக்கமான உறவைப் புதுப்பித்துக்கொள்ள இலங்கை அரசு அளவுக்கு விஞ்சிய அக்கறை காட் டுகிறது! நோர்வே அரசுடனான உறவுகளைப் புதுப்பிப்பதில் ஜனாதிபதி மஹிந்த ஆர்வம் கொண்டுள்ளார் - என்று அமைச்சர் ராஜித சேனாரத்ன முதலில் தாரை, தம்பட்டை ஒலித்திருக்கிறார். அதன் செயல் வடிவமாக அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தலைமையில் அமைச்சர்கள் குழு ஒன்று நோர்வேக்குச் செல்லவுள்ளது. நோர்வேக்கும் இலங்கைக்கும் இடையில் நிலவிய முரண்பாடுகளை நீக்கி, நல்லு றவைக் கட்டிஎழுப்புவதே இந்த விஜயத்தின் நோக்கம் என்று தெரிவிக் கப்பட்டுள்ளது. இலங்கை யில் மேற்கொள்ளப்படும் மீள்குடியேற்ற, மற்றும் நல்லிணக்க நடவடிக் கைகள் குறித்து நோர்வே அரசுக்கு விளக்கமளிப்பதும் அமைச்சர்கள் தூதுக்குழுவின் நோக்கம் என்றும் அரச தரப்பு முதன்மைப்படுத்துகிறது.

அதற்கும் மேலாக, அரசாங்கத்துக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் நடைபெற்று வரும் பேச்சுவார்த்தையின் முன்னேற்றம் குறித்து, நோர்வே அரசுக்குத் தெரிவிப்பது அமைச்சர்கள் தூதுக்குழுவின் மிகப் பிரதான நோக்கம் என்றும் அரச தரப்பு பிரலாபித்துள்ளது.

அரசு - கூட்டமைப்புப் பேச்சில் அப்படி என்ன சாதனை நடத்தி உள்ளது அது? 13 ஆவது அரசமைப்புச் சட்டத் திருத்தத்தில் உள்ள காணி, பொலிஸ் அதிகாரங்களையும் வழங்க மாட்டோம் என்று 'ஆனானப்பட்ட' இந்தியாவிடமே உலுக்கிக் கூறிவிட்டோம்; நீங்களும் எங்கள் நிலைப் பாட்டையே விழுங்கவேண்டும் என்று விநயமாகக் கேட்பதற்காகவா! உங்கள் நாட்டில் வாழும் புலம்பெயர் தமிழர்கள் எங்கள் நிலைப்பாட்டுக்கு எதிரா கக் கிளம்பவிடாதீர்கள் என்று கேட்பதற்காகவா?

உங்கள் நாட்டில் வாழும் புலம்பெயர் தமிழர்களில் மிகப் பலர் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள். அவர்களே தருஸ்மன் அறிக்கையை தூக்கிப் பிடிப்பதில் முன்னோடிகளாக நின்று, சர்வதேச நாடுகள் பலவும் அதனை ஆதரிக்கத் தூண்டியவர்கள் அவர்களைச் சற்று அடக்கி வையுங்கள். வடக்கு, கிழக்கின் அபிவிருத்தி, மீள்குடியேற்றம் போன்ற திட்டங்களுக்கு எமது அரசு அவர்களிடம் நிதி திரட்ட அனுமதியுங்கள். அவர்களை மன மாற்றம் செய்யுங்கள். நாம் இப்போது உங்கள் நாட்டின் பெரு அபிமானிகளாக மாறி விட்டோம்; அதற்கு பிரதி உபகாரம் செய்வீர்கள் என்ற முழு நம்பிக்கையுடன் வந்திருக் கிறோம்; இல்லை என்று மட்டும் தயவு செய்து சொல்லி விடாதீர்கள்! என்று நெய் தடவுவதற்காகவா இந்த விஜயம்!

அமைச்சர் சொல்ஹெய்ம் உட்பட்ட அரச பிரதானிகளிடம் தமது பக்கம் சாயுமாறு விண்ணப்பம் செய்வதற்காக வா, மனம் மாற்றும் முயற்சியாகவா இலங்கை அமைச்சர் கள் தூதுக்குழு ஒஸ்லோவுக்கு திக் விஜயம் செய்கிறது? இலங்கைத் தமிழர்கள் பொறுத் திருந்து பார்க்க வேண்டும்...?

# இந்திய மீனவர்களின் அத்துமீறல் வட கடலில் இனிமேல் இருக்காது

## காங்கேசன்துறைக் கடற்படைத் தளபதி உறுதி

யாழ்ப்பாணம், ஜூன் 15

இலங்கைக் கடற்படையினர் தற்போது தீவிரமான ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டு கண்காணித்து வருகின்றனர். இதன் காரணமாக வடகடல் பகுதியில் இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் இனிமேல் இருக்காது.

இவ்வாறு உறுதியளித்துள்ளார் காங்கேசன்துறை கடற்படைத்தளபதி. வடமராட்சி வடக்கு கடற்தொழில் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் அ. எமிலியாம் பிள்ளையுடனான சந்திப்பின் போதே கடற்படைத் தளபதி இந்த உறுதி மொழியை வழங்கியுள்ளார்.

இந்தச் சந்திப்பு கடந்த ஞாயிற்றுக்கிழமை காங்கேசன்துறை கடற்படை தலைமையகத்தில் இடம்பெற்றுள்ளது. இந்தச் சந்திப்புத் தொடர்பாக அ. எமிலியாம் பிள்ளை தெரிவித்தவை வருமாறு:-

வடகடல் பகுதியில் இந்திய மீனவர்களின் அத்துமீறலை தடுத்து நிறுத்துவதற்கு காங்கேசன்துறை கடற்படைத் தளபதி நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவித்தார்.

காங்கேசன்துறை முதல் சுண்டிக்குளம் வரையான வட கடற்பகுதியில் இலங்கைக் கடற்படையினர் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளனர் என்றும் கடற்படைத்தளபதி கூறினார்-என்றார்.

(த-14)

# முன்னாள் போராளிகளுக்கு கடனுதவியாக இலங்கை வங்கி இரண்டரை லட்சம் ரூபா

யாழ்ப்பாணம், ஜூன் 15

புனர்வாழ்வு பெற்று விடுவிக்கப்பட்டுள்ள முன்னாள் போராளிகளுக்கு இலங்கை வங்கி ஆகக் கூடியதாக இரண்டரை லட்சம் ரூபா வரையான கடனுதவிகளை வழங்கி வருகின்றது.

இதில் வீட்டுக் கடன்களாக இரண்டரை லட்சம் ரூபாவும், ஏனைய சுயதொழில் முயற்சிக்காக இரண்டரை லட்சம் ரூபாவும் வழங்கப்படுவதாக வங்கியின் உயரதிகாரி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

வங்கியில் கடன் பெறுவோர் பிரதேச செயலாளர் மற்றும் கிராம சேவையாளரின் உறுதிப்படுத்தலுடன் யாராவது இரண்டு ஆள் பிணையுடன் அதனைப் பெற்றுக் கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

நான்கு வீத வட்டியுடன், 10வருடகால ஒப்பந்த அடிப்படையுடனும், அரச ஊழியரின் உறுதிப்படுத்தல் கட்டாய தேவை இன்றியும் முன்னுரிமை அடிப்படையில் இந்தக்கடன் உதவிகள் வழங்கப்படுவதாக அந்த அதிகாரி மேலும் கூறினார்.

புனர்வாழ்வு பெற்று விடுதலையான முன்னாள் போராளிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக இலங்கை வங்கி இந்தக் கடனுதவிகளை வழங்கி வருவதாக அவர் மேலும் கூறினார்.

(த-313)

# 11 அமைச்சுக்களின் பங்களிப்புடன் ஜூன் 20 - 26 டெங்கு ஒழிப்பு வாரம்

கொழும்பு, ஜூன் 15

ஜனாதிபதி செயலகம், சுகாதார அமைச்சு உட்பட 11 அமைச்சுகள் இணைந்து எதிர்வரும் ஜூன் மாதம் 20 ஆம் திகதி முதல் 26 ஆம் திகதி வரை தேசிய டெங்கு ஒழிப்பு வாரத்தை நடைமுறைப்படுத்த உள்ளன.

வடக்கு, கிழக்கு மாகாணங்கள் உட்பட நாட்டின் சகல பாகங்களிலும் தேசிய டெங்கு ஒழிப்பு வாரத்தை நடைமுறைப் படுத்த சகல ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன இதனைத் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் சுகாதார அமைச்சின் குடும்ப நல சுகாதார நிலையத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

தற்பொழுது கொழும்பு, களுத்துறை, கம்பஹா, அம்பாந்தோட்டை, காலி, புத்தளம், மட்டக்களப்பு, இரத்தினபுரி, குருநாகல், திருகோணமலை,மாத்தறை ஆகிய மாவட்டங்கள் டெங்கு அபாயம் காணப் படும் பிரதேசங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

ஆகக் கூடுதலான பாதிப்புக்குள்ளாகி உள்ளது மேல்மாகாணம். இங்கு 78 வீதமான பாடசாலைகளில் டெங்கு அபாயம் ஏற்பட்டுள்ளது.

கல்வி அமைச்சின் ஊடாக இந்தப் பாடசாலைகளின் அதிபர்களுக்கு உரிய அறிவுறுத்தல்கள் விடப்பட்டுள்ளன.

எனினும் அவை கவனத்தில் கொள்ளப்பட்டதாக தெரியவில்லை. இந்தப் பாடசாலை அதிபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க பரிசீலனை செய்யப்பட்டு வருகின்றது.

டெங்கு ஒழிப்புத் திட்டத்துக்கு பொலிஸ் உட்பட முப்படையினரும் ஒத்துழைப்பு வழங்க முன்வந்துள்ளனர்.

சுகாதார அமைச்சு, கல்வி அமைச்சு, சுற்றாடல் துறை அமைச்சு, நிதி அமைச்சு, பாதுகாப்பு அமைச்சு உட்பட பல அமைச்சுகள் இணைந்து செயற்படவுள்ளன - என்றார்.

(த-02)

# கழிவுப்பொருள்கள் கொட்டப்படுவதால் மீண்டும் டெங்கு பரவும் அபாய நிலை

## நல்லூர் பிரதேச சபை விசனம்

யாழ்ப்பாணம், ஜூன் 15

நல்லூர் ஆடிய பாதம் வீதி, பிரப்பங்குளம் ஒழுங்கைப்பகுதிகளில் கழிவுப் பொருள்கள் கொட்டப்படும் நிலை அதிகரித்துள்ளதால் டெங்கு நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

நல்லூர் பிரதேச செயலகத்தில் அண்மையில் இடம்பெற்ற பிரதேச மட்டத்திலான டெங்கு நோய்கட்டுப்பாட்டுக்குழுக் கூட்டத்தில் இவ்வாறு விசனம் தெரிவிக்கப்பட்டது.

நல்லூர் பிரதேச செயலகப்பிரிவு பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் காணப் பிரப்பங்குளம், ஒழுங்கைகளில் கழிவுக் பொருள்கள் அதிகமாகக் கொட்டப்படுகின்றன.

இதனால் நல்லூர் பிரதேசத்தில் கட்டுப்பாட்டில் உள்ள டெங்குநோய் மீண்டும் பரவுவதற்கான வாய்ப்புக்கள் அதிகரித்துள்ளன.

இருந்தும் பிரதேச டெங்கு நோய் கட்டுப்பாட்டுப்பிரிவினரால் பல்வேறு செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்ற போதும் பொதுமக்கள் இதற்குப் பூரண ஒத்து ழைப்பு வழங்கவில்லை.

இதனால் இது தொடர்பாக யாழ் மாவட்ட செயலகம் வீதி அபிவிருத்தி அதிகார சபை ஆகியவற்றுடன் தொடர்புகொண்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ம-3137)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
15 ஜூன் 2011 புதன்கிழமை

### கூட்டுறவுத் துறையை மேம்படுத்த

# வடக்கின் 47 சங்கங்களுக்கு 40 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், ஜூன் 15

வடமாகாணத்தில் உள்ள 47 கூட்டுறவுச் சங்கங்களின் விருத்திக்கும் 40 மில்லியன் ரூபாவைக் கூட்டுறவு அமைச்சு ஒதுக்கியுள்ளது. இந்த நிதியின் மூலம் சங்கங்களின் செயற்பாடுகள் மேம்படுத்தப்படவுள்ளன.

அத்துடன், யாழ்.மாவட்டத்தில் உள்ள அனைத்துச் சங்கங்களினாலும் விற்பனை செய்யப்படும் பொருள்களுக்கு விரைவில் ஒரு சமச்சீரான விலை நிர்ணயம் மேற்கொள்ளப்படும்.

- இவ்வாறு தெரிவித்தார் யாழ். மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே.அருந்தவநாதன்.

யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பணியாளர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று இடம் பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

தற்போது சில சங்கங்கள் இலாபத்துடன் மிகத் திறமையாக இயங்கி வருகின்றன. இந்தச் சங்கங்கள் மீண்டும் பின்நோக்கித் தள்ளப்படுவதை அனுமதிக்க முடியாது. அவற்றை மேலும் இலாபகரமான செயற்பாட்டுக்குக் கொண்டு செல்வதற்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவுள்ளன.

சங்கங்களில் நுகர்ச்சி வியாபாரத்தை அதிகளவில் மேற்கொள்வதற்குப் பணியாளர்கள் அனைவரும் விழிப்பாகப் பணியாற்ற வேண்டும்.

நுகர்ச்சி வியாபாரம் பின்நோக்கிச் சென்றால் பணியாளர்கள் தமது மாதாந்தச் சம்பளத்தைக் கூடப்பெறமுடியாத நிலை ஏற்படும்.

சகல பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் கடனுதவிகள் மூலம் பொருள்களைக் கொள்வனவு செய்வதற்கென புதிய திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தப் புதிய திட்டத்தின் மூலம் சங்கங்களில் சமச்சீரான விலை நிர்ணயத்தை மேற்கொள்ள முடியும் என்பதோடு சங்கங்களும் லாபத்தில் செயற்பட வாய்ப்பு உள்ளது.

கூட்டுறவு அமைச்சு ஒதுக்கிய நிதி மூலம் கடன் அடிப்படையில் சங்கங்களுக்குப் பொருள்கள் விநியோகிக்கப்படும். யாழ்.மாவட்டத்தில் ஒவ்வொரு சங்கத்துக்கும் இந்த நிதியிலிருந்து 10 லட்சம் ரூபா வழங்கப்படும்.

இதற்கென வவுனியாவில் மொத்தப் பொருள்கள் மத்திய நிலையம் ஒன்று கடந்த சனிக்கிழமை ஆளுநரால் திறந்து வைக்கப்பட்டுள்ளது - என்றார். (த-26-135)

# மாகாண சபையின் நிதி ஒதுக்கீட்டில் யாழ்.பாடசாலைகளின் கட்டுமானப் பணி

### வகுப்பறைகள் நூலகங்கள் அமைக்கப்படும்

யாழ்ப்பாணம், ஜூன் 15

வடமாகாண சபையின் நிதி ஒதுக்கீட்டின் யாழ்.மாவட்ட பாடசாலைகள் புனரமைக்கப்படவுள்ளன.

யாழ்.சென்ஜேம்ஸ் மகாவித்தியாலயம், கதிரிப்பாய் சுப்பிரமணிய வித்தியாலயம், பத்தமேனி ரட்ணேஸ்வரி வித்தியாலயம், கொழும்புத்துறை சென். ஜோசப் வித்தியாலயம், ஆனைப்பந்தி மெதடிஸ் மிசன் பாடசாலை, கலட்டி மெதடிஸ் மிசன் பாடசாலை, சண்மார்க்க மகாவித்தியாலயம், கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயம், கொட்டடி நமசிவாய வித்தியாலயம், திருநெல்வேலி றோமன் கத்தோலிக்கப் பாடசாலை, நல்லூர் ஞானோதய வித்தியாலயம், இடைக்காடு மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளின் வகுப்பறைகளும் அச்சுவேலி மத்திய கல்லூரி நூலகமும் புனரமைக்கப்படவுள்ளன.

மேலும் உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம், கொட்டியா புலம் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை, அராலி இந்துக் கல்லூரி ஆகிய பாடசாலைகளுக்கு விஞ்ஞான ஆய்வுகூடம் அமைக்கப்பட உள்ளது.

வடமராட்சியில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி, மேலைப்புலோலி சிவப்பிரகாச வித்தியாலயம், மாணிக்க வாசகர் வித்தியாலயம், நெல்லியடி மெதடிஸ் மிசன் தமிழ்க் கலவன் பாடசாலை, தம்பசிட்டி மெதடிஸ்மிசன் தமிழ்க் கலவன் பாடசாலை, வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி ஆகிய பாடசாலையின் கட்டடங்கள் புனரமைக்கப்பட உள்ளன.

தென்மராட்சியில் கைதடி கலைவாணி வித்தியாலயம், கரம்பை அமெரிக்கன் மிசன் தமிழ்க்கலவன் பாடசாலை, ஆகியவையும் புனரமைக்கப்பட உள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. (ம-319)

## பளை, மாசார் பாடசாலைகளில் புதிய கட்டடங்கள்


யாழ்ப்பாணம், ஜூன் 15

பளை மற்றும் மாசார் பிரதேசத்தில் இயங்கும் இரு பாடசாலைகளிலும் புதிதாக அமைக்கப்படும் வகுப்பறைக் கட்டடத் தொகுதிகள் ஓகஸ்ட் மாதம் திறந்து வைக்கப்படவுள்ளன.

பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலகதுக்கு உட்பட்ட பளை மத்திய கல்லூரி, மாசார் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை ஆகிய இரு பாடசாலைகளிலும் வகுப்பறைகள் பற்றாக்குறைகளால் புதிய வகுப்பறைக் கட்டடத் தொகுதிகள் அமைக்கும் பணிகள் இடம்பெற்றுவருகின்றன.

இதன் பணிகள் முடிவடைந்ததும் ஓகஸ்ட் மாதம் வகுப்பறைகள் மாணவர்களின் கற்றலுக்கு ஏற்ற முறையில் ஒழுங்கு செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-313)

### சேவைக்குக் கௌரவம்...



மேலும் தொடர்க: ஹேமலதா செல்வராசா ஞாபகார்த்த விருதுக்கான போட்டியில் மாவட்ட மட்டத்தில் முதலிடம் பெற்ற உடுவில் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த கிராம சேவையாளர் இ.எ.மசனட்டுக்கான விருதை யாழ்.மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் வழங்குகிறார். (த-15)

## அறிவுசார் கண்காட்சி

தென்மராட்சி, ஜூன் 15

சாவகச்சேரி பிரதேச சபையின் சரசாலை பொது நூலகத்தினரும், நூலக விழிப்புணர்வு நிறுவனமும் இணைந்து வழங்கும் பன்முகத் தகவல் அறிவு விருத்திக்கான அறிவுசார் கண்காட்சி நேற்றுமுன்தினம் மட்டுவில் கமலாசனி வித்தியாலயத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இன்று புதன்கிழமை முதல் மூன்று தினங்கள் நடைபெறும் மேற்படி கண்காட்சியை தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் ஆரம்பித்து வைப்பார்.

சரசாலை பொது நூலக நூலகர் இ.தர்மலிங்கம் தலைமையில் நடைபெற்ற கண்காட்சியின் ஆரம்ப நிகழ்வில் கோப்பாய் ஆசிரியர் பயிற்சி கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசன், சாவகச்சேரி பிரதேச சபைச் செயலாளர் செல்வி தி.தர்சினி, நூலக விழிப்புணர்வு நிறுவன செயலாளர் ச.தனபாலசிங்கம், வித்தியாலய அதிபர் செ.பேரின்பநாதன் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (வ-207)

# கிராம அலுவலர்கள் தொடர்பாக அதிக அளவான முறைப்பாடுகள்

### விருது வழங்கும் நிகழ்வில் அரச அதிபர்

யாழ்ப்பாணம், ஜூன் 15

''இன்று போய் நாளை வா'' என்று மக்களை அனுப்பாதீர்கள். கிராம அலுவலர்களாகிய உங்கள் சேவைகள் திறமையாக இருந்தாலும் மக்களிடமிருந்து அதிகளவான முறைப்பாடுகள் கிடைத்த வண்ணமேயுள்ளன.

- இவ்வாறு யாழ்.மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

கடமை நேரத்தில் விமானக் குண்டு வீச்சில் உயிரிழந்த நவாலி கிராம சேவகர் செல்வராஜா ஹேமலதா ஞாபகார்த்த கிராம சேவையாளர் விருது விழா யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

அரச அதிகாரிகள் தமது உயிரைப் பணயம் வைத்து சேவையாற்றி வருகின்றனர். இதனால் அவர்கள் சந்தித்த இழப்புக்கள் ஏராளம். அரச அதிகாரிகள் அரசியல் இலாபம் கருதிச் செயற்படுவதில்லை. அவர்கள் மக்களுக்காகவே சேவைகளை மேற்கொள்கின்றனர். வன்னி இறுதி யுத்தத்தில் கிராம சேவையாளர்கள் மக்களுக்குத் தேவையான உணவுகளைப் பெற்றுக் கொடுத்தனர். மக்களுடன் இருந்து சேவையாற்றும் போது பலர் ஷெல் தாக்குதல்களால் கொல்லப்பட்டனர். இதை பலர் இன்று மறந்து விட்டனர். நாங்கள் சாவுக்குப் பயந்து வேலை செய்யவில்லை.

கிராம சேவையாளர்களாகிய நீங்கள் பல சேவைகளை மக்களோடு நின்று செய்கின்றீர்கள். இருந்தும் மக்களிடமிருந்து உங்கள் மீதான முறைப்பாடுகள் நிறைய எனக்குக் கிடைத்த வண்ணமேயுள்ளன. அவற்றை அப்படியே ஒரு புத்தகமாக வெளியிடக் கூடிய அளவுக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

ஒருவர் அல்லது இருவர் சிறப்பாக சேவையாற்றிப் பிரயோசனம் இல்லை. எல்லோருமே சேர்ந்து சிறப்பாகச் சேவையாற்றினால் தான் சிறந்த நிர்வாகக் கட்டமைப்பை ஏற்படுத்த முடியும். நீங்கள் உங்களிடம் வருகின்றவர்களிடம் அன்பாக ஓரிரு வார்த்தைகள் பேசினால் போதுமானது. அத்துடன், உங்கள் பிரிவிலுள்ள ஒவ்வொரு குடும்பத்தின் மீதும் கரிசனை எடுங்கள்.

நீங்கள் இங்கிருந்து தென்னிலங்கைக்குச் சென்று அவர்களின் நிர்வாக முறைமைகளைப் பார்க்க ஆசைப்படுகின்றீர்கள். ஆனால் எதிர்காலத்தில் பயிற்சி பெறுபவர்களை தென்னிலங்கையிலிருந்து இங்கு அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட இருக்கின்றன - என்றார்.

இந்த நிகழ்வில் ஹேமலதா நினைவு விருதுக்காக மாவட்ட மட்டத்தில் நடத்தப்பட்ட கிராம சேவையாளர்களுக்கான முகாமைத்துவப் போட்டியில் வெற்றி பெற்ற உடுவில் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த இ.எ.மசனட், கரவெட்டி பிரதேச செயலகத்தைச் சேர்ந்த பா.லலித், தெல்லிப்பழை பிரதேச செயலகத்தைச் சேர்ந்த கே.பூபாலசிங்கம் ஆகியோருக்கு விருதுகள் வழங்கப்பட்டன. (த-15-86)

## புதுக்காட்டுச் சந்தியில் பொது மலசல கூடம்

யாழ்ப்பாணம் ஜூன் 15

பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபை நிதி ஒதுக்கீட்டில் புதுக்காட்டுச் சந்தியில் மலசல கூடம் அமைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன என்று பச்சிலைப் பள்ளிப் பிரதேசசெயலர் சி.சிவப்பிரகாசம் தெரிவித்துள்ளார்.

புதுக்காட்டுச் சந்தி, கரம்பாய் பிரதேசத்தில் பொது மலசல கூடத்தை அமைக்க வேண்டும் என பிரதேச சபையிடம் பொதுமக்கள் கோரியிருந்தனர்.

இதன் பிரகாரம் முதற்கட்டமாக புதுக்காட்டுச் சந்தியில் பொது மலசல கூடத்தை அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (ம-313)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனியார் காணியில் பால் விற்பனை நிலையம் யாழ்.மாநகர முதல்வரின் அடாத்தான செயல்

## காணி உரிமையாளர் பொலிஸில் முறைப்பாடு

யாழ்ப்பாணம்,ஜூன் 15

நல்லூர் ஆலயச் சூழலில் உள்ள தனியாருக்குச் சொந்தமான காணி ஒன்றில் பால் விற்பனை நிலையம் ஒன்றை அமைப்பதற்கு யாழ். மாநகர சபை முதல்வர் அடாத்தாக அனுமதி வழங்கியுள்ளார் என்று அந்தக் காணியின் உரிமையாளர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் யாழ் பொலிஸ் நிலையத்திலும் இரண்டு முறைப்பாடுகளைச் செய்துள்ளார்.

இது தொடர்பாகக் காணி உரிமையாளர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

நல்லூர் கந்தன் ஆலயத்தின் கிழக்குப் பகுதியில் உள்ள சுமார் 4 பரப்புக்காணி திருமதி பா.ஆனந்தலட்சுமி ஆகிய எனக்கு உரித்தானது. இதனை உறுதிப்படுத்தும் சகல ஆவணங்களையும் நான் வைத்துள்ளேன்.

எனது காணியில் திருநெல்வேலியிலுள்ள யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்திச் சங்கத்தின் பால் விற்பனை நிலையம் ஒன்று எனது அனுமதி எதுவுமின்றி அமைக்கப்பட்டுள்ளது.

நான் கொழும்பில் தங்கியிருந்த வேளை இரவோடு இரவாக இந்தப் பால் விற்பனை நிலையம் அங்கு அமைக்கப்பட்டுள்ளது.



யாழ்.மாநகர முதல்வர் எனது காணியில் பால் விற்பனை நிலையத்தை அமைக்க அனுமதி வழங்கியுள்ளார். அவரது ஆதரவுடனேயே இது அமைக்கப்படுகின்றது. எனது காணியில் இதனை அமைக்க மாநகர முதல்வர் எப்படி அனுமதி வழங்க முடியும்? என்றார்.

இந்த விடயம் தொடர்பாகத் திருநெல்வேலி பால் உற்பத்தி கூட்டுறவுச் சங்கத்தின் பொது முகாமையாளரைத் தொடர்பு கொண்டு கேட்டபோது -

நல்லூர் பகுதியில் பால் விற்பனை நிலையம் ஒன்றை அமைப்பதற்கு யாழ்.மாநகர முதல்வரே அனுமதி வழங்கினார். நல்லூர் பகுதியில் பால் விற்பனை நிலையம் ஒன்றை அமைப்பதற்கு ஏற்ற இடத்தை ஒதுக்கித்தருமாறு யாழ்.மாநகர சபையிடம் நாம் எழுத்து மூலம் கேட்டிருந்தோம்.

அதன் பிரகாரம் முதல்வர் எமக்கு அந்த இடத்தை வழங்கி அதிலேயே இந்த பால் விற்பனை நிலையத்தை அமைக்க உதவியுள்ளார் - என்றார் அவர்.

வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான காணியில்தான் பால் விற்பனை நிலையம் அமைக்கப்பட்டதாக யாழ்.மாநகர சபையால் கூறப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் உயர் அதிகாரி ஒருவரைத் தொடர்பு கொண்டுகேட்டபோது -

பிரதான வீதியின் மையத்திலிருந்து 50 அடிகளுக்கு அப்பால்தான் எதனையும் அமைக்க முடியும். நல்லூர் பகுதியில் வீதியோரமாக அமைக்கப்பட்டுள்ள பால் விற்பனை நிலையத்துக்கான அனுமதி எதுவும் எம்மிடம் பெறப்படவில்லை. அந்த விடயம் தொடர்பாக யாழ்.மாநகர சபைமுதல்வர் எம்மிடம் தொடர்பு கொள்ளவுமில்லை - என்றார்.

10 சதுர அடி அளவில் இந்தப் பால் விற்பனை நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. அதற்கு மின்சாரம் வழங்குவதற்கான பணிகளும் மும்முரமாக இடம்பெற்று வருகின்றன என்று காணியின் உரிமையாளர் உதயனுக்குத் தெரிவித்தார்.

இது தொடர்பாக யாழ். பொலிஸ் நிலையத்தில் இரு முறைப்பாடுகள் செய்யப்பட்ட போதும் இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனவும் அவர் கூறினார். (த-14)

# நாவாந்துறை வீதிக்கும் 'காப்பெற்'

யாழ்ப்பாணம், ஜூன் 15

நாவாந்துறை-ஒட்டுமடம் வீதியும் 'காப்பெற்' வீதியாகப் புனரமைக்கப்படவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை வீதி அபிவிருத்தி அதிகார சபை மேற்கொண்டு வருகின்றது.

இந்த வீதி தற்போது மிக மோசமாகச் சேதமடைந்து காணப்படுகின்றமையால் இந்த வீதியில் பயணிப்பவர்கள் பெரும் சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர். (த-26)

# கைதடியில் இலங்கை வங்கி விரிவாக்கல் கிளை

யாழ்ப்பாணம், ஜூன் 15

கைதடிச் சந்தியில் இலங்கை வங்கியின் புதிய விரிவாக்கல் கிளை நாளை வியாழக்கிழமை திறந்து வைக்கப்படவுள்ளது.

வாடிக்கையாளர்களுக்கு அதியுயர் சேவையை வழங்கும் நோக்கில் புதிய கட்டடத் தொகுதி கணினி மயப்படுத்தப்பட்டுள்ளது இந்த விரிவாக்கல் கிளையை வடமாகாண உதவிப் பொது முகாமையாளர் கே.ஈ.டி. சுமண சிறி திறந்து வைக்கவுள்ளார். (த-313)

# வடமாகாண சுகாதார பிராந்தியங்களில் குடும்பநல உத்தியோகத்தர்கள் பற்றாக்குறை

## சுகாதார அமைச்சின் செயலாளர் தகவல்

யாழ்ப்பாணம் ஜூன் 14

வடமாகாணத்தை சேர்ந்த 5 சுகாதாரப் பிராந்தியங்களிலும் சேவையாற்றுவதற்கு 484 குடும்ப நல உத்தியோகத்தர்கள் தேவைப்படுகின்ற நிலை தற்போது 224 உத்தியோகத்தர்களே சேவையில் உள்ளனர். இதனால் நெருக்கடி நிலை காணப்படுகிறது. இந்தத் தகவலை வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் எஸ் ரவீந்திரன் தெரிவித்தார்

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்ற குடும்பநல தாதியர்களுக்கான கலந்துரையாடல் நிகழ்வில் அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக மேலும் தெரிவித்ததாவது மன்னார், யாழ்ப்பாணம், கிளிநெச்சி, முல்லைத்தீவு, வவுனியா ஆகிய 5பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையிலும் 260 குடும்ப நல உத்தியோகத்தர்களுக் கான ஆளணிப்பற்றாக்குறை நிலவுகிறது.

இதற்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கு குடும்பநல உத்தியோகத்தர்களை சேவையில் ஈடுபடுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் வடமாகாணத்திலுள்ள வைத்தியசாலைகளில் பணியாற்றுவதற்கு தற்போது இணைக்கப்பட்டுள்ள 222 குடும்ப நல தாதிய உத்தியோகத்தர்களை விட மேலதிகமாக 48 பேருக்கான ஆளணி வெற்றிடம் உள்ளது. சனத்தொகை கூடிய பிரதேசங்களில் சுகாதாரத் தேவைகள் அதிகரித்துள்ளமையால் மேலதிகமாக குடும்பநல உத்தியோகத்தர்களை சேவையில் இணைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன - என்றார். (ம-313)

## கல்விக்கு முன்னுரிமை...



உதவிக்குத் தடையில்லை: காரைநகர் ஊரி அ.மி.தக. பாடசாலைக்கு காரைநகர் அபிவிருத்திச் சபையால் போட்டோப் பிரதி இயந்திரம், ஒலிபெருக்கி சாதனம் என்பன வழங்கப்பட்டுள்ளன. போட்டோப் பிரதி இயந்திரத்தை காரைநகர் அபிவிருத்திச் சபைத் தலைவர் மகாராணி க.சோமசேகரம் பாடசாலை அதிபரிடம் கையளிக்கின்றார். (த-250)

# பச்சிலைப்பள்ளியில் குடும்பங்களுக்கு மலசலகூடங்கள்

யாழ்ப்பாணம் ஜூன் 15

பச்சிலைப்பள்ளியில் மீளக் குடியமர்த்தப்பட்டுள்ள குடும்பங்களுக்கு சேவாலங்கா நிறுவனத்தால் 245 மலசல கூடங்கள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன.

ஏற்கனவே பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட குடும்பங்களுக்கு அந்தந்தப் பிரதேசங்களுக்கு ஏற்றவாறு பத்து மலசல கூடங்கள் தனியார் நிறுவனங்களால் அமைத்துக் கொடுக்கப்பட்டன.

தற்போது ஏனைய குடும்பங்கள் தெரிவுசெய்யப்பட்டு, சேவாலங்கா நிறுவனத்தால் 200 மலசல கூடங்களும், கமநெகும திட்டத்தால் கீழ் 45 மலசல கூடங்களும் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-313)

# நெடுந்தீவிலிருந்து நயினாதீவுக்கு நேரடியான படகுச் சேவை நடத்துக

## வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் கோரிக்கை

நெடுந்தீவு, ஜூன் 15

நெடுந்தீவில் இருந்து நயினாதீவுக்கு திருவிழாக் காலங்களில் மக்கள் நேரடியாகச் செல்வதற்கு ஏற்ற வகையில் போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்தித் தருமாறு வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் நெடுந்தீவு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வழமையாக இந்த நடைமுறை இருந்த போதும் கடந்த சில வருடங்களாக இந்த நடைமுறையில் படகு உரிமையாளர்களின் வசதி கருதி மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

இந்த நிலையில், நெடுந்தீவு மக்கள் திருவிழாக் காலங்களில் குறிகாட்டுவான் சென்று அங்கிருந்தே நயினாதீவுக்குச் செல்ல வேண்டி ஏற்பட்டுள்ளது.

இதனால் நெடுந்தீவு மக்கள் பல்வேறு நெருக்கடிகளை எதிர் கொண்டு வருகின்றனர்.

இவ்விடயம் குறித்து மக்கள் ஆட்சேபம் தெரிவித்த போதும் அதற்கான நடவடிக்கைகள் [illegible] யும் மேற்கொள்ளப்படவில்லை என்று விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

இம் முறை நயினாதீவுத் திருவிழாக் காலங்களில் பெரும் எண்ணிக்கையான மக்கள் கலந்து கொள்வர் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த நிலையில் நெடுந்தீவில் இருந்து நயினாதீவுக்குச் செல்லும் மக்களுக்கு ஏற்படக் கூடிய சிரமங்களைத் தவிர்க்கும் பொருட்டு நெடுந்தீவில் இருந்து [illegible] கள் கேட்டுள்ளனர். (ம-7)

# பரவைக்குளம் வீதியின் புனரமைப்பு இடைநடுவில்

யாழ்ப்பாணம் ஜூன் 15

தனது காணியில் ஒரு சிறிய பகுதியை விட்டுக்கொடுக்க அதன் உரிமையாளர் மறுப்பதால் திருநெல்வேலி பரவைக் குளம் வீதி புனரமைப்புப் பணிகளைத் தொடர முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

மழைகாலத்தில் இந்த வீதி மக்கள் போக்குவரத்துக்குப் பயன்படுத்த முடியாதவாறு சேறும் சகதியுமாகக் காணப்படும். இந்த வீதியைப் புனரமைக்குமாறு பொது மக்கள் விடுத்த கோரிக்கைக்கமைய நல்லூர் பிரதேச சபை இந்த வீதியைப் புனரமைக்க நடவடிக்கை எடுத்திருந்தது.

இந்த வீதி விஸ்தரிப்புக்கென இந்தப் பகுதியில் உள்ள மக்கள் தமது காணிகளில் குறிப்பிட்ட அளவை விட்டுக்கொடுத்துள்ளனர். இதை அடுத்து வீதி புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. எனினும், அந்தப் பணியை முழுமையாக நிறைவேற்ற முடியாதவாறு நீண்டகாலமாக வெளிமாவட்டம் ஒன்றில் குடியிருக்கும் அந்தப் பகுதிக் காணி ஒன்றின் உரிமையாளர் காணியை விட்டுக் கொடுக்க மறுத்துவருகின்றார் என்று கூறப்படுகிறது. இதனால் வீதிப் புனரமைப்புப் பணிகள் தடைப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. (த-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாண மட்ட தமிழ்த் தினப் போட்டி முடிவுகள்

வடமாகாணக் கல்வித் திணைக்களம் நடத்திய மாகாண மட்ட தமிழ் மொழித் தின எழுத்தாக்கப் போட்டி மற்றும் நாட்டுக் கூத்துப் போட்டிகளில் வெற்றி பெற்றோர் விவரம் வருமாறு:

**பிரிவு 1**
**ஆக்கம்-எழுத்து**

பி.எடின்ஷிகா (யோகபுரம் ம.வி.), றெ.ஜெ.சைனுகா (புனித ஜோன் பொஸ்கோ) வி.வைஷ்ணவி (சைவப் பிரகாச மகளிர் ம.வி).

**பிரிவு 2**
**கட்டுரை வரைதல்**

க.அபிஷிகா (முருகானந்தா ம.வி), ப.திவிஜா (அளவெட்டி அருணோதயாக் கல்லூரி), வி.ஆன்கில்டா (தோட்டவெளி அ.த.க.பா)

**பிரிவு 3**
**கட்டுரை வரைதல்**

தே.உமையாளினி (அளவெட்டி அருணோதயக் கல்லூரி), ந.சாமந்தி (திருவையாறு ம.வி.) ,பி.தரன்சிகா (கனகராயன்குளம் ம.வி.).

**பிரிவு 4**
**கட்டுரை வரைதல்,இலக்கியம் நயத்தல்**

வா.ஜெயப்பிரசன்னா (ஹாட்லிக் கல்லூரி),த.மேரி தயாளினி (புனித வளனார் றோ.க.த.க.பாடசாலை), பா.சஸ்மிதா (வவுனியா முஸ்லிம் ம.வித்தி) .

**பிரிவு 5**
**தமிழியற் கட்டுரை வரைதல், இலக்கியம் நயத்தல்**

அ.டீனுஜான்சி (புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி) , ச.அனுஜிகா (கருங்கண்டல் றோ.க.த.க.பாடசாலை) , ம.கேசவன் (கிளிநொச்சி இந்துக் கல்லூரி)

**பிரிவு 4**
**இலக்கணப் போட்டி**

க.கீதாஞ்சனா (வடஇந்து மகளிர் கல்லூரி) ,சி.மேகலாதரன் (வவுனியா தமிழ் மத்திய ம.வி.),ம.சோபிகா (கிளிநொச்சி மத்திய கல்லூரி)

**பிரிவு 5**
**இலக்கணப் போட்டி**

ஜெ.ஜெயகலா (மன்னார் சித்தி விநாயகர் இந்துக்கல்லூரி) ,க.ஹேமா (யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி) , செ.கிசாந்தினி (வவுனியா பூந்தோட்டம் ம.வித்தி)

**பிரிவு 5**
**திறனாய்வுப் போட்டி**

ஜெ.ஜனார்த்தகன் (மல்லாவி மத்திய கல்லூரி) ,தி.நிரோஷா (கிளிநொச்சி மத்தியகல்லூரி) , சு.கோபிகா (மானிப்பாய் மகளிர் கல்லூரி) .

**பிரிவு 4**
**குறுநாடக ஆக்கம்**

பா.அஜித்தா (கிளிநொச்சி மத்திய கல்லூரி) ,வெ.தேனுகா (முல்லைத்தீவு ம.வி), மு.பிரகதி (உயிலங்குளம் றோ.க.த. க.பாடசாலை).

**பிரிவு 5**
**குறுநாடக ஆக்கம்**

இ.மைதிலி (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி) ,ஜெ.கோகிலா (கிளிநொச்சி மத்திய கல்லூரி) ,அ.ஜெனிற் (முல்லைத்தீவு பாலிநகர் மகா வித்தியாலயம்) .

**பிரிவு 4**
**கவிதை ஆக்கம்**

சி.விதுர்சனா (முல்லைத்தீவு கலைமகள் வித்தியாலயம்) ,கு.மேரி தனுஷா (மன்னார் தோட்டவெளி அ.த.க.பா) ர.ஜெயந்திரன் (வவுனியா குருக்கள் புதுக்குளம் அ.த.க.பாடசாலை) .

**பிரிவு 5**
**கவிதை ஆக்கம்**

உ.அனுதரன் (வவுனியா தமிழ் மத்தியமகா வித்தியாலயம்),கு.சக்தீனா (கிளிநொச்சி வேரவில் இந்து ம.வித்தி) , மோ.ஜெயப்பிருந்தா ( முருங்கன் மகா வித்தியாலயம்) .

**பிரிவு 4**
**சிறுகதை ஆக்கம்**

மு.கயல்விழி (கிளிநொச்சி மத்திய கல்லூரி),வி.சிந்துஜா (வவுனியா இலங்கைத் திருச்சபை தமிழ் மகா வித்தி), இ.கம்சனா (குமுழமுனை மகா வித்தியாலயம்) .

**பிரிவு 5**
**சிறுகதை ஆக்கம்**

சி.ரதிதேவி (நெடுங்கேணி ம.வி) , பி.பிரதீபா (வல்வெட்டித்துறை சிதம்பராக்கல்லூரி), து.யோ. தர்ஷினி ( மன்னார் சித்தி விநாயகர் இந்துக்கல்லூரி)

**விசேட பிரிவு 1**
**சிங்கள மாணவர்களுக்கான தமிழ் உறுப்பெழுத்து**

அங்கரா சுபோதினி (மடுகந்த மகாவித்தியாலயம்)

**விசேட பிரிவு 2**

தாரிகா மிகிரங்கனீ (மடுகந்த மகாவித்தியாலயம்)

**திறந்த போட்டி**
**வடமோடிக்கூத்து**

கைதடி நாவற்குழி அ.த.க.பாடசாலை,

**தென்மோடிக்கூத்து**

திருக்குடும்பக் கன்னியர்மடம், மன்னார் புனித ஆனாள் மத்தி மகாவித்தியாலயம், முல்லைத்தீவு கலைமகள் வித்தியாலயம்

**சிந்துநடைக்கூத்து**

பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி, கிளிநொச்சி இந்துக்கல்லூரி , வவுனியா பெரியகோமரசன் குளம் ம.வி.

**விசேட கூத்து**

சுழிபுரம் விக்ரோறியாக்கல்லூரி, மன்னார் புனிதமரியாள் பெண்கள் பளைறோ. க.த.க.பாடசாலை

**இசை நாடகம்**

கிளி.மகாவித்தியாலயம்,சாவகச்சேரி இந்துக் கல்லூரி, மன்னார்சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி. (வ)

# பிரதேச ஒருங்கிணைப்பு குழுக் கூட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜூன்15

வடமராட்சி கிழக்கு பிரதேச மட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு மருதங் கேணி உதவி அரச அதிபர் பணிமனையில் நடைபெறவுள்ளது.

பிரதேச ஒருங்கிணைப்புத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சில்வெஸ்திரி அலன்ரீன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தக்கூட்டத்தில் மருதங்கேணி உதவி அரச அதிபர் என்.திருலிங்கநாதன் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு தொழில் அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் கலந்து கொண்டு பிரதேச அபிவிருத்தி தொடர்பாக கலந்துரையாடவுள்ளனர். (ற-313)

***

யாழ்ப்பாணம், ஜூன் 15

காரைநகர் உதவி அரச அதிபர் பிரிவில் பிரதேச மட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நாளை மறுதினம் வெள்ளிக் கிழமை காலை 9 மணிக்கு யாழ். கலாநிதி ஆ.தியாகராசா மகாவித்தியாலய நடராஜ மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சில்வெஸ்திரி அலன்ரீன் தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் அபிவிருத்தி அமைச்சரும் யாழ். மாவட்ட அபிவிருத்திக் குழுவின் இணைத்தலைவருமான கே.என். டக்ளஸ் தேவானந்தா கலந்து கொண்டு பிரதேச அபிவிருத்தி தொடர்பாகக் கலந்துரையாடவுள்ளார்.

(ற-250)

# பொதுக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 15

இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் வடக்கு-கிழக்கு மாவட்ட அவையின் 47 ஆவது கூட்டத் தொடர் பொதுக் கூட்டமும் கலை நிகழ்வும் நாளை மறுதினம் வெள்ளிக் கிழமை மாலை 4.30 மணிக்கு றிம்மர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

(ற-313)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 08 . 09 . 2004
இறப்பு 15 . 06 . 2010

### செல்வி சிவனேசன் மதுசாலினி

வண்ண மலர் ஒன்று
வாடியே விழுந்த செய்தி
இடியாய் எம்மில் புக
பாறியே விழுந்ததம்மா எம்மிதயம்!

ஆடியசைந்து வரும் உன்னழகில்
அனைவருமே சொக்கி நிற்க
மாயமானாய் முன்னே தோன்றி
மாணிக்கமே எங்கு சென்றாய்!

அம்மாவொடு அப்பாவும் சோதரரும்
ஆண்டுதான் ஒன்றான போதுமிங்கு
தேடியே ஓடுகின்றார் உம் சுவட்டை
தேனே நீ வந்திடம்மா

(ச-870-23-24-4)

தச்சந்தோட்டம், கொற்றாவத்தை,
கரணவாய் வடக்கு, கரவெட்டி.

தகவல்:
தகப்பன்,தாய்,சகோதரர்கள்

## மரண அறிவித்தல்



### திருமதி சதாசிவ ஐயர் சுப்புலட்சுமி அம்மா

கொக்குவில் மேற்கு, ஐயனார் கோயிலடியை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி சதாசிவஐயர் சுப்புலட்சுமி அம்மா 13.06.2011 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வெ.சதாசிவ ஐயரின் பாசமிகு மனைவியும் காலஞ் சென்றவர்களான ருக்குமணி அம்மா, வெங்கடேஸ்வரசர்மா மற்றும் லலிதாம்பாள், ஜெகதாம்பாள், இராசாம்பாள், பாலச்சந்திரசர்மா ஆகியோரின் அன்புத் தாயும் பத்மநாதக் குருக்கள், சத்தியதாஸ சர்மா, ஜெயராம்சர்மா,சந்திரசேகரக் குருக்கள், மகேஸ்வரி, காந்தி ஆகியோரின் மாமியும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (15.06.2011) புதன்கிழமை முற்காலை 8 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்துமயானத் துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஐயனார் கோவிலடி,
கொக்குவில் மேற்கு.

தகவல்:
பாலச்சந்திரசர்மா (மகன்)

## பணிப்பெண் தேவை

கொழும்பில் வதியும் யாழ்.வைத்திய தம்பதியரின் இரு சிறு பெண் குழந்தைகளை எம்மோடு தங்கியிருந்து பராமரிப்பதற்கு 18 முதல் 40 வயதுக்கிடைப்பட்ட ஒரு நற்குணமுள்ள ஓரளவு கல்வி கற்ற பெண்ணை எதிர்பார்க்கின்றோம். சம்பளம் மாதம் ரூ.10,000இற்குமேல்.

தொடர்பு: 0773819855, 0773456779

## வீடு விற்பனைக்கு

கண்டி வீதியை அண்மித்த பொன்னம்பலம் சந்தியில் ஒரு பரப்புக் காணியுடன் வீடு உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 0772490575

## சாரதி தேவை

யாழ்.மாவட்டத்துக்குள் லொறி செலுத்த சாரதி தேவை.

தொடர்பு: 0773076917

## தவறிவிட்டது

N.1912597 இலக்க கலைராஜா நிரோஜன் என்ப வருடைய கடவுச்சீட்டு 13.06.2011 சாவகச்சேரி பழைய பொலிஸ் ஸ்ரேசனுக்கும் சாவகச்சேரி பிர தேச செயலகத்துக்கும் இடையில் தவறிவிட் டது. கண்டெடுத்தவர்கள் சாவகச்சேரி பொதிகை புத்தகசாலையில் ஒப்படைக்கவும்.

மீசாலை மேற்கு,
மீசாலை.

தொடர்பு: 021 7901535

## தவறிவிட்டது

யாழ்ப்பாணத்துக்கும் சில்லாலைக்கும் இடையில் WPHF 8165 இலக்க வாகன இலக்கத் தகடு தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு: 0777727721, 0771053135

## காணி விற்பனைக்கு

கைதடி, கோப்பாய் வீதியில் பதினைந்து பரப்புக் கிறேசர் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: 021 222 2106, 0776529416

## மலிவு விற்பனை

100 இற்கும் மேற்பட்ட புதிய மொடல் SONY Wega Flat 21"-29", TV கள், 12000/= முதல். 50 இற்கும் மேற்பட்ட குளிர்சாதனப் பெட்டிகள் (இரட்டைக் கதவு) DTS அம்பிளி பயர்கள், DVD என்பன மலிவு விலையில் விற்பனைக்குண்டு.

தொடர்பு:- 0771393670,0778449829

R.S.மகேஸ்வரன் (அப்பளக் கொம்பனி)
ஆரம்பப் பாடசாலை அருகில் (சீனிப்புளியடி)
K.K.S.வீதி, இணுவில்.

## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

கொழும்பில் இருந்து தருவிக்கப்பட்ட கலப்பற்ற உயர்ரக கிறேடேன் டோபர் மான், ஜேர்மன் செப்பேட்டாசோன் றொட்வீலர் அயிரிஸ் நாய்க்குட்டிகள் பூச்சி நீக்கப்பட்டு தடுப்பூசி போடப்பட்டு புத்தத்துடன் விற்பனைக்குண்டு.

V.S.சற்குணன்
25, பொன்னப்பாலேன்,
வண்ணார்பண்ணை - யாழ்ப்பாணம்
021222 7535,0777158476

## S.V.அம்மன் தரகு முகவர் சேவை

* காணிகள்,வீடுகள் என்பவற்றை வாங்க, விற்க உடன் நாடுங்கள் S.V அம்மன் தரகு முகவர் சேவை
அரச அங்கீகாரம் பெற்றவர்
பதிவு இலக்கம் 1060
* உங்கள் பிள்ளைகளின் வாழ்க்கைத் துணைகளைத் தேர்ந்தெடுக்க நாடுங்கள்
நல்லூர் முருகன் திருமண சேவை
தொடர்பு: T.S.மணியம், ஆடியபாதம் வீதி,
நாவலடி ஒழுங்கை, திருநெல்வேலி
0778002788, 0213734194

## கைதடி 'ஹோட்டல் சீ ஹோஸ்'' கட்டடங்களும் ஆதனமும் விற்பனைக்கு

கைதடி வீரகத்திப் பிள்ளையார் கோயில் வீதியில் கைதடிச் சந்தியிலிருந்து ¼ மைல் தூரத்தில் அமைந்துள்ளதும் நி.பர.12 வீஸ் தீரணங் கொண்டதுமான ''கட்டைபறித்தான்'' என்னும் ஆதனமும் அதிலமைந்துள்ள 6 தனித் தனியான விடுதி வீடுகளும் மற்றும் கட்டடங்களும் உடனடி விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0779849168 HOTELSEAHORSE@yahoo.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெங்கு ஒழிப்புத் திட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்க மறுத்தால் கடும் நடவடிக்கை

## சுகாதார அமைச்சர் எச்சரிக்கை

கொழும்பு, ஜூன் 15

நாட்டில் இன்று பெரும் அச்சுறுத்தலாகவும் சவாலாகவும் இருப்பது பயங்கர உயிர்க்கொல்லி நோயான டெங்கு. டெங்கு ஒழிப்புத் திட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்க மறுக்கும் எவராக இருந்தாலும் அவர்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

அமைச்சுகள், அரச நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள் மற்றும் பொதுமக்கள் எவராக இருந்தாலும் பாகுபாடின்றி சட்டத்தின் முன் நிறுத்தப்படுவர். இதற்கு ஏதுவாக எமது சுகாதார சேவைகள் சட்டத்தில் திருத்தம் ஒன்றும் கொண்டுவரப்படவுள்ளது என சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன நேற்று முன்தினம் தெரிவித்தார்.

தேசிய டெங்கு ஒழிப்பு வாரம் தொடர்பாக ஊடகவியலாளர்களுக்கு அமைச்சர் விளக்கம் அளிக்கும்போதே இதனைத் தெரிவித்தார்.

டெங்கு இன்று மனித வாழ்வுக்கு ஒரு பெரிய சவாலாக அமைந்துள்ளது. டெங்கு நுளம்புகள் பெரும்பாலும் வீட்டுச் சுற்றாடலிலேயே கூடுதலாக உற்பத்தியாகின்றன. உணவு வகைகள், தொழிற்சாலைகள் என்பவற்றில் இருந்து வெளிப்படும் கழிவுகளால் கூடிய பாதிப்பு ஏற்படுகின்றது. ஒவ்வொரு பிரஜையும் தமது வீடுகளையும் சுற்றாடலையும் சுத்தமாக வைத்திருக்க வேண்டும். நீங்கள் அசமந்தமாக இருந்தால் உங்கள் குழந்தைகளே பெரிதும் பாதிக்கப்படுகின்றனர் என்பதை உணர வேண்டும்.

பொது சுகாதாரப் பரிசோதகர்களும் சுகாதாரத் தொண்டர்களும் வீடு வீடாகச் சென்று அவதானித்து ஆலோசனைகளை வழங்குகின்றனர்.

அண்மையில் களுத்துறை பிரதேசத்தில் ஒரு வீட்டுக்குச் சென்று ஆலோசனை வழங்கிய சுகாதார பரிசோதகர் ஒருவர் அந்த வீட்டுக்காரரால் கழுத்தில் பிடித்துத் தள்ளப்பட்டுள்ளார்.



உங்களுடைய நன்மைக்காக, உங்கள் உயிரைக்காப்பாற்றுவதற்காக உதவ வரும் அதிகாரிகள் இப்படித்தாக்கப்படுவது மிகவும் கேவலமானது மட்டுமல்ல, கண்டிக்கத் தக்கதுமாகும். மலேரியா நோயைக் கட்டுப் படுத்த 50 வருடங்கள் போராடி வெற்றி கண்டுள்ளோம். அதேபோன்று அனைவரும் ஒத்துழைப்பு வழங்கினால் டெங்கு நோயையும் ஒழித்துக் கட்ட முடியும். பயங்கரவாதத்தை ஒழித்து நாட்டைக் காப்பாற்ற படையினரும் பொதுமக்களும் வழங்கிய ஒத்துழைப்பு பாராட்டப்பட வேண்டியது.

அதைப்போலவே இன்று பெரும் சவாலாக இருக்கும் டெங்கு நுளம்புகளை ஒழிக்கவும் ஆதரவு தரவேண்டும் என்றும் அமைச்சர் கூறினார். (ஒ-சி)

# வருடாந்த பிரத்தியேக வகுப்புக்காக ரூ.59 கோடி செலவழிக்கும் மாணவர்கள்

கொழும்பு, ஜூன் 15

இலங்கையில் ஜி.சீ.ஈ.சாதாரணதர மற்றும் உயர்தர வகுப்பு மாணவர்களின் பிரத்தியேக வகுப்புகளுக்காக பெற்றோர் வருடாந்தம் 59 கோடி ரூபாவை செலவு செய்கின்றனர் என தேசியக் கல்வி ஆணைக்குழு மேற்கொண்ட ஆய்வின்போது தெரிய வந்துள்ளது.

இதில் சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு 22.5 கோடி ரூபாவும், உயர்தர பரீட்சைக்குத் தோற்றுபவர்களுக்கு 36.5 கோடி ரூபாவும் செலவிடப்படுகின்றது.

பாடசாலை மாணவர்கள் மற்றும் பிரத்தியேக வகுப்புகள் நடத்தும் ஆசிரியர்கள் மத்தியில் நடத்தப்பட்ட விரிவான ஆய்வொன்றையடுத்தே ஆணைக்குழு இந்தத்தகவலை வெளியிட்டுள்ளது.

அதற்கமைய உயர்தரப் பரீட்சையில் கலைத்துறைக்கு ரூ.13.2 கோடி, விஞ்ஞானத்துறைக்கு ரூ.9.1 கோடி, வர்த்தகத் துறைக்கு ரூ.7.4 கோடி, கணிதத்துறைக்கு ரூ. 6.8 கோடியும் செலவாகிறது.

சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களில் சுமார் 2 லட்சத்து 90 ஆயிரம் பேர் பிரத்தியேக வகுப்புகளுக்குச் செல்கின்றனர் என அந்த ஆய்வறிக்கையில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ச)

# விதவைகளுக்கு சுயதொழில் பயிற்சி; இந்திய அரசு 203 மில்லியன் உதவி

மட்டக்களப்பு, ஜூன் 15

மட்டக்களப்பு மாவட்டத்தில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட விதவைகளுக்கு சுயதொழில் பயிற்சிகளை வழங்குவதற்கு இந்திய அரசு முதற்கட்டமாக 203 மில்லியன் ரூபாவை நன்கொடையாக வழங்கியுள்ளதாகச் சிறுவர் மற்றும் மகளிர் அபிவிருத்தி பிரதி அமைச்சர் எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது,

வடக்கு, கிழக்குப் பகுதியில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட விதவைகளுக்கு சுயதொழில் பயிற்சிகளை அளித்து சுயதொழில் வாய்ப்புக்களை வழங்குவதற்கு இந்த வேலைத்திட்டம் முதற்கட்டமாக முன்னெடுக்கப்படவுள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட விதவைகளுக்கு இந்தச் சுயதொழில் பயிற்சிகளை வழங்க இந்திய அரசு இணக்கம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, கடந்த வருடம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ டெல்லிக்கு சென்றபோது இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கிடம் இலங்கையிலுள்ள விதவைகளுக்கு சுயதொழில் பயிற்சி வழங்க வேண்டுமென கோரிக்கை விடுத்திருந்தார்.



இதற்கிணங்க இருநாட்டுத் தலைவர்களும் ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டனர்.

அந்தவகையில் கடந்த வாரம் இந்திய அரசின் அந்த வேலைத் திட்டத்தினை இலங்கையில் நடைமுறைப்படுத்தவென இந்திய அரசு சேவா இந்தியா நிறுவனத்திடம் ஒப்பந்தம் செய்தது.

இதனை நடைமுறைப்படுத்தவென எதிர்வரும் வாரம் சேவா இந்திய நிறுவனப் பிரதிநிதிகள் இலங்கை வரவுள்ளனர். இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்தவென 50 இளைஞர், யுவதிகள் தெரிவு செய்யப்பட்டு அவர்கள் இந்தியாவில் உள்ள தொழில் பயிற்சி நிலையங்களில் முதற்கட்டமாக பயிற்சி வழங்கப்படவுள்ளது. அவர்கள் மூலம் 800 விதவைகளுக்கு சுயதொழில் வாய்ப்புக்களுக்கான பயிற்சிகள் வழங்கப்படும்-என்றார். (ச)

# மஹாபொல புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு

அம்பாறை, ஜூன் 15

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் மஹாபொல புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு நாளை வியாழக்கிழமை நடைபெறவிருக்கின்றது.

மஹாபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியத்தினால் வருடாவருடம் நடத்தப்பட்டு வரும் இந்தப் புலமைப் பரிசில் வழங்கும் நிகழ்வில் இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் கலாநிதி எஸ்.எம்.முஹம்மட் இஸ்மாயில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

இந்தப் பல்கலைக்கழகத்தின் கலை, கலாசார பீடத்தில் 48 மாணவர்களுக்கும் முகாமைத்துவ வர்த்தக பீடத்தில் 78 மாணவர்களும் பிரயோக விஞ்ஞான பீடத்தில் 16 மாணவர்களும் இஸ்லாமிய அரபுமொழி பீடத்தில் 34 மாணவர்களும் இந்தப்புலமைப்பரிசிலைப் பெறத் தகுதி பெற்றுள்ளதாக பதிவாளர் அப்துல் சத்தார் தெரிவித்துள்ளார். (30)



கொழும்பு, கொச்சிக்கடைப் புனித அந்தோனியார் ஆலய உற்சவத்தின் இறுதிநாள் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்த ஆலயத்தில் திருச்சொரூப பவனிக்கு முன்னர் ஆராதனைதனைக்கு வைக்கப்பட்டுள்ள அந்தோனியார் சொரூபம்.

# மின்சார வேலி அமைக்க நிதி ஒதுக்கீடு

திருகோணமலை, ஜூன் 15

கந்தளாய் பிரதேசத்தில் மின்சார வேலி அமைப்பதற்காக வனவிலங்குகள் பாதுகாப்பு திணைக்களத்தினால் 30 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கந்தளாய், அக்போபுர பகுதி ஊடாக சுமார் 20 கிலோ மீற்றர் தூரத்திற்கு மின்சார வேலி அமைக்கப்படவுள்ளது.

இந்தப் பகுதியில் உள்ள பயிர்களை யானைகள் சேதப்படுத்தி வருவதால் இதனை பாதுகாக்கும் பொருட்டே மின்சார வேலி அமைக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

# கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் 'கற்றாக்' சிகிச்சை; பார்வையிட நாமல் எம்.பி.வருகிறார்

யாழ்ப்பாணம், ஜூன் 15

கிளிநொச்சிப் பொது வைத்தியசாலையில் இடம்பெற்றுவரும் மாபெரும் 'கற்றாக்' சத்திரசிகிச்சையைப் பார்வையிட இன்று அம்பாந்தோட்டை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ வருகைதரவுள்ளார். வடமாகாண அமைச்சின் ஏற்பாட்டில் வடமாகாணம் கிளிநொச்சி மாவட்டத்தில் முதன்முறையாக இந்தச் சத்திரசிகிச்சை நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 250 பயனாளிகளுக்கு இந்த சத்திரசிகிச்சை இடம்பெற்று வருகின்றது. இதில் தெரிவு செய்யப்பட்ட ஒரு பயனாளிக்கு சத்திரசிகிச்சை, போக்குவரத்துச் செலவுகள், கண்ணாடி வழங்கல் உட்பட அனைத்துச் செலவுகளுக்குமாக ஒரு லட்சம் ரூபா செலவாகின்றது.

இதன் ஆரம்ப நிகழ்வு இன்று வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி தலைமையில் இடம்பெற்றது. இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திர[illegible] தும் கிளிநொச்சிப் பொது வைத்தியசாலையில் இந்தச் சத்திரசிகிச்சை முகாம் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-313-15)

# வீதிக்கு 'காப்பெற்' போடுமாறு கோரி பிரதேச மக்கள் ஆர்ப்பாட்டம்

திருகோணமலை, ஜூன் 15

தம்பலகாமம் - கிண்ணியா பிரதான வீதிக்கு காப்பெற் போடுமாறு வலியுறுத்தி பிரதேச மக்கள் நேற்று செவ்வாய்க்கிழமை தம்பலகாமம், ஆதிகோணைநாயகர் ஆலயத்தின் முன்னால் கூடி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த வீதி முன்னர் தார் வீதியாக இருந்துள்ளது.6 வருடங்களுக்கு முன்னர் வீதி அபிவிருத்திக்காக கிரவல் போடப்பட்டதாகவும் அதன் பின்னர் இந்த வீதிக்கு தார் ஊற்றப்படவில்லை என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தெரிவிக்கின்றனர்.

கிரவல் காரணமாக ஏற்படும் புழுதியால் வீதிக்கு அண்மையில் உள்ள மக்கள் வீடுகளில் இருக்க முடியாத நிலை கடந்த 6 வருடங்களுக்கு மேலாக ஏற்பட்டுள்ளது. அபிவிருத்தி என்ற பேரில் கிரவல் போடப்படுகின்றதே தவிர வீதி சீரான முறையில் புனரமைக்கப்படவில்லை என மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (ச)

# மருந்து இறக்குமதியில் மோசடி; சுகாதார அமைச்சருக்கு முறைப்பாடு

அரச வைத்தியசாலைகளுக்கு தேவையான மருந்துகளை இறக்குமதி செய்யும் நிறுவனங்களைக் கண்காணிப்பதற்காக நியமிக்கப்பட்டிருந்த ரெண்டர் சபை அதிகாரிகள் மோசடிகளில் ஈடுபட்டு வந்துள்ளனர் எனச் சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிரிசேனவுக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.


இந்த அதிகாரிகளின் ஊழல் மோசடிகளால் அரசுக்கு நட்டமேற்பட்டுள்ளது .அவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளச் சட்டமா அதிபருடன் கலந்தாலோசிக்கப்பட்டு வருகின்றது எனவும் அமைச்சர் கூறியுள்ளார்.

மருந்துகள், மருத்துவ உபகரணங்கள் மற்றும் இயந்திரங்களை இறக்குமதி செய்யும் போது இந்த ஊழல் மோசடிகள் நடைபெற்று வந்துள்ளன என அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
15 ஜூன் 2011 புதன்கிழமை

# வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலயத்தில் பெருந்திரளான அடியவர்கள் நேர்த்திகளை நிறைவேற்றினர்


வரலாற்றுப் புகழ் மிக்க வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலயத்தில் அடியார்கள் வாகனங்களிலிருந்து இறங்கி ஆலயத்தை நோக்கிச் சென்று கொண்டிருப்பதனையும், உலங்கு வானூர்தியொன்று ஆலயக் கோபுரத்துக்கு அருகில் பறந்து கொண்டிருப்பதனையும், அடியவர்கள் பறவைக் காவடியெடுத்துத் தமது நேர்த்தியை நிறைவேற்றுவதையும், தாயொருவர் தனது குழந்தையை ஏந்தியவாறு தீ மிதிப்பதையும் காணலாம். (86)

முல்லைத்தீவு, ஜூன் 15

வரலாற்றுப் புகழ் மிக்க முல்லைத்தீவு வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலயத்தின் வருடாந்தப் பொங்கல் விழாவில் கடந்த பல வருடங்களின் பின்னர் பல்லாயிரக்கணக்கான அடியவர்கள் கலந்து கொண்டு தமது நேர்த்திக் கடன்களை நிறைவேற்றினார்கள்.

காலை முதலே ஆலயத்தில் பெருந்திரளாகக் கூடிய அடியார்கள் பகலில் இடம்பெற்ற பூசை வழிபாடுகளில் பக்தி சிரத்தையுடன் கலந்து கொண்டமையைக் காணக் கூடியதாக இருந்தது. பாற்செம்புகள், கற்பூரச் சட்டிகள், காவடிகள், தூக்குக் காவடிகள், பறவைக் காவடிகள் என்பவற்றை பல கிலோ மீற்றர் தூரத்துக்கப்பால் இருந்து அம்மனின் நான்கு திசைகளிலிருந்தும் அடியவர்கள் தாங்கி வந்தார்கள்.

பரந்த ஆலயச் சுற்றாடலில் சுமார் ஒரு கிலோ மீற்றர் தூரம் வரை நான்கு வீதிகளிலும் பொதுமக்கள் இரவிரவாகத் தங்கியிருந்தார்கள். யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த மக்களுடன் நாட்டின் ஏனைய இடங்களிலிருந்தும் பொது மக்கள் இந்தப் பொங்கல் விழாவில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

மாலையில் ஆலய முன்றலில் தீமிதிப்பும் இடம்பெற்றது. கனன்று கொண்டிருந்த நெருப்புத் தணல்களின் மீது அடியவர்கள் நடந்து சென்ற காட்சி மெய்சிலிர்க்க வைத்தது.


கை, கால்கள் போன்ற அங்கங்களை இழந்தவர்களும் தமது நேர்த்திகளை நிறைவேற்று முகமாகக் காவடிகளை எடுத்து வந்தமை ஆலயத்தில் கூடியிருந்தவர்களின் கண்களில் நீரை வரவழைத்தது.

பிற்பகல் 5 மணியளவில் வானத்தில் வட்டமிட்ட உலங்கு வானூர்த்தியிலிருந்து ஆலயக் கோபுரத்தின் மீது பூக்களைத் தூவி படைத்தரப்பினர் தமது வணக்கத்தை அம்மனுக்குச் செலுத்தினார்கள். ஆலயக் கோபுரத்துக்கு மிகவும் அருகில் பதிந்து சென்று பூதூவும் நடவடிக்கை மூன்று முறை இடம் பெற்றது.

இந்த உலங்கு வானூர்தி வவுனியாவுக்கு மாறி மாறிப் பறந்து சென்று பூக்களை எடுத்து வந்து தூவியமையை அவதானிக்கக்' கூடியதாக இருந்தது.

இந்த முறை ஆலயத்துக்குப் பெருமளவு மக்கள் வருகை தந்தபோதிலும் ஆலய நிர்வாகத்தினர் இயன்றளவு அவர்களுக்கான அத்தியாவசிய சேவைகளை ஒழுங்குபடுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (க-86)

## இராணுவத்தினரின் பௌர்ணமி தின விழா



முல்லைத்தீவு, ஜூன் 15

முல்லைத்தீவு இராணுவத்தினர் இன்றைய பௌர்ணமி தினத்தைச் சிறப்பாகக் கொண்டாடுவதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

இதன் ஓர் அங்கமாக முல்லைத்தீவு நகரிலுள்ள முக்கிய சந்தியொன்றில் மாவட்டச் செயலகத்துக்கு அருகில் பெரியளவிலான அலங்காரப் பந்தலொன்றை அவர்கள் அமைத்துள்ளனர்.

இதனை அங்கு செல்லும் மக்கள் ஆவலுடன் பார்த்துச் செல்கின்றனர். (க-86)

## இரவு நேரத்தில் வருபவர்களால் பாரதிபுரம் மக்கள் அச்சத்தில்

கிளிநொச்சி, ஜூன் 15

கிளிநொச்சி பாரதிபுரம் பகுதியில் உள்ள வீடுகளுக்குள் இரவு நேரத்தில் வருபவர்களால் அந்தப்பகுதி மக்கள் அச்சத்துடன் காணப்படுகின்றார்கள்.

இந்தப் பகுதியில் உள்ள வீடுகளுக்குள் இரவு நேரத்தில் சிலர் வந்து தேவையற்ற கேள்விகளைக் கேட்பதாகவும் வருபவர்கள் சிங்களம் கலந்த தமிழில் கதைப்பதாகவும் அச்சப்படும் மக்கள் ஆதங்கப்படுகின்றார்கள். உதவியற்ற வறிய நிலையிலுள்ளவர்களின் வீடுகளைக் குறிவைத்தது போலவே அவர்களது வீடுகளுக்கு வந்து தொல்லை கொடுப்பதாகக் கூறி இவர்கள் வேதனைப்படுகின்றார்கள். இப்படியாகத் தொல்லை கொடுப்பவர்கள் யாராக இருந்தாலும் தாமாக முன்வந்து தமது கீழ்த்தரமான செயற்பாடுகளை நிறுத்திக் கொள்ளவேண்டும் என்றும் இந்தப் பகுதி மக்கள் கேட்கின்றார்கள். (க-426)

## ஆயிரம் கிலோ வெடிகுண்டு வெடிக்காத நிலையில் மீட்பு

கிளிநொச்சி, ஜூன் 15

மக்கள் வழங்கிய தகவலின் அடிப்படையில் கிளிநொச்சி கோணாவில் பகுதியில் ஆயிரம் கிலோ எடைகொண்ட வெடிக்காத நிலையிலுள்ள பெரிய வெடிகுண்டொன்று மீட்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசினால் ஆரம்பிக்கப்படவுள்ள 100 வீட்டுத் திட்டத்துக்கென கிளிநொச்சி அரச அதிபர் கரைச்சிப் பிரதேசத்திலுள்ள கோணாவில் பகுதியிலுள்ள காணியைத் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்கு ஒதுக்கியுள்ளார். இந்த அடர்ந்த காட்டுப் பகுதியில் வெடி பொருள்கள் இருப்பதாக மக்கள் அச்சம் தெரிவித்தனர்.

இதனைத் தொடர்ந்து மேற்படி பிரதேசத்தில் வெடிபொருள்களைக் கண்டு பிடித்து அகற்றுவதில் அதிகாரிகள் ஈடுபட்டனர். இதன்போது வெடிக்காத நிலையிலுள்ள இந்த ஆயிரம் கிலோ எடைகொண்ட வெடிகுண்டு மீட்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து மேலும் குண்டுகளைத் தேடிக் கண்டு பிடிப்பதில் உரிய அதிகாரிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். (க-115)

## கட்டடங்கள் புனரமைப்பு

வவுனியா, ஜூன் 15

வவுனியா அஞ்சல் அத்தியட்சகர் அலுவலகம் மற்றும் அத்தியட்சகர் விடுதிக் கட்டடம் ஆகியவை புனரமைக்கப்படவுள்ளன.

வடமாகாண சபை கட்டடங்கள் திணைக்களம் மேற்படி வேலைத்திட்டம் தொடர்பாக விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

இந்தக் கட்டடங்களின் புனரமைபுக்கென 5.8 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. வடமாகாணக் கட்டடங்கள் திணைக்களப் பணிப்பாளர் எஸ். மோகனதேவன் இது தொடர்பாக நடவடிக்கை மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-122)

## அகில இலங்கைத் தமிழ் மொழித்தினப் போட்டி முடிவுகள்

கிளிநொச்சி, ஜூன் 15

அகில இலங்கைத் தமிழ் மொழித் தினப் போட்டிகளில் கிளிநொச்சி மாவட்ட நிலை தமிழ் மொழிக் கலைத்திறன் போட்டி முடிவு களின் நேற்றைய தொடர்ச்சி வருமாறு:

பிரிவு 4 - சிறுகதை ஆக்கம்

மு.கயல்விழி (கிளிநொச்சி மத்திய கல்லூரி), தி.சுலக்சினி (பளை மத்திய கல்லூரி), க. நவீனா (முழங்காவில் ம.வி.).

பிரிவு 5 - சிறுகதை ஆக்கம்

வி.பானுப்பிரியா (தருமபுரம் ம.வி.), கி.வினோதினி (அக்கராயன் ம.வி.), ப.விஜயந்தன் (பூநகரி ம.வி.).

பிரிவு 1 - வாசிப்பு

மை.மதுபாலன் (கிளி. மத்திய ஆரம்ப வித்தி), செ.டிலக்சன் (தம்பிராசபுரம் அ.த.க.பா), ப.சுதர்சினி (பூநகரி ம.வி)

பிரிவு 2 - வாசிப்பு

சு.டிலக்சனா (கிளிநொச்சி ம.வி.), பு.டிலானி (பரந்தன் இ.ம.வி.), க.அனுசியா (நாச்சிக்குடா அ.த.க.பா)

பிரிவு 1 - ஆக்கத்திறன் வெளிப்பாடு குறைகூறுதல்

ஜி.சுஜிந்தனன் (வட்டக்கச்சி ம.வி), மு.குகராம் (பளை மத்திய கல்லூரி), ச.சிந்துஜன் (இராமநாதபுரம் கிழக்கு அ.த.க.பா.).

பிரிவு 1- பேச்சு

து.சங்கவி (கிளி. புனித திரேசா பெண்கள் கல்லூரி), த.தமி ழினி (பிரமந்தனாறு ம.வி), மோ,அர்ச்சனா (கறுக்காய்த்தீவு ம.வி.).

பிரிவு 2 - பேச்சு

ந.அபிராமி (திருவையாறு ம.வி), மு.ரட்சனா (புன்னை நீராவி அ.த.க.பா), இ.நிதர்சன் (சோரன்பற்று கணேசா வித்தி.)

பிரிவு 3 - பேச்சு

க.பவித்திரா (கிளிநொச்சி ம.வி), சு.யுகேதன் (முருகானந்தா ம.வி), ஈ.கீர்த்திகா (பூநகரி ம.வி.).

பிரிவு 4 - பேச்சு

ம.ஒலிசியா (பிரமந்தனாறு ம.வி.), அ.கார்த்திகா (பூநகரி ம.வி.), மோ.அனுசாயினி (அக்கராயன் ம.வி.).

பிரிவு 5 - பேச்சு

செ.கௌசிகா (கிளிநொச்சி மத்திய கல்லூரி), வி.சிந்தா தேவி (கறுக்காய்த் தீவு ம.வி), ச.சங்கீதா (முருகானந்தா ம.வி.).

பிரிவு 1 - பேச்சு, பாவோதல்

கு.ஜெனாளினி (முருகானந்தா ம.வி.), சு.யதுர்சிகா (இராமநாதபுரம்கிழக்கு அ.த.க.பா.), ஜெ.கிருசாந்தினி (ஞானிமடம் அ.த.க.பா.).

(முற்றும்) (க-405)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலாவதியான பொருள்களை விநியோகித்தால் ப.நோ.கூ.சங்கங்கள் மீது நடவடிக்கை

## எச்சரிக்கை விடுத்தார் கிளிநொச்சி நீதிவான்

அக்கராயன், ஜூன் 15

மக்களுக்கு விநியோகிக்கும் உணவுப்பொருள்கள் மற்றும் மென்பானங்கள் என்பவற்றைத் திகதிகள் காலாவதியான நிலையில் விநியோகித்தால் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென எச்சரிக்கை விடுத்தார் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் பெ.சிவகுமார்.

கரைச்சி வடக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளையொன்றில் திகதிகள் காலாவதியான உணவுப் பொருள்களும் மென்பானங்களும் கண்டு பிடிக்கப்பட்டு இது தொடர்பான விசாரணை கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தில் நடைபெற்ற போதே அவர் இந்த எச்சரிக்கையை விடுத்தார்.

பலநோக்குக் கூட்டுறவுச் 'சங்கங்கள் மக்களுக்காகப் பணியாற்றவேண்டும். இதனை விடுத்து திகதிகள் காலாவதியான பொருள்களை விநியோகித்தல் ஆகாது. தென்னிலங்கையில் அண்மையில் திகதி காலாவதியான மென்பானத்தை அருந்திய சிறுமி ஒருவர் உயிரிழந்ததைச் சுட்டிக்காட்டிய நீதிவான் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் தவறான நடவடிக்கைகளில் ஈடுபடக் கூடாதெனவும் தெரிவித்தார்.

(க-410)

# தெரு விளக்குகளை ஒளிரச் செய்ய மன்னார் நகரசபை நடவடிக்கை

மன்னார், ஜூன் 15

மன்னார் நகரசபைக்குட்பட்ட பகுதிகளில் பாவனைக்குதவாத நிலையில் பழுதடைந்து காணப்படுகின்ற தெரு மின் விளக்குகளை மீண்டும் ஒளிரச் செய்யும் நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாக மன்னார் நகர சபையின் உப தலைவர் செ.ஜேம்ஸ் ஜேசுதாசன் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்:-

மன்னார் நகரசபைக்குட்பட்ட பகுதிகளில் சுமார் 125 இற்கும் மேற்பட்ட தெருமின் விளக்குகள் ஒளிராத நிலையில் பழுதடைந்து காணப்படுகின்றன. இவற்றை மீண்டும் இயங்கச் செய்யும் முகமாக மன்னார் நகரசபை, மன்னார் மின்சார சபையின் மின்அத்தியட்சகருடன் தொடர்பு கொண்டுள்ளது. வெகு விரைவில் இந்த வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இதேவேளை மன்னார் பிரதான பாலத்தில் உள்ள மின் கம்பங்களுக்கு மின் குமிழ்கள் பொருத்தும் நடவடிக்கைகளும் மேற்கொள்ள இருப்பதாக மன்னார் நகர சபையின் உப தலைவர் ஜேம்ஸ் ஜேசுதாசன் மேலும் தெரிவித்தார். (க-601)

# 'மெகாநைற்' என்னும் பெயரில் இரவு விருந்துபசார நிகழ்வு மன்னாரில்

மன்னார், ஜூன் 15

மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையின் பழைய மாணவர்கள் கல்லூரி தினத்தை முன்னிட்டு 'மெகா நைற்' என்னும் பெயரில் இரவு விருந்துபசார நிகழ்வொன்றை ஏற்பாடு செய்துள்ளனர்.

இந்த நிகழ்வு எதிர்வரும் 22 ஆம் திகதி இரவு 7 மணிக்குப் பாடசாலை மைதானத்தில் நடைபெறவிருக்கின்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொள்ள விரும்பும் கல்லூரியின் பழைய மாணவர்கள் எதிர்வரும் 18 ஆம் திகதிக்கு முன்னர் நுழைவுச் சீட்டினைப் பெற்றுத் தமது பங்குபற்றுதலை உறுதிப்படுத்துமாறு பழைய மாணவர் சங்கச் செயலாளர் எஸ். மருத்தீன் தெரிவித்தார்.

(க-601)

## விருந்தினர் கூட்டம்...



வீரர்களுக்குப் பரிசில்கள்: கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளுக்கிடையேயான விளையாட்டுப் போட்டியின் இறுதி நாளன்று கலந்து கொண்ட விருந்தினர்கள் விழாமேடையில் அமர்ந்திருக்கின்றனர். (405)

# வீட்டுத்திட்ட கடன் உதவிகள்

யாழ்ப்பாணம், ஜூன் 15

ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதி உதவியுடன் வவுனியா மாவட்டத்தில் 3000 பயனாளிகளுக்கு வீட்டுத் திட்டக் கடன் உதவிகள் வழங்கப்படவுள்ளன.

வவுனியா மாவட்டத்தில் பின்தங்கிய கிராமங்களை உள்ளடக்கிய பிரதேசங்களில் அடிப்படை வசதிகளைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் ஐரோப்பிய ஒன்றியம் இந்தத் திட்டத்தை மேற்கொண்டுள்ளது.

இதன் முதற்கட்டமாக ஒவ்வொரு பயனாளிக்கும் 25 ஆயிரம் ரூபா வழங்குவதற்கான ஏற்பாடுகள் இடம் பெற்று வருகின்றன.

வவுனியா மாவட்ட அரச அதிபரின் தலைமைத்துவத்தின் கீழ் அந்தந்தப் பிரதேசச் செயலர் பிரிவுகளில் உரிய பயனாளிகளுக்கு இந்தக் கடன் உதவிகள் வழங்கப்படவுள்ளன.

(க-313)

# திறந்தவெளிக் குளிப்பிடமாக கரடிப்போக்கு வாய்க்கால்

கிளிநொச்சி, ஜூன் 15

கரடிப்போக்குச் சந்தியிலுள்ள வாய்க்கால் திறந்த வெளிக் குளிப்பிடமாக மாறியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏ-9 வீதிக்கு அருகிலுள்ள கரடிப் போக்குச் சந்தி வாய்க்காலில் சுற்றுலாப் பயணிகள் பெருமளவில் தினமும் நீராடுவதைக் காணமுடிகிறது. மேலும் இந்த இடத்தில் குளிக்குமிடம் என்ற அறிவித்தல் பலகையும் நடப்பட்டுள்ளது.

ஆனால் இங்கு குளிப்பவர்கள் ஆடைகளை மாற்றுவதற்கென மறைவிடங்கள் எதுவும் அமைக்கப்படவில்லை. இதனால் ஆண்கள், பெண்கள் என்ற வேறுபாடின்றி அனைவரும் வீதியோரமாக நின்று உடை மாற்றுவதைக் காணமுடிகின்றது.

இதனால் குளிப்பவர்களைப் பார்ப்பதற்கென்றே சிலர் இந்த இடத்தில் கூடுகின்றனர். இந்த இடத்தில் வேண்டத்தகாத சம்பவங்கள் நிகழ்வதற்கு முன்னதாக அதிகாரிகள் உரிய ஒழுங்குகளை மேற்கொள்ள வேண்டும் என்பதே அனைவரதும் வேண்டுகோளாகவுள்ளது.

(க- 426)

# வருமான இழப்பைச் சந்திக்கும் பூநகரி பசுமாடு வளர்ப்போர்

கிளிநொச்சி, ஜூன் 15

கிளிநொச்சி மாவட்டம் பூநகரிப் பகுதியில் பசுக்களை வளர்த்துப் பால் விற்பனையில் ஈடுபடுவோர் கால்நடை வளர்ப்புத் தொடர்பான அடிப்படை அறிவு இல்லாததால் உரிய வருமானத்தை ஈட்ட முடியாத நிலையில் உள்ளனர்.

இவர்கள் பால் உற்பத்தியை அதிகரித்தல், பசுக்களைச் சினைப்படுத்துதல், நோய் அறிகுறிகளை இனம் காணுதல் போன்றவற்றில் போதிய அறிவு இல்லாதவர்களாகவே காணப்படுகின்றனர். இதனால் பசு மாடுகளை வளர்த்து அவற்றின் மூலமாக உரிய வருவாயை ஈட்ட முடியாத நிலையிலேயே இவர்கள் காணப்படுகின்றனர்.

மேலும் தற்போது இந்தப் பகுதியில் இவர்களால் உற்பத்தி செய்யப்படும் பாலைச் சந்தைப்படுத்துவதற்கான வசதிகள் உருவாகியுள்ளன. ஆனால் உரிய வருவாயைக் கால்நடை வளர்ப்பாளர்களால் பெறமுடியவில்லை.

எனவே உரிய தரப்பினர் இந்த விடயத்தில் கால்நடை வளர்ப்பவர்களுக்கு உதவ வேண்டுமெனக் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

(க-406)

# வன்னேரிக் குளத்தில் சீரில்லாத தபால் சேவை

கிளிநொச்சி, ஜூன் 15

வன்னேரிக்குளம் உபதபாலகச் செயற்பாடுகள் சீரின்மையால் மக்கள் கடிதங்களைப் பெறுவதில் சிரமங்களை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மக்கள் மீள்குடியமர்ந்ததன் பின்னர் இந்த உபதபால் நிலையத்தில் ஊடாக விநியோகிக்கப்படும் கடிதங்கள் தபால் ஊழியர்களால் உரியவர்களுக்கு அல்லது இலக்கம் இடப்பட்ட விலாசத்தில் கையளிக்கப்படுவதில்லையென மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதற்கான காரணத்தைக் கேட்டால் வீதிகள் சரியில்லை, மணல் பாதை என்று பல்வேறு காரணங்களைக் கூறி வேறு நபர்களிடம் அல்லது அருகில் உள்ள கடைகளில் தபால் ஊழியர்கள் கடிதங்களைக் கொடுத்து விட்டுச் செல்வதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

முக்கியமான ஆவணங்கள், பதிவுத்தபால் போன்றவற்றை உரியவர்களிடம் ஒப்படைக்காது வேறு நபர்களிடம் கையளிப்பது முறையற்றது.

இதனால் தாம் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளதெனப் பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்துள்ளனர்.

சீரிய அதிகாரிகள் இதனைக் கவனத்தில் கொள்ள வேண்டுமென்பதே மக்களின் விருப்பமாகும் (க-10)

# கனரக வாகனங்களின் பாவனையால் கேரதீவு - மன்னார் வீதி மோசமாக சேதம்

பூநகரி, ஜூன் 15

அதிகரித்த கனரக வாகனங்களின் பாவனை காரணமாகக் கேரதீவு- மன்னார் வீதி மோசமாகச் சேதமடைந்து காணப்படுகின்றது.

யாழ்ப்பாணத்தையும் பூநகரியையும் இணைக்கும் பிரதான வீதியாக இது விளங்குகின்றது. மக்களின் இலகு வாகனங்கள் பிரயாணங்களை மேற்கொள்வதற்கு ஏற்றவகையில் வீதி புனரமைக்கப்பட்டு கேரதீவுப் பாலமும் திறந்து வைக்கப்பட்டு மக்கள் பிரயாணத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

ஆனால் தற்போது இந்த வீதியால் கனரக வாகனங்கள் அதிகளவில் செல்வதால் இது மோசமாகச் சேதமடைந்துள்ளது.

இந்த வீதி புனரமைக்கப்பட்ட பின்னர் அரச உத்தியோகத்தர்கள் பூநகரி, மன்னார், கிளிநொச்சி ஆகிய பகுதிகளுக்கு இலகுவாகச் சென்று வந்தனர். ஆனால் இப்போது வீதியிருக்கும் நிலையில் இவர்கள் மிகுந்த இடர்களுடன் தமது பிரயாணத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

மாரிகாலம் ஆரம்பிக்கும் பட்சத்தில் இந்த வீதியினூடாகப் பயணிக்க முடியாத நிலையே தோன்றும்.

உரிய அதிகாரிகள் இதில் கூடிய கவனமெடுத்து இந்த வீதியைப் புனரமைத்து வழங்குமாறு இந்த வீதியால் பயணிக்கும் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (க-426)

# முன்னுதாரணம் உள்ளவர்களாக சிறார்கள் வளர வேண்டும்

கிளிநொச்சி, ஜூன் 15

எதிர்காலத்தில் முன்னுதாரணமுள்ளவர்களாக இன்றைய சிறுவர்கள் வளர வேண்டும் எனக் கிளிநொச்சி ஜெயந்திநகர் கிராம அலுவலர் திருமதி மீ.பத்மநாதன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி ஜெயந்திநகர் புதிய பொதிகை முன்பள்ளி சிறார்களின் மெய்வன்மைத் திறனாய்வுப் போட்டிகள் கடந்த 29 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு முன்பள்ளி மைதானத்தில் நடைபெற்றன. இந்த நிகழ் வில் கலந்து கொண்ட கிராம அலுவலர் திருமதி மீ.பத்மநாதன் உரையாற்றுகையில்:

இந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த இந்தச் சிறார்கள் இங்கேயே கல்வி கற்று வருகின்றனர். இவர்களின் எதிர்காலம் ஒளிமயமானதாக அமைய வேண்டும். அத்தோடு இந்தக் கிராமத்தில் முன்மாதிரியானவர்களாக இவர்களை வளர்க்க வேண்டும்.

மக்கள் மீள்குடியமர்ந்து ஒருவருட நிறைவில் இந்த நிகழ்வு நடைபெறுவது எமது கிராமத்துக்குப் பெருமையாக உள்ளது.

எதிர்காலத்தில் இந்தச் சிறார்களை முன்னுதாரணமுள்ளவர்களாக உருவாக்க வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வில் கிராம அலுவலர், பாடசாலை அதிபர், கிராம மக்கள், நலன்விரும்பிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (க-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இலங்கை இலக்கியப் பேரவையின் ஏற்பாட்டில் யாழ். இலக்கிய வட்டம் நல்லை ஞானசம்பந்தர் ஆதீன மண்டபத்தில் நடத்திய சிறந்த நூல்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வில் கலாநிதி க.குணராசா (செங்கை ஆழியான்), பேராசிரியர் அ.சண்முகதாஸ் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராசா, நல்லூர் பிரதேச சபை முன்னாள் திட்டமிடல் பணிப்பாளர் ரவீந்திரசர்மா ஆகியோர் அமர்ந்திருக்கின்றனர். 2009 ஆம் ஆண்டு சிறந்த ஆய்வுத்துறைக்கான விருதை கலாநிதி எஸ்.ஜெபநேசனுக்கு பேராசிரியர் அ. சண்முகதாஸ் வழங்குகிறார். (வ-311-7)

# 26 வருடகால சேவையை நிறைவு செய்த இலக்கியப் பேரவையின் பணி தொடரட்டும்

## பேரவைச் செயலர் சிவதாசன்

யாழ்ப்பாணம்,ஜூன் 15

யாழ். இலக்கியப் பேரவை 27ஆவது ஆண்டில் காலடி பதிக்கும் இந்த வேளையில் 260 நூலாசிரியர்களைக் கௌரவித்துப் பெரும்பணியை ஆற்றியுள்ளது. தொடர்ந்தும் இலக்கியப் பேரவை இந்தப் பணியை மேற்கொள்ளவுள்ளது என்று யாழ். இலக்கியப் பேரவையின் செயலாளர் சி.சிவதாசன் தெரிவித்தார்.

யாழ்.இலக்கிய வட்டத்தால் இலங்கை இலக்கியப்பேரவையின் ஏற்பாட்டில் 2008-2009 ஆம் ஆண்டுகளில் வெளிவந்த சிறந்த நூல்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை நல்லை ஞானசம்பந்தர் ஆதீன மண்டபத்தில் கலாநிதி க.குணராசா தலைமையில் இடம்பெற்றது.

இதில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். இந்த நிகழ்வில் அவர் தொடர்ந்து உரை நிகழ்த்துகையில்:

நாவல், கவிதை, காவியம், சிறுகதை, சிறுவர் இலக்கியம், நாடகம், சமயம், பல்துறை ஆய்வு போன்ற நூல்களை ஆற்றல் மிக்கவர்களால் மதிப்பீடு செய்தே இந்த விருதுகளை வழங்கி வருகின்றோம்.

ஒவ்வொரு படைப்பாளிகளும் ஒவ்வொரு திறமையானவர்களாக உள்ளனர். மேலும் புது முகநூல் ஆசிரியர்களையும் நாம் கௌரவித்துச் சான்றிதழ்களை வழங்கி வருகிறோம்.

இந்த இலக்கியப் பேரவை ஆரம்பிக்கப்பட்ட ஆண்டுகளிலிருந்து தலைவராக கலாநிதி க.குணராசா செயற்பட்டு வருகின்றார்.

கடந்த 2005 ஆம் ஆண்டு பிற்பகுதிகளில் அதிகமாக யாழ்ப்பாணம், கொழும்பு, மலையகம் ஆகிய பகுதிகளிலிருந்து இலக்கிய நூல்கள் வெளிவருகின்றன.

போர்ச் சூழலில் யாழ். மாவட்ட எழுத்தாளர்களின் பேனாக்களும் மூடப்பட்டு இருந்தன. இனிவரும் காலங்களில் இவர்களுடைய நூல் ஆக்கங்களும் ஆற்றல் மிகுந்தனவாக இருக்கும் என எதிர்பார்க்கிறோம்.

இந்த வருடத்தில் பல புதிய எழுத்தாளர்களை நாம் கௌரவித்துள்ளோம். அத்துடன் வெளி மாவட்ட எழுத்தாளர்கள் பரிசுகளைப் பெற்றுள்ளனர். ஒவ்வொரு வருடமும் 200 இற்கும் மேற்பட்ட பல்துறை சார்ந்த நூல் படைப்புக்கள் வெளிவருகின்றன.

இலக்கியத் துறையில் விற்பன்னர்களான ஒவ்வொருவரும் திகழ வேண்டும். அவர்களை அறிமுகம்செய்யவும், கௌரவிக்கவும், பரிசில்கள் வழங்கவும் இந்தப் பேரவை ஏற்பாடு செய்யும். எனவே, பல்துறைசார்ந்தவர்களாக வாழவேண்டும். நல்ல எழுத்தாளர்களாகத் திகழ வேண்டும் என்பதே இந்தப் பேரவையின் விருப்பமாகும் என்றார் அவர்.

(வ-311-7)

# வடக்கில் அதிகமான வைத்தியசாலைகள் மீள இயங்குவதால் சுகாதார சேவையின் விஸ்தரிப்பு அவசியமானதாகும்

## வடமாகாண ஆளுநர்

யாழ்ப்பாணம்,. ஜூன் 15

வடமாகாணத்தில் 90 வீதமான வைத்தியசாலைகள் மீள இயங்க ஆரம்பித்துள்ளதால் சுகாதார சேவையை விஸ்தரிக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

இதன் முதற்கட்டமாக வைத்தியசாலைகளில் நிலவும் ஆளணிப் பற்றாக்குறைகளை நிவர்த்தி செய்யப்படவேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி.

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் அண்மையில் இடம் பெற்ற குடும்பநலத் தாதியர்களின் தற்காலிக நியமனம் தொடர்பான கலந்துரையாடல் நிகழ்வில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரை நிகழ்த்தும் போது

அரச கொள்கைகளின் அடிப்படையில் வடமாகாணத்தில் சுகாதாரத் துறையில் அதியுயர்ந்த சேவைகளை வழங்க வேண்டியுள்ளது.

ஏனெனில் கடந்த காலங்களில் இயங்காத நிலையில் இருந்த வைத்தியசாலைகள் மீள இயங்க ஆரம்பித்துள்ளன.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, பூநகரி,முழங்காவில், மன்னார் போன்ற பிரதேசங்களில் இயங்குகின்ற வைத்தியசாலைகளில் ஆளணிப்பற்றாக்குறை உட்பட பல்வேறு தேவைகள் காணப்படுகின்றன.

கடந்த ஒன்றரை வருடங்களில் 150 வைத்தியர்கள் மற்றும் 260 தாதியர்கள் புதிதாக நியமனம் பெற்று இருந்தனர்.

தற்போது பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் ஏற்பாட்டில் புதிதாக நியமனம் வழங்கும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

மக்களுடன் ஒன்றிணைந்து சேவைபுரியும் கடமையுணர்வு குடும்பநல தாதியர்களிடம் உள்ளது. நோய்பற்றிய விழிப்புணர்வையும் ஆலோசனைகளையும் இவர்களால்தான் வழங்கமுடியும் .

இதன் நோக்கமாக 222 குடும்ப நலத் தாதியர்களுக்கு தற்காலிக நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன- என்றார் அவர். (வ-313)

## விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், ஜூன் 15

யாழ்ப்பாணம் உயர் தொழில் நுட்பவியல் நிறுவனத்தால் 2012 ஆம் ஆண்டு உயர் தேசிய பொறியியல் டிப்ளோமா கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்தக் கற்கை நெறிக்கு விண்ணப்பிப்போர் ஜி.சீ.ஈ. உயர் தரத்தில் கணிதத் துறையில் சித்தியடைந்திருப்பதுடன், ஜி.சீ.ஈ. சாதாரண தரத்தில் ஆங்கில பாடத்தில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

மேற்படி தகுதியுடைய விண்ணப்பதாரிகள் யாழ்ப்பாணம் உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்தில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு பணிப்பாளர் அறிவித்துள்ளார். (வ-313)

## தமிழ்ப் பேச்சுப் போட்டி

யாழ்ப்பாணம்,ஜூன் 15

மானிப்பாய் இந்துக் கல்லூரியின் முன்னாள் தமிழ் ஆசிரியை காலஞ்சென்ற திருமதி கிருபாநிதி பவசிங்கத்தின் ஞாபகார்த்தமாக தமிழ்ப் பேச்சுப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

போட்டிகளில் பங்குபற்றுவோர் வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளில் கற்பவர்களாகவும் தரம் 9 முதல் ஜி.சீ.ஈ.உயர்தரம் வரை கற்பவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

அத்துடன், போட்டி இடம் பெறும் தினத்தன்றே பேச்சுப் போட்டிக்கான தலைப்புகள் வழங்கப்படுவதுடன் இடம் பெறும் பேச்சு 10, 12 நிமிடங்களுக்கு உட்பட்டதாகவும் இருத்தல் வேண்டும்.

ஆர்வமுடைய மாணவர்கள் முழுப்பெயர், முகவரி, பிறந்த திகதி, கற்கும் தரம், தொலைபேசி இலக்கம்,கற்கும் பாடசாலை,பாடசாலையின் தொலைபேசி இலக்கம் என்பவற்றை மாதிரி விண்ணப்பப்படிவமாகத் தயார் செய்து பாடசாலை அதிபரின் உறுதிப்படுத்தலுடன் நாளை வியாழக்கிழமைக்கு முன்னதாக 'செயலாளர், பழைய மாணவர் சங்கம், மானிப்பாய் இந்துக் கல்லூரி, மானிப்பாய்' என்னும் முகவரிக்குத் தபாலிலோ நேரடியாகவோ ஒப்படைக்குமாறு சங்கச் செயலாளர் அறிவித்துள்ளார்.

போட்டியில் வெற்றிபெறும் மாணவர்களுக்கு முதலாம் பரிசாக 15 ஆயிரம் ரூபாவும் இரண்டாம் பரிசாக 10 ஆயிரம் ரூபாவும் மூன்றாம் பரிசாக 5ஆயிரம் ரூபாவும் ஐந்து ஆறுதல் பரிசில்களாகத் தலா ஆயிரம் ரூபாவும் வழங்கப்படவுள்ளன. (வ-313)

# தெல்லிப்பழைக் கோட்ட தமிழ்த்தினப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், ஜூன் 15

தெல்லிப்பழை கோட்டமட்டத் தமிழ்த் தினப் போட்டி முடிவுகள் நேற்றைய உதயனில் வெளியாகின. அவற்றின் தொடர்ச்சி இங்கு பிரசுரமாகிறது .

### குறு நாடகம்

**தரம்- 10,11**

ஜெயக்குமார் கௌதமி (அளவெட்டி அருணோதயக் கல்லூரி), கனகலிங்கம் கௌசலை (அளவெட்டி அருணாசலம் வித்தியாலயம்), சி.தனுராஜ் (தெல்லிப்பழை யூனியன் கல்லூரி).

### குறு நாடகம்

**தரம்- 12,13**

ஜெயதாஸ் கனிஸ்ரா (அளவெட்டி அருணோதயக் கல்லூரி), ப.தபோசிகா( வயாவிளான் மத்திய மகாவித்தியாலயம்), ம.கல்பனா ( தெல்லிப்பழை யூனியன் கல்லூரி).

### கவிதை

**தரம்- 10,11**

கோபாலசுந்தரம் சங்கீதா (தெல்லிப்பழை யூனியன் கல்லூரி), சிவனேஸ்வரன் சிவராகி ( வயாவிளான் மத்திய மகாவித்தியாலயம்), சிவப்பிரகாசம் நிருஷாந்( கீரிமலை நகுலேஸ்வரா மகாவித்தியாலயம்).

### கவிதை

**தரம்- 12,13**

சௌந்தரராஜன் பிரதர்சனா (தெல்லிப்பழை யூனியன் கல்லூரி), செல்வக்குமரன் சர்வகா (தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி), சந்திரகுமார் சஷிரா (மல்லாகம் மகாவித்தியாலயம்).

### சிறுகதை

**தரம்- 11,12**

தயாபரன் டிலக்சன் (அளவெட்டி அருணாசலம் வித்தியாலயம்), கைலாசநாதன் ஜீவாஞ்சலி( நகுலேஸ்வரா மகாவித்தியாலயம்), சிவானந்தராசா வற்சாயினி (இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயம்).

### சிறுகதை

**தரம்- 12,13**

கிருஸ்ணமூர்த்தி சுகன்னியா (மல்லாகம் மகாவித்தியாலயம்), உதயகுமார் பகீரத்தனா (வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம்), செ.கீர்த்தனா (தெல்லிப்பழை யூனியன் கல்லூரி).

### வாசிப்பு

**தரம்- 4,5**

லோகேஸ்வரன் கிரிசதன் (அளவெட்டி தெற்கு றோ.க. த.க பாடசாலை), நிமலதாசன் அஞ்சனா (வயாவிளான் மத்திய மகாவித்தியாலயம்), தயானந்தன் சங்கவி (தங்கம்மா அப்பாக்குட்டி கனிஷ்ட வித்தி.).

### வாசிப்பு

**தரம்- 6,7**

உதயசீலன் கபியங்கா (தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி), ச.நிருதீபன் (குளமங்கால் றோ.க. த.க.பாடசாலை),தெ.தனுஜா (அளவெட்டி சீனன்கலட்டி அ.த. க. பாடசாலை).

### ஆக்கத்திறன்

**தரம்- 4,5**

கணேசானந்தன் வித்தகன் (தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி), தில்லைநாதன் அட்சயன் ( அளவெட்டி அருணோதயக் கல்லூரி), ரஞ்சித்குமார் சுஜீபன்( அளவெட்டி தெற்கு றோ.க.வித்தியாசாலை). (வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பு தொடக்கம் பொத்துவில் வரை ரயில் சேவையை விஸ்தரிக்கக் கோரிக்கை

## தேசிய முஸ்லிம் கவுன்ஸிலில் தீர்மானம் நிறைவேற்றம்

மட்டக்களப்பு, ஜூன் 15

மட்டக்களப்பு தொடக்கம் பொத்துவில் வரையான பிரதேசங்களுக்கு ரயில் சேவையை விஸ்தரிப்புச் செய்யுமாறு ஜனாதிபதியைக் கோரும் தீர்மானமொன்றை தேசிய முஸ்லிம் கவுன்ஸில் நிறைவேற்றியுள்ளது.

அத்துடன் கல்முனையில் இயங்கிவந்த மேலதிக அரச அதிபர் அலுவலகத்தை மீண்டும் செயற்படுத்துவதற்கு ஆவன செய்யுமாறும் முஸ்லிம் கவுன்ஸில் ஜனாதிபதியைக் கேட்டுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை சாய்ந்தமருது ஜேர்னல் பிளேஸில் நடைபெற்ற கவுன்ஸிலின் அரசியல் பீடக் கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில் பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்பட்டு அவை தொடர்பாகத் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன. அவை வருமாறு:

* கல்வி அமைச்சின் இடமாற்றக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு கிழக்கு மாகாணத்திற்கென ஆசிரியர் இடமாற்றக் கொள்கையொன்று வகுக்கப்பட்டு அதன் பிரகாரம் ஆசிரியர் இடமாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். அது அமுல்படுத்தப்படும்வரை தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்ற ஆசிரியர் இடமாற்றங்கள் யாவும் இடைநிறுத்தப்பட வேண்டும்.
* அம்பாறை மாவட்டத்தில் ஆழிப் பேரலை அனர்த்தத்தால் வீடுகளை இழந்த மக்களுக்கு மாற்று வீடுகளை வழங்குவதற்கான நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்படவேண்டும்.
* அம்பாறை கரையோர மாவட்டம் உருவாக்கப்படுவதற்கான பூர்வாங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.
* சகல அதிகாரங்களும் கொண்ட மாவட்டக் கல்வி அலுவலகங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும்.
* கைவிடப்பட்டிருக்கும் கல்முனை நகர அபிவிருத்தித் திட்டத்திற்கான நடவடிக்கைகள் மீளவும் ஆரம்பிக்கப்பட்டு அந்தத் திட்டம் துரித கதியில் நிறைவேற்றப்பட வேண்டும்.
* கல்முனை மாநகர சபைக்கு சகல வசதிகளும் கொண்ட நவீன கட்டடத் தொகுதி அமைக்கப்பட வேண்டும்.
* மட்டக்களப்பு தொடக்கம் பொத்துவில் வரையான பகுதிக்கு ரயில்பாதை அமைக்கும் பழைய திட்டத்திற்கு புத்துயிர் அளித்து இப்பிராந்தியத்திற்கான ரயில் சேவை விஸ்தரிக்கப்பட வேண்டும்.
* அம்பாறை கரையோரப் பிரதேசத்திற்கென தனியான உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் ஏற்படுத்தப்பட வேண்டும்.

இந்தக் கோரிக்கைகளை வலியுறுத்தி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் சம்பந்தப்பட்ட அமைச்சர்களுக்கும் மகஜர்களை அனுப்பி வைப்பதென கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது என கவுன்ஸிலின் செயலாளர் நாயகம் செயிட் ஏயெஸ் மௌலானா தெரிவித்துள்ளார். (ச-21)

# கிழக்கு அபிவிருத்திக்கு புரூணை அரசின் உதவிகள்

## ஹிஸ்புல்லா- சித்தீக் அலி சந்திப்பில் உடன்பாடு



மட்டக்களப்பு, ஜூன் 15

இலங்கை, இந்தியா, நேபாளம் ஆகிய நாடுகளுக்கான புரூணை தூதர் டாக்டர் டாட்டோ பதுக்கா சித்தீக் அலி, சிறுவர் அபிவிருத்தி மகளிர் விவகாரப் பிரதியமைச்சர் அல்ஹாஜ் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாவை அண்மையில் அவரது அமைச்சில் சந்தித்து கலந்துரையாடினார். கிழக்கு மாகாண அபிவிருத்தி, விதவைகள், அநாதைகள், மகளிர் ஆகியோருக்கான வாழ்வாதார அபிவிருத்தி, சிறுவர் அபிவிருத்தி, வீடில்லாப் பிரச்சினைக்கான தீர்வு ஆகியவற்றுக்கு புரூணையின் உதவிகளைப் பெற்றுக்கொள்வது தொடர்பாகவும், இன்னும் பல்வேறுபட்ட உதவிகளைப் பெற்றுக்கொள்வது தொடர்பாகவும் இந்தக் கலந்துரையாடலில் ஆராயப்பட்டது.

புரூணை தூதர், கிழக்கு மாகாண அபிவிருத்திக்கு எதிர்காலத்தில் தம் நாடு உதவும் என வாக்குறுதியளித்தார். அத்துடன் இது தொடர்பாகத் தொடர்ச்சியான கலந்துரையாடல்களை நடத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டது. இந்தச்சந்திப்பில் பிரபல வர்த்தகர் முஸ்லிம் ஹாஜியார், புரூணை நாட்டினுடைய உதவித் தூதர், கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் ஜனாப் ஜமால்தீன் ஆகியோரும் கலந்துகொண்டனர். (ச)

# உபகுழு நியமனம்

அம்பாறை, ஜூன் 15

கல்முனை மாநகரசபைப் பிரதேசங்களில் வடக்கு,கிழக்கு உள்ளூர் சேவைகள் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்திப் பணிகளை மேற்பார்வை செய்வதற்கும் வழிநடத்துவதற்குமென உப குழுவொன்று நிறுவப்பட்டுள்ளது.

மாநகராட்சி முதல்வர் செனட்டர் எஸ். இஸட்.எம். மசூர் மௌலானா தலைமையிலான இந்தக்குழுவில் ஆணையாளர், நிர்வாக உத்தியோகத்தர், உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் பிரதிநிதி ஒருவர், பிரதி முதல்வர் ஆகியோருடன் மேலும் மூன்று உறுப்பினர்கள் அங்கம் வகிக்கின்றனர். மாநகரசபையின் ஆளும் முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் உறுப்பினர் பி.ரி. ஜமால்தீனும், எதிரணி சார்பில் தமிழரசுக் கட்சி உறுப்பினர் விஜயரட்ணமும், அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் சீ.எம்.முபீத் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

வடக்கு,கிழக்கு உள்ளூர் சேவைகள் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் கல்முனைப் பிராந்தியத்தில் 20 கோடி ரூபா செலவில் அபிவிருத்தி உட்கட்டமைப்பு வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன. இதில் முதல் கட்டமாக 3கோடி 10 லட்சம் ரூபா நிதியொதுக்கப்பட்டுள்ளது என முதல்வர் மசூர் மௌலானா தெரிவித்தார். (ச-30)

## திறப்பு....



தம்பலகாமம் கோயிலடி வாராந்தப் பொதுச் சந்தை புனரமைக்கப்பட்டு கடந்த சனிக்கிழமை பிரதேசசபை தவிசாளர் எஸ்.எம்.எஸ்.எம். சுபியானினால் நாடாவெட்டி திறந்து வைக்கப்படுகின்றது.

# பஸ் நிலையம் விரைவில் மீள் நிர்மாணம்

அம்பாறை, ஜூன் 15

கல்முனை நகர தனியார் பஸ் நிலையத்தை விரைவில் மீள்நிர்மாணம் செய்வதற்கு கல்முனை மாநகரசபை நடவடிக்கை எடுத்து வருகிறது என மாநக முதல்வர் செனட்டர் எஸ்.இஸட். எம். மசூர் மௌலானா தெரிவித்தார்.

இதற்காக கிழக்கு மாகாண தனியார் பஸ் போக்குவரத்து அதிகாரசபை மூன்று மில்லியன் ரூபா நிதியை ஒதுக்கீடு செய்துள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கல்முனை நகரில் அமைந்துள்ள தனியார் பஸ் நிலையத்திற்கான தற்காலிக கொட்டில்கள் சேதமடைந்து பயணிகளின் பாவனைக்குதவாத நிலையில் உள்ளன. இதனால் கடந்த பல மாதங்களாகப் பயணிகளும் பஸ் நடத்துநர்களும் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இதனைக் கருத்திற்கொண்டே அந்தத் தனியார் பஸ் நிலையத்தை மீளமைப்பதற்கு மாநகரசபை நடவடிக்கை எடுத்துள்ளது. (ச)

# போதை மாத்திரை உண்ட மாணவர்கள் வைத்தியசாலையில்

தம்புள்ள,ஜூன்15

தம்புள்ள லேனதொர பிரதேச பாடசாலை மாணவர்கள் மூவர் போதை மாத்திரை உட்கொண்ட நிலையில் தம்புள்ள வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

பாடசாலை அதிபர் பொலிஸாருக்குத் தெரிவித்த தகவலின் பின் இந்த மூவரும் கைதுசெய்யப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போதும் மறுநாள் மாலையே போதை தெளிந்துள்ளது.

இவர்கள் ஆறொன்றுக்கு நீராடச் சென்றிருந்தபோது முன்பின் அறிமுகமற்ற நபரொருவர் இவர்களுக்கு நான்கு போதை மாத்திரைகளை விற்றுள்ளார் எனத் தெரியவந்துள்ளது. (ச)

# நீதிமன்றக் கட்டடத்தை தகர்த்துவிட்டு புதிதாக நிர்மாணிக்குமாறு பணிப்பு

கண்டி, ஜூன் 15

கண்டி, கலகெதர நீதிமன்றக் கட்டடத்தை புதிதாக நிர்மாணிப்பதற்கு உடன் நடவடிக்கை எடுக்குமாறு நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் பணிப்புரை விடுத்துள்ளார்.

அமைச்சர் ஹக்கீம் அண்மையில் கலகெதர நீதிமன்றத்தை அமைச்சு அதிகாரிகளுடன் நேரில் சென்று பார்வையிட்ட பின்னரே இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

மிகவும் பழமை வாய்ந்த இந்த நீதிமன்றக் கட்டடத்தின் கூரை, சுவர் என்பன பெரிதும் சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றன. ஆரம்பத்தில் கிராம நீதிமன்றமாக இருந்து பின்னர் அது சுற்றுலா நீதிவான் நீதிமன்றமாகச் செயற்பட்டு வந்தது. நீதியமைச்சர் ஹக்கீம் அதனை நிரந்தர நீதிமன்றமாக தரமுயர்த்தியிருந்த போதிலும், கட்டடம் அதிக சேதமடைந்து தூர்ந்து போயிருந்ததால் வழக்கு விசாரணைகளை அங்கு நடத்த முடியாதிருந்தது.

பழைமை வாய்ந்த கட்டடத்தை மீள் நிர்மாணம் செய்வதை விட அதனை முற்றாகத் தரைமட்டமாக்கிவிட்டு, நவீன வசதிகளுடன் கூடிய புதிய கட்டடத்தை நிறுவுவதால் இட நெருக்கடியையும் தவிர்க்கக் கூடியதாக இருக்கும் என அமைச்சர் ஹக்கீம் தெரிவித்தார்.

நீதியமைச்சின் உதவிச் செயலாளர் ஏ.கே.டி.அரந்தர, பொறியியலாளர் அகலேபொல ஆகியோர் அமைச்சர் ஹக்கீமுடன் சேதமுற்றிருந்த நீதிமன்ற கட்டடத்தை பார்வையிட்டு கணிப்பீடுகளை மேற்கொண்டனர். (ச)

# வைத்தியர் பற்றாக்குறை; சிகிச்சை வழங்குவதில் சிரமம்

களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலையில் வைத்தியர் பற்றாக்குறை காரணமாக நாளொன்றிற்கு சுமார் 150 நோயாளர்கள் வரை சிகிச்சை வழங்காமல் திருப்பி அனுப்பப்படுவதாக வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் குணசிங்கம் சுகுணன் தெரிவித்தார்.

மாவட்ட வைத்தியசாலையாக இருந்து ஆதார வைத்தியசாலையாக தரமுயர்த்தப்பட்டு 5 வருடங்கள் பூர்த்தி அடைந்த நிலையில் இன்னும் வைத்தியர்கள் நியமிக்கப்படவில்லை.

நாளொன்றுக்கு வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவில் 700 நோயாளிகளுக்கும் விடுதியில் தங்கியிருந்து சிகிச்சை பெறும் 200 நோயாளிகளுக்கும் மிகச் சிரமத்தின் மத்தியிலேயே சிகிச்சை வழங்கப்படுவதாக அவர் மேலும் தெரிவித்தார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



**மேடம்:**
இறைவழிபாட்டில் நாட்டம் செல்லும். உதவியாக இருந்த சிலரே தொல்லையாக மாறலாம். உங்களிடம் வாக்குக் கொடுத்த ஒருவர் இறுதி நேரத்தில் காலை வாரி விடலாம். அவசரச் செலவுகளுக்காகச் சிலரிடம் பணம் கடன் வாங்கலாம். உடல் ரீதியான சிறிய பாதிப்புகளை நினைத்து பெரிய அளவில் கவலைப்படுவீர்கள். வெறுப்பு உண்டாகும்.



**இடபம்:**
சிலருக்கு அவசரமான உதவிகளைச் செய்யலாம். பிள்ளைகளுக்கு வேண்டிய பொருள்களை வாங்க கணிசமான பணததைச் செலவிடலாம். புதிய சொத்துக்கள் வாங்கப் போட்ட திட்டம் பின்தள்ளிப் போகும். நீங்கள் செய்யவேண்டிய வேலை ஒன்றை மற்றவர்கள் மூலம் முடித்துக் கொள்வீர்கள். நீண்டகாலமாக நிலுவையில் இருந்த பிரச்சினை ஒன்றை முடிவுக்குக் கொண்டு வரலாம்.



**மிதுனம்:**
எதிலும் பரந்த மனப்பான்மையுடன் நடந்து கொள்வீர்கள். நண்பர்கள் சிலருக்கு முக்கியமான விடயங்களில் நல்ல யோசனை சொல்வீர்கள். அவசரமான செலவுகளுக்காக பொன், பொருள்களை அடகு வைக்கலாம். தேக ஆரோக்கியம் தெம்பு, உற்சாகம் தரும். மதிப்பு, கௌரவம் பார்த்து சில காரியங்களைச் செய்வீர்கள். நல்லது நடக்கும் நாள்.



**கடகம்:**
புதிய நண்பர்களின் அறிமுகம் கிட்டும். எந்த வேலையையும் சுறுசுறுப்பாகச் செய்யாமல் பின்னர் செய்ய லாம் என தள்ளி வைப்பீர்கள். பிள்ளைகள் பொறுப் போடு நடந்து உங்களைப் பெருமைப்படுத்துவர். விரும்பாத ஒருவரை வெளியிடங்களுக்குச் செல்லும் போது சந்திக்கலாம். பெண்கள் கணவரின் அன்பைப் பெறுவர். பிரியமானவர் சந்திப்பு நிகழும்.



**சிங்கம்:**
சிறிய வேலை ஒன்றை முடிக்க பல முறை அலையலாம். சிலருடன் தேவையற்ற விடயங்களைப் பேசி நேரத்தை வீணடிப்பீர்கள். நண்பர் ஒருவர் மற்றொரு நண்பரைப் பற்றி உங்களிடம் முறைப்பாடு சொல்லலாம். மனைவி மற்றும் பிள்ளைகள் விடயத்தில் கண்டிப்புடன் நடந்து கொள்வீர்கள். சக ஊழியர்களால் கடும் வேலைப்பளு நேரும்.



**கன்னி:**
குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை காணப்படும். சோம்பலுடன் இருக்காமல் ஏதாவது ஒரு வேலையைச் செய்து கொண்டிருப்பீர்கள். உறவினர் ஒருவர் உங்களிடம் யோசனை கேட்டுச் செயற்படலாம். பணவரவு உண்டு. உங்களுக்கு நெருக்கமானவர்களுடன் சந்தோஷமான அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வீர்கள். தன்னம்பிக்கை அதிகரிக்கும்.



**துலாம்:**
மனதை குடைந்து கொண்டிருந்த பிரச்சினை ஒன்று முடிவுக்கு வரும். முயற்சிகளில் ஆரம்பத்தில் தடை ஏற்பட்டாலும், பின்னர் வெற்றி பெறுவீர்கள். உடன் பிறந்த வர்கள் வழியில் சிறு மனஸ்தாபங்கள் ஏற்படலாம். மனைவி, குழந்தைகள் விருப்பங்களை நிறைவேற்றி வைப்பீர்கள். வீட்டுக்குத் தேவையான பொருள் ஒன்றை வாங்குவீர்கள்.



**விருச்சிகம்:**
புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். கடனுதவி பெற மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. தொழில் நிமித்தம் பிரிந்திருந்த குடும்ப உறுப்பினர்கள் ஒன்று சேரலாம். உங்களுக்குத் தேவையான பொருள் ஒன்று ஒரு இடத்தில் கிடைக்காமல் ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களுக்கு அலையலாம். கொண்டாட்டம் உண்டு.



**தனுசு:**
அசட்டுத் தைரியத்தில் சில காரியங்களைச் செய்வீர்கள். கணவன் மனைவி இடையே பிரச்சினைகளைத் தவிர்க்க வீண் பேச்சுக்களைத் தவிர்க்கவும். மற்றொருவரிடம் காரியம் சாதிக்க உறவினர் ஒருவர் உங்களின் உதவியை நாடி வரலாம். புதியவர்கள் சிலர் உங்களைத் தேடி வரலாம். உங்களிடம் வாக்குக் கொடுத்தவர்கள் அதைக் காப்பாற்றாமல் ஏமாற்றம் அடையலாம்.



**மகரம்:**
எதிர்கால நலனைக் கருத்தில் கொண்டு சில விடயங்களில் ஈடுபடுவீர்கள். வியாபாரிகளுக்கு கடன் மிகுதிகள் வசூலாகும். அரசு தொடர்பான காரியங்கள் இழுபறிக்குப் பின்னர் முடிவுக்கு வரும். மூத்த உடன் பிறப்புக்கள் உதவிகரமாக இருப்பர். எந்த வேலையையும் பொறுமை, நிதானமாகச் செய்வீர்கள். விலை உயர்ந்த பொருள்கள் வாங்குவீர்கள்.



**கும்பம்:**
குடும்பச் செலவுகளில் சிக்கனம் காட்ட வேண்டிய நாள். நேற்று செய்ய மறந்த வேலை ஒன்றால் இன்று அவதிகளுக்கு ஆள்படலாம். சக ஊழியர்கள் உங்களின் வேகத்திற்கு செயற்படாமல் கவனக்குறைவாகச் செயற்படுவதால் எரிச்சல், கோபம் அடையலாம். எந்த விடயத்திலும் குழப்பம் இல்லாமல் தெளிவான முடிவு எடுப்பீர்கள். ஆறுதலான நாள்.



**மீனம்:**
பெரிய பிரச்சினையாகுமோ என பயந்த விடயம் ஒன்று பிசுபிசுத்துப் போகலாம். எந்த விடயத்திலும் ஒன்றுக்கு பல முறை யோசித்துச் செயற்பட வேண்டும். பகட்டான ஆடை, ஆபரணங்கள் அணிவதில் நாட்டம் செல்லும். உங்களின் அனுபவம் ஒன்றை மற்றவர்களுக்கு அறிவுரையாகச் சொல்வீர்கள். இறை வழிபாடு அமைதி தரும்.

# இலங்கை - இந்தியா கூட்டறிக்கையால் வலுக்கிறது நெருக்கடி

**சண்டேலீடர் பத்திரிகையில் வெளியான அரசியல் பத்தியின் தமிழாக்கம் இது.**

மகிந்த ராஜபக்ஷவின் அனுமதியுடன் பீரிஸ், இலங்கை-இந்தியா கூட்டறிக்கையில் கையெழுத்திட்டுள்ள போதிலும், தற்போது இந்த விடயமானது இலங்கை அரசின் மத்தியில் பெரிய பிரச்சினையாக உருவாகியுள்ளது.

பேராசிரியர் ஜி.எல்.பீரிஸின் டெல்லிப் பயணத்தை அடுத்து, இலங்கை அரசின் விருப்பு வெறுப்புகளுக்கு அப்பால் இந்திய அதிகாரிகளைக் கொண்ட குழுவொன்று இலங்கைக்குச் செல்வதற்கான திகதியை நிர்ணயம் செய்திருந்தது.

இந்தக் குழுவானது ஜூன் 10 அன்று இலங்கையை வந்தடைந்தது. இந்தக் காலப்பகுதியில் இலங்கை அதிபர் மகிந்த ராஜபக்ஷ ரஷ்யாவில் தங்கியிருப்பார் என அறிவிக்கப்பட்டது.

இந்த அடிப்படையில், இந்திய அதிகாரிகள், தாம் இலங்கைப் பயணத்திற்கான திகதிகளை மாற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாகவும், தாம் இலங்கை அதிபரைச் சந்திக்க வேண்டும் எனவும் வலியுறுத்தி தகவல் ஒன்றை அனுப்பியிருந்தனர். அவர்கள் தமது திகதிகளையும் மாற்றிக்கொண்டனர்.

ஆரம்பத்தில், இலங்கையில் தாம் சந்திக்க வேண்டிய முக்கிய தரப்பினர்கள் அனைவருக்கும் ஏற்ற விதத்தில் திகதிகளைத் தாம் மாற்றிக் கொள்ளவுள்ளதாக இந்திய அதிகாரிகள் மிகவும் தெளிவாக எடுத்துக் கூறினர். இதற்கான உறுதிப்பாட்டையும் அவர்கள் இலங்கையிடமிருந்து பெற்றுக்கொண்டனர்.

இந்திய இலங்கை கூட்டறிக்கையின் பிரகாரம் ஏற்றுகொள்ளப்பட்ட இந்த உடன்படிக்கை அவர்களுக்கு 'பத்து கட்டளைகள்' போன்றது.

இந்தியக் குழு அதிகாரிகள் கடந்த வெள்ளியன்று பேராசிரியர் ஜி.எல் பீரிசுடன் சந்திப்பொன்றை நிகழ்த்தினர். இலங்கை அதிபர், இலங்கையின் எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகியோருடனான சந்திப்பு சனிக்கிழமை இடம்பெற்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் இந்திய அதிகாரிகள் குழுவிற்கும் இடையிலான சந்திப்பில், 13ஆவது திருத்தச்சட்டம், அதிகாரப் பகிர்வு மற்றும் மீள்குடியேற்றத் திட்டங்கள் போன்ற விடயங்கள் மையப்படுத்தப்பட்டிருந்தன.

மகிந்த ராஜபக்ஷவின் அனுமதியுடன் பீரிஸ், இலங்கை-இந்தியா கூட்டறிக்கையில் கையெழுத்திட்டுள்ள போதிலும், தற்போது இந்த விடயமானது இலங்கை அரசின் மத்தியில் பெரிய பிரச்சினையாக உருவாகியுள்ளது.

இலங்கை அரசிற்குள் ஏற்பட்டுள்ள பிளவானது இவ்விரு நாடுகளின் கூட்டறிக்கை தொடர்பான அதிருப்தியை வெளிக்காட்டியுள்ளதுடன், இந்தப் பிளவானது வேறு திருத்தச்சட்டங்களை உருவாக்க அழுத்தம் கொடுப்பதாக அல்லது இந்த உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுடன் தாம் ஒத்துப்போகவில்லை என்பதையே வெளிக்காட்டி நிற்கிறது.

இலங்கை அரசின் உயர் பதவியிலுள்ளவர்களுக்கிடையிலான குழப்பத்தையே இந்தப் பிளவானது பிரதிபலித்து நிற்கின்றது.

இக்கூட்டறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களில், திருகோணமலையின் சம்பூர் அனல் மின் திட்டத்தை முழுமைப்படுத்துவதிலேயே இந்திய அரசு மிகவும் ஆர்வமாக உள்ளது.

இந்த அனல் மின் நிலையத் திட்டத்தைப் பூர்த்தியாக்குவது மட்டுமல்லாமல், இந்த நிலையத்தைச் சுற்றிப் புதிய குடியேற்றங்களை நிறுவுவதிலும் இந்திய அரசு மிகவும் ஆர்வமாக உள்ளது. இந்தப் புதிய குடியேற்றங்கள் என்பது ராஜபக்ஷவிற்கு மிகவும் கவலையான விடயமாக இருந்தது.

அனல் மின் நிலையம் தொடர்பாகவும் அதனைச் சூழ அமைக்கப்படும் புதிய குடியேற்றங்கள் தொடர்பான திட்டத்தையும் உள்ளடக்கியிருந்த இந்தக் கூட்டறிக்கை தொடர்பாக இந்திய அரசு எவ்வளவு தூரம் தனது கரிசனையைக் காட்டி நிற்கின்றது என்பது தெரிகிறது.

இது தொடர்பாக கூட்டறிக்கையில் குறிப்பிட[illegible]டுள்ள போதிலும், தற்போது இலங்கை அரசானது [illegible] தொடர்பான தனது நிலைப்பாட்டை மீண்டும் சீர்தூக்கிப் பார்க்கின்றது.

திருகோணமலையில் இந்தத் திட்டத்தை முழுமைப்படுத்தும் பட்சத்தில் கிழக்கு மாகாணத்தின் பாதுகாப்பு நடைமுறைகளில் விட்டுக்கொடுப்புக்களை மேற்கொள்ள வேண்டிவரலாம்·என அரசுத் தரப்பு நோக்குகின்றது.

தற்போது இலங்கை அரசானது தனது நிலைப்பாட்டை மாற்றவேண்டியுள்ளது. பீரிஸ் இந்தியாவுகான தனது பயணத்தை மேற்கொண்டு கூட்டறிக்கையில் கையெழுத்திட்டு ஒரு மாத காலம் கடந்த நிலையில், இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள சம்பூர் குடியேற்றம் தொடர்பாக எந்தவொரு முன்னகர்வையும் இலங்கை அரச தரப்பு மேற்கொள்ள முனையவில்லை.

### சம்பூர் அனல் மின் நிலையமும் புதிய குடியேற்றமும்

சம்பூர் அனல் மின் நிலையமானது, இலங்கை அரசின் உயர் அதிகாரிகள் மட்டத்தில் ஒரு விவாதப் பொருளாக உள்ளது. இந்த அடிப்படையில், இந்த அதிகாரிகள் [illegible]ந்த விடயம் தொடர்பாகப் பல தடவைகள் தமக்கிடையே கலந்தாலோசித்துள்ளனர்.

அனல் மின் நிலையத்தைச் சுற்றி உருவாக்கப்படும் புதிய குடியிருப்பானது கிழக்கு மாகாணத்தின் பாதுகாப்பிற்கு மிகவும் அச்சுறுத்தலாக அமையும் என்பது இலங்கையின் சட்டமா அதிபரின் கருத்தாகும்.

சம்பூர் அனல் மின் நிலைய விடயம் தொடர்பாக ஒரு சமரச ரீதியாக மாற்றம் ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என்பதே சட்டமா அதிபரின் வேண்டுகோளாகும்.

'இந்த விடயத்தில் இலங்கை அரசானது இந்தியாவின் உடன்பாட்டைப் பெற்றுக்கொள்ளவேண்டும்' என இவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசு இது தொடர்பான மாற்றத்தை இந்தியாவுக்கு அறிவிக்க வேண்டுமா அல்லது இது தொடர்பான மாற்றத்தை இலங்கை அரசானது தானாகச் செய்யவேண்டுமா என்பது சட்டமா அதிபரின் அறிவுரையிலிருந்து தெளிவாக அறிய முடியாதுள்ளது.

ஆனால், சம்பூர் அனல் மின் நிலையம் தொடர்பாகவோ அல்லது அங்கே புதிதாக அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள குடியிருப்பு தொடர்பாகவோ, மகிந்த ராஜபக்ஷவின் அரசானது எந்தவொரு நகர்வுகளையும் முன்னெடுப்பதற்கான தெளிவான நிலைப்பாட்டை இன்னமும் எடுக்கவில்லை என்பது மட்டும் வெளிப்படை.

சனிக்கிழமை அன்று இந்திய அதிகாரிகளுக்கும் இலங்கை அதிபருக்கும் இடையில் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடலில் இந்த விடயங்கள் அலசி ஆராயப்பட்டுள்ளன.

இந்தியக் குழுவானது இலங்கைத் தீவிற்கு வருகை தந்து உயர்மட்ட அதிகாரிகளுடன் பேச்சு நடத்தும் என்பது தொடர்பாக இலங்கை அரசு எந்தவொரு உறுதியான நிலைப்பாட்டையும் கொண்டிருக்கவில்லை என்பதே இதற்கான அடிப்படைக் காரணமாகும்.

இலங்கை அரசாங்கத்தால் வழங்கப்பட்ட வாக்குறுதிகள் இன்னமும் நிறைவேற்றப்படவில்லை. கூட்டறிக்கையின் மூலம் எழுத்து வடிவாக்கப்பட்டுள்ள விடயங்களை உடனடியாக அமுல்படுத்துமாறு இலங்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அரசசை இந்தியா அழுத்தம் கொடுத்து வருகிறது.

பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் இக்கூட்டறிக்கையில் கையெழுத்திட்டுள்ள போதிலும் இலங்கை அதிபர் மகிந்த ராஜபக்ஷவிடமே இவற்றை அமுல்படுத்தும் அதிகாரம் உள்ளது என்பது இந்தியாவின் நிலைப்பாடாகும்.

அத்துடன் இந்தக் கூட்டறிக்கை விடயங்களை நிறைவேற்றுவதில் இலங்கை அதிபர் தரப்புப் பின்னடிப்பதையும் இந்தியா கண்டறிந்துள்ளது.

இந்திய வெளியுறவுச் செயலர் நிருபமா ராவ், இந்திய பாதுகாப்புச் செயலர் பிரதீப்குமார், இந்திய தே[illegible] பாதுகாப்பு ஆலோசகர் சிவசங்கர்மேனன் ஆ[illegible]ார் இலங்கைக்கான இந்தியக் குழுவில் அங்கம் வகித்துள்ளனர்.

இந்தக்குழுவின் இலங்கை வருகையானது, இந்தியா, இலங்கை சார் விடயத்தை எவ்வளவு தூரம் முக்கியப்படுத்தியுள்ளது என்பதை வெளிப்படுத்துகின்றது.

கூட்டறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை இலங்கை அரசானது எவ்வளவு தூரம் கையாண்டுள்ளது என்பதையும் இந்த விடயங்களுக்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது என்பதையும் அறிவதே இந்தியக் குழுவின் அடிப்படை நோக்காகும்.

இந்த நேரத்தில், ஐக்கியப்படுத்தப்பட்ட அல்லது ஒன்றிணைக்கப்பட்டுள்ள இலங்கைத் தீவிற்குள் தமிழ் மக்களுக்கு அதிகாரங்கள் உயர்ந்தளவில் பகிர்ந்தளிக்கப்படுவதற்கு இந்தியா ஆதரவாக இருக்க வேண்டும் என்பதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடாகும்.

[illegible]த நிலையில், திறந்த அறிக்கையின் மூலம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது நிலைப்பாட்டைத் தெளிவாக முன்வைத்துள்ளதுடன், இது அரசுத் தரப்பிற்கான அழுத்தமாகவும் அமைந்துள்ளது.

இவ்வாறான நெருக்கடியின் மத்தியில் இலங்கை அரசானது, அதிகாரப் பகிர்வு விடயத்தையோ அல்லது தனிநாட்டுக் கோரிக்கையையோ மூடி மறைத்து விட முடியாது. மீண்டும் தேர்தல்கள் இடம்பெறும் வரை, இந்தியாவானது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குப் பக்கபலமாக இருக்கும் என்பதே இதற்கான காரணமாகும்.

**காவற்துறை மற்றும் காணி அதிகாரங்கள்**

இலங்கையானது இந்தியக் குழுவின் பயணத்தைத் தவிர்க்க முற்பட்ட போதிலும் இந்தியா அதிகாரிகள் அதில் எந்தவொரு நெகிழ்வையும் காண்பிக்கவில்லை.

இது ராஜபஷவை மிகவும் இறுக்கமான ஒரு சூழலுக்குத் தள்ளியுள்ளதுடன், கூட்டறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை எவ்வாறு மாற்றியமைப்பது அல்லது அதிலிருந்து விலகுவது என்பது தொடர்பாக இலங்கை அதிபர் தனது அமைச்சர்கள் மற்றும் ஆலோகர்களுடன் பல சுற்றுப் பேச்சுக்களை ஏற்படுத்த வழிவகுத்தது.

13ஆவது திருத்தச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து விடயங்களையும் இலங்கை அதிபரால் அமுல்படுத்த முடியாதுள்ளது என்பது தெளிவாகத் தெரிகிறது. காவற்துறை சார் அதிகாரங்கள் மற்றும் காணி அதிகாரங்கள் என்பன தொடர்பாக மாறுபட்ட கருத்துக்கள் உள்ளன.

அரசுக்கு உள்ள உயர்மட்ட அதிகாரிகள் மீண்டும் ஒரு தடவை கூட்டறிக்கை விடயங்களை சீர்தூக்கிப் பார்க்குமாறு இலங்கை அதிபருக்கு ஆலோசனை கூறியுள்ளனர்.

இதில் அரசு தனது நலன் சார் அரசியல் நிலைப்பாட்டைப் பின் தொடரவே விரும்புவதுடன், இதனை இந்தியாவும் நன்கறியும்.

பேராசிரியர் ஜி.எல்.பீரிஸிடமும், சட்டமா அதிபர் மோகன் பீரிஸிடமும் கலந்துரையாடலை மேற்கொண்ட இலங்கை அதிபர், இலங்கை நிலைப்பாட்டை இந்தியா அதிகாரிகள் குழுவிடம் தெரியப்படுத்த வேண்டுமா என்பது தொடர்பான அவர்களது கருத்துக்களையும் கேட்டறிந்து கொண்டார்.

இந்தத் தடவை இலங்கை அரசின் நிலைப்பாடுகள் தொடர்பாக இந்தியக் குழுவிடம் பகிர வேண்டிய தேவையில்லை என ஜி.எல்.பீரிஸ் தனது கருத்தைத் தெரிவித்த போதிலும், இதனை ராஜபக்ஷ ஏற்றுக்கொள்ளவில்லை.

அரசின் நிலைப்பாட்டை நீண்டநாள்களுக்கு இரகசியமாகப் பேணி வைத்திருக்க முடியாது என்பது ராஜபக்ஷவின் வாதமாகும். ஆகவே இந்திய அதிகாரிகள் குழுவிடம் இலங்கை அரசின் நிலைப்பாடு தொடர்பாகத் தெரியப்படுத்த வேண்டும் என இலங்கை அதிபர் விரும்பினார். விரும்பியோ அல்லது விரும்பாமலோ கூட்ட றிக்கையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயங்களை இலங்கை அரசு நடைமுறைப்படுத்த வேண்டிய தேவையுள்ளது.

13ஆவது திருத்தச் சட்டம் தொடர்பான பரிந்துரைகளை நிறைவேற்றுவதற்கான உடன்பாட்டை இலங்கை-இந்தியக் கூட்டறிக்கை மூலம் இலங்கை வழங்கியுள்ளது.

இந்த நிலையில், இதனை நிவர்த்தி செய்ய முடியாத சூழலில் இலங்கை அரசு இருப்பதானது இந்திய அரசுடனான உறவில் விரிசலை ஏற்படுத்துவதாக நோக்கப்படுகிறது.

இலங்கையின் மீதான இந்தியாவின் அழுத்தம் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில், இந்தோ இலங்கையின் எதிர்கால உறவைப் பாதிக்கக் கூடிய இந்த விடயத்தை மகிந்த ராஜபக்ஷ எவ்வாறு கையாளப் போகிறார்?

**உண்மையான மீள் இணக்கப்பாடு**

இலங்கை அரசுக்குள் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடல்களில் விவாதிக்கப்பட்ட, கூட்டறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய விடயங்களும் பேராசிரியர் ஜி.எல்.பீரிசிற்கு பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

கூட்டறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள 'உண்மையான மீள் இணக்கப்பாடு' என்பது இலங்கைக்குத் தீங்கு விளைவித்துள்ளதாக சில ஆலோசகர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

போருக்குப் பின்னர் மேற்கொள்ளப்பட்டு வரும் அனைத்து நடவடிக்கைகளும் 'பொய்யானவை' என்பதையே 'உண்மையான மீள் இணக்கப்பாடு' என்ற சொற்றொடர் குறித்து நிற்கின்றது என்றும் அவர்கள் கருதுகிறார்கள். இந்தச் சொற்றொடரானது இலங்கை தொடர்பான அனைத்துலகின் பிழையான அபிப்பிராயத்துக்கு வழி கோல்வதாக இவர்கள் எண்ணுகிறார்கள்.

அனைத்துலகத்திற்கும் அப்பால், இலங்கையில் போருக்குப் பின்னர் இடம்பெற்று வரும் நல்லிணக்க நடவடிக்கைகள் தொடர்பாக இராஜதந்திர வட்டாரங்கள் மீளாய்வு செய்ய வேண்டிய இலங்கையின் உயர் மட்ட ஆலோகர்கள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் போன்ற இலங்கையின் அதிகார நிலையிலுள்ளவர்கள் கூட இதுவரையில் இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வரும் இணக்கப்பாட்டு முயற்சிகள் உண்மையானவை அல்ல என்பதை இந்தக் கூட்டறிக்கையில் கையெழுத்திட்டதன் மூலம் உறுதிப்படுத்தியுள்ளனர்.

இது தொடர்பான ஆலோசனை கிடைக்கப் பெற்ற பின்னரே இலங்கை அதிபரும், கூட்டறிக்கை மீது தனது கவனத்தைச் செலுத்தினார்.

(தொடரும்)

## வாசனை விஞ்ஞானம்



மலரும் நினைவுகள் என்கின்ற வார்த்தையை இப்போது அடிக்கடி சொல்லிக் கொண்டிருக்கிறோம். அதைப் பற்றி இப்போது வேறு விதமாக ஓர் ஆராய்ச்சி செய்வோம்.

மலருக்கும், நினைவுக்கும் சம்பந்தம் உண்டா? இதுதான் கேள்வி. இதற்கு உண்டு என்று பதில் சொல்ல வேண்டியிருக்கிறது. ஏனென்றால் வாசனைகளுக்கும், பழைய நினைவுகளுக்கும் தொடர்பு இருக்கிறது என்பதை விஞ்ஞானிகள் கண்டு பிடித்திருக்கிறார்கள்.

நல்லதோ கெட்டதோ ஒரு நிகழ்ச்சி ஒரு வாசனையோடு சம்பந்தப்பட்டிருந்தால் அது சுலபமாக மறந்து போகாது. என்று அவர்கள் சொல்கிறார்கள்.

இரண்டு நண்பர்கள் ஒரு தெரு வழியாக நடந்து போய்க் கொண்டிருந்தார்கள். யார் வீட்டிலேயோ சமையல் வாசனைப் பொடிவீசியது. உடனே அவர்களுக்குப் பழைய ஞாபகம் வந்திருக்கிறது. அது தான் மலரும் நினைவுகள்.

பாடசாலையில் படித்துக் கொண்டிருக்கும் போது வகுப்பில் மசாலா வடையை மறைத்து வைத்துச் சாப்பிட்டு; அது ஆசிரியர் கண்ணில் பட்டு திட்டு வாங்கியது ஞாபகத்துக்கு வந்தது.

ஒரு மசாலா வடை வாசனை அந்த நண்பர்களை 25 வருடங்களுக்கு முன்னுக்கு அழைத்துக் கொண்டு போய்விட்டது. இந்த மாதிரியே ஒவ்வொரு வாசனைக்கும் பழைய ஞாபகத்தை வெளியே கொண்டுவருகிற ஆற்றல் இருக்கிறது.

ஜேர்மனியில் ஒரு காலத்தில் மக்களுக்கு குளோரின் வாசனை என்றாலே ஒரு வகையான வெறுப்பு. அதனால் அதை ஒரு வருட காலத்துக்கு வேண்டாம் என்று கூறி தள்ளி வைத்து விட்டார்கள் .எதற்கும் உபயோகப்படுத்துவது இல்லை.

ஏன் தெரியுமா? குளோரின் வாசனை அடித்தாலே அவர்களுக்கு உலக யுத்தம் ஞாபகத்துக்கு வந்து விடுமாம். என்ன காரணம் என்றால் யுத்த சமயத்தில் குண்டு விழுந்த இடங்களை சுத்தப்படுத்துவதற்கு குளோரினைத்தான் உபயோகப்படுத்தியுள்ளார்கள். அதனால் அந்த வாசனை பழைய சோகத்தை ஞாபகப்படுத்தியிருக்கிறது. அதுதான் வேண்டாம் என்பது சொல்லிவிட்டார்கள்.

அதைவிட ஆண்களை விட பெண்களுக்குத் தான் வாசனைகளைத் துல்லியமாக அறிகிற சக்தி இருக்கிறது. என்று ஆய்வாளர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

ஒரு சில சிறிய சோதனைகளைக் கூட செய்து பார்த்திருக்கிறார்கள். குழந்தை பிறந்து 6 மணி நேரத்துக்குப் பின்னர் அந்தத் தாயின் கண்களைக் கட்டிவிட்டு, சில குழந்தைகளைத் தாயிடம் கொடுப்பார்கள். குழந்தையின் வாசனையை வைத்தே எது தன்னுடைய குழந்தை என்பதை அந்தத் தாய் சொல்லிவிடுவார்.

ஒரு கெட்டிக்கார அம்மா எட்டு வயது வரைக்கும் தன் குழந்தைகளின் ஆடைகளை வாசனை மூலமாகக் கண்டு பிடிக்க முடியும் .

இதற்கு என்ன காரணம் தாய்க்கும் குழந்தைக்கும் உயிரியல்-உடலியல் அடிப்படையில் ஒரே விதமான வியர்வைச் சுரப்பிகள் தோலில் இருக்கின்றமை ஆகும்.

அந்தக் காலத்தில் மனிதனின் உடம்பிலுள்ள வாசனையை வைத்தே அவருக்கு என்ன நோய் என்பதைக் கண்டுபிடித்து விடுவார்கள்.

வாசனை பழைய ஞாபகத்தைக் கொண்டு வருகிறது என்பதற்கு நகைச்சுவையாக இன்னொரு உதாரணம்;


ஒரு பெண் தன்னுடைய கணவரைப் பார்த்து "எங்கேயாவது மல்லிகைப் பூ வாசனை வீசினால் எனக்கு பழைய ஞாபகம் வந்துவிடும்" என்றாள். பரவாயில்லை மறக்காமல் இருக்கின்றாயே! என்று சொல்லி கணவன் ஆச்சரியப் பட்டான் அந்தக் கணவர். "அதற்கு நீங்கள் தான் காரணம்" என்றாள் அந்தப் பெண். " ஏன்?" என்று கேட்டான் கணவன்.

எமது கல்யாணத்துக்குப் பின் ஒரு தடவை கூட நீங்கள் பூவே வாங்கிக் கொடுக்கவில்லை. அதனால் தான் அதை மறக்க முடியவில்லை என்றாள்.

**கோ-சுவாமிநாதன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் வெளியிடான
# கல்விச்சுடர்
தரம் 05 மாணவர்களை இறுதிப்பரீட்சைக்கு
தயார்படுத்துவதற்கான விசேட தொடர் வெளியீடு



எஸ்.தயாபாலலிங்கம்
ரி.பத்மநேசன்


பரீட்சை இலக்கம்: 05

## தரம் 05 புலமைப் பரிசில் படிமுறைப் பரீட்சை - 2011

பெயர்/சுட்டெண்:........................ **வினாத்தாள்-1** நேரம்: 45 நிமிடங்கள்

### எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

♦ கீழ் உள்ள குறியீடுகள் ஒவ்வொன்றும் அவற்றின் அருகே தரப் பட்டுள்ள வாக்கியங்களிலுள்ள சொற்களைக் குறிக்கின்றன. ஆனால், சொற்களும் உருக்களும் சரியான ஒழுங்கில் இணைக் கப்படவில்லை. ஒவ்வொரு உருவுக்கும் உரிய சரியான சொல் லைக் கண்டுபிடித்து அதன் கீழ்வரும் வினாக்களுக்குரிய சரி யான விடையைத் தெரிவுசெய்து அதன் கீழ்க்கீறிடுக.



சிறுவர் இனிப்பை விரும்புவர்
சிறுவர் புளிப்பை வெறுப்பவர்
பெரியோர் கசப்பை விரும்புவர்

மேலே தரப்பட்ட குறிப்புக்களை அவதானித்து பின்வரும் சொற் களைக் குறிக்கும் சரியான உருவைத் தெரிவுசெய்து அதன் கீழ்க் கீறிடுக.

(01) விரும்புவர் 1. 2. 3.



(02) சிறுவர் 1. 2. 3.



♦ 3 ஆம், 4ஆம் வினாக்களில் வெற்றுக்கூண்டுக்குப் பொருத்தமான கணிதக் குறியீட்டைத் தெரிவுசெய்து அதன் கீழ்க்கோடிடுக.

(03) 5 ☐ 5 ☐ 2 = 8
1. –, x    2. +, –    3. +,+

(04) 3 ☐ 5 ☐ 3 = 18
1. x, +    2. +, x    3.+, –

♦ 5ஆம் , 6ஆம் வினாக்களில் வரும் சொற்கூட்டங்களுடன் பொருந்தும் உருவைத் தெரிவுசெய்து அதன் கீழ்க் கீறிடுக.

(05) எரிபொருள், பறத்தல், இயந்திரம்
1. 2. 3.



(06) இரவு, தீமை, உணர்கொம்பு
1. 2. 3.



♦ பின்வரும் தரவுகளை அவதானித்து கீழ்வரும் வினாக்களுக் குரிய சரியான விடையினைத் தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.




ரூபா 700.00    ரூபா 1000.00    ரூபா 1500.00

(07) தொப்பி ஒன்றின் விலை யாது?
1. ரூபா 500.00    2. ரூபா 200.00    3. ரூபா 100.00

(08) துடுப்பு ஒன்றின் விலை யாது?
1. ரூபா 500.00    2. ரூபா 1000.00    3. ரூபா 200.00

♦ கீழே தரப்பட்ட உருவில் வெற்றிடத்தில் வரவேண்டிய உருத் துண்டினைத் தரப்பட்ட விடைகளில் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க்கீறிடுக.

(09) 1. 2. 3.




(10) கமக்காரன் வயலை உழுதான். இவ்வாக்கியத்தில் வந்த எழுவாய்ச் சொல் யாது?
1. வயல்    2. கமக்காரன்    3. உழுதான்


(11) வண்டி 'கடகட' என்று உருண்டோடியது. இவ்வாக்கியத்தில் வரும் இரட்டைக்கிளவிச் சொல் எது?
1. கடகட    2. வண்டி    3. உருண்டோடியது

♦ தரப்பட்ட மூன்று உருக்களில் இரண்டு ஏதோ ஒரு வகையில் ஒத்த தன்மை உடையன. ஒன்று மட்டும் வித்தியாசமானது. இதனை இனங்கண்டு அவ்வுருவின் கீழ்க் கோடிடுக.

(12) 1. 2. 3.



(13) 1. 2. 3.



♦ சில செய்முறைகளின் படிமுறைகள் கீழ் தரப்பட்டுள்ளன. அவற் றின் சரியான செயல்முறையில் உள்ள படிமுறையை தெரிவு செய்து அதன் இலக்கத்தைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

(14) 1. எழுத்து → சொல் → வாக்கியம் → பந்தி
2. மரம் → கிளை → காய் → பூ
3. சந்தை → தோட்டம் → கமக்காரன் → வியாபாரி
(.................)

(15) 1. மதியம் → காலை → பகல் → இரவு
2. காடு → மரம் → பலகை → கதிரை
3. அரிசி → உணவு → மா → நெல்
(.................)

(16) 1. யானை → மிருகம் → காடு → பெரிது
2. கீரை → காய்கறி → தக்காளி → வற்றாளை
3. நீர் → உப்பு → உணவு → சுவை
(.................)

♦ பின்வரும் வினாக்களுக்கு ஒரு சொல்லில் விடைதருக.


(17) ஐம்பதாவது ஆண்டில் கொண்டாடப்படும் விழா எப்பெயரால் அழைக்கப்படும்?
..............................................................................

(18) நிகழ்ச்சி ஒன்றினை மேடையேற்ற முன்னர் சரி-பிழை பார்த்தல் நிகழ்வு எப்பெயர் கொண்டு அழைக்கப்படும்?
..............................................................................

(19) தேர்தல் ஒன்றில் போட்டியிடும் ஒருவர் எப்பெயர் கொண்டு அழைக் கப்படுவர்?
..............................................................................

(20) ''மெல்லமெல்ல'' ''நடுங்கிநடுங்கி'' போன்ற சொற்றொடர்கள் எவ் வகைச் சொற்றொடர்கள் ஆகும்?
..............................................................................

♦ கீழே தரப்பட்டுள்ள உருக்களைக் கொண்டு 21-23 வரையான வினாக் களிற்குரிய மிகப் பொருத்தமான விடையினைத் தெரிவுசெய்து அதன்கீழ்க் கீறிடுக.




(21) மேலுள்ள உருக்களை இரண்டு கூட்டங்களாக்கும்போது மிகச் சரியாக அமையும் கூட்டம் எது?
1. அ,எ / ஏ,ஈ    2. அ,ஐ / இ,எ    3. ஆ,ஐ / ஈ,இ

(22) மேலுள்ள உருக்களை மூன்று கூட்டங்களாக்கும்போது மிகச் சரியாக அமையும் கூட்டம் எது?
1. ஈ,உ / ஆ,எ / ஊ,ஐ    2. அ,ஆ / இ,ஐ / ஈ,எ    3. இ,ஊ / ஈ,உ / ஆ,ஏ

(23) தாவர உண்ணிகளைக் கொண்ட கூட்டம் எது?
1. ஈ, உ, ஏ    2. அ, ஏ, ஐ    3. இ, ஏ, ஐ

(24) அருகில் தரப்பட்டுள்ள உருவில் இருந்து அதிகமாக வெட்டக்கூடிய உருவம் எது?



1. சதுரங்கள்
2. முக்கோணங்கள்
3. செவ்வகங்கள் (17ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாய் கொப்பளிக்க விடுங்கள்

## கோணல் கோலங்கள்

பசி குடலைப் பிடுங்கியெடுத்துக்கொண்டிருந்தது.வெயில் வேறு பசியின் 'வேக்காட்டை' அதிகரிக்கப் பண்ணியது. வழிந்தோடும் வியர்வையை துடைத்தவாறு சாப்பாட்டுக் கடைகள் மீது கண் மேயத் தொடங்கியது. எல்லாக் கடைகளும் பசித்த வயிறு கொண்ட மனிதர்களால் நிரம்பி வழிந்து கொண்டிருந்தன. ''சொதியைக் கொண்டு வா!, சோத்தைக் கொண்டுவா!'' என்ற கட்டளைகளை நிறைவேற்ற கடைப் பணியாளர்கள் தங்களது வியர்வை உணவுப் பண்டங்களின் மீது வாரியிறைப்பதுகூடத் தெரியாமல் ஓடியாடி வேலை செய்துகொண்டிருந்தனர். எந்தக் கடைக்குப் போவதென்று முடிவெடுக்க முடியாத நிலை. முதலில் தென்பட்ட கடைக்குள் கால் தன்பாட்டுக்குள் நுழைந்தது. தூர நடப்பதற்கு பசி இடம்கொடுக்கவில்லை.

கொஞ்சநேரம் கால் கடுக்கக் காத்திருந்து, யாரோ ஒருவர் சாப்பிட்டு எழுந்த சமயத்தில், 'சங்கீதக் கதிரைபோல' ஓடிச்சென்று அவர் கதிரையில் அமர்ந்தாயிற்று. மேசையில் இருந்த தண்ணீரை எடுத்து மடமடவெனக் குடித்துவிட்டு, உசாரோடு-

''ஒரு மீன் சாப்பாடு!'' என்று குரல் கொடுத்தேன். ஓடர் கொடுத்து ஒரு மணித்தியாலத்தின் பின்னரே சாப்பாடு வந்து சேர்ந்தது. அப்போதுதான் சோற்றை அடுப்பில் இருந்து இறக்கியிருக்க வேண்டும். ஆவி பறந்துகொண்டிருந்தது. ஆக்கப் பொறுத்தாலும் ஆறப்பொறுப்பதற்கு வயிறு சம்மதிக்கவில்லை. சுடு சோற்றில் புகுந்து விளையாடியது கை. 5 நிமிடத்துக்குள் சோறும் கறியும் இருந்த இடம் தெரியவில்லை. முள்ளும், கருவேப்பிலையும் மட்டுமே இலையில் பரிதாபமாக எஞ்சியிருந்தன. இரண்டாம் தரமும் வைக்கப்பட்ட உணவு சில நொடிகளிலேயே கபளிகரம் செய்யப்பட்டது. வயிறு குளிர பெரியதொரு ஏவறை வெளிப்பட்டது. சாப்பிட்ட இலையைத் தூக்கிக்கொண்டு கை கழுவும் இடத்துக்குச் சென்றேன். அவசரமாக உணவை உண்டதால் பற்களின் இடுக்குகளில் உணவுத் துண்டங்கள் சிக்கி யிருந்தன. அது ஒரு அந்தரமாக இருந்தது.

இலையை கூடைக்குள் எறிந்துவிட்டு, பைப்பைத் திறந்து கைகளைச் சவர்க்காரம் போட்டுக் கழுவினேன். என்றாலும் மீன் 'வெடுக்கு' இன்னமும் அடித்துக் கொண்டு இருந்தது. வாயைக் கழுவ எண்ணி இருகைகளாலும் தண்ணீரை ஏந்தி, கொப்பளிக்க முயன்றேன். எங்கிருந்தோ வந்தான் ஒரு கடைப் பணியாளன். ஏதோ கொலைக் குற்றத்தைச் செய்து விட்டதைப்போல ஒரு பார்வை பார்த்தான்.

''என்னண்ணை, பார்த்தா படிச்ச ஆள் மாதிரிக் கிடக்கு. உதில எழுதியிருக்கிறத வாசிக்கத் தெரியாதோ?'' என்று சற்று உரத்த தொனியில் கேட்டான். வாய்முட்ட நீரோடு, 'வோஷ் பேசினில்' ஒட்டப்பட்டிருந்த வாசகங்களை அப்போதுதான் கவனித்தேன்.

'இது கைகழுவும் இடம். தயவுசெய்து வாய் கழுவி கொப்பளிக்க வேண்டாம்.' என்று நீலவர்ணத்தில் எழுதப்பட்டிருந்தது.

'இதென்னடா கோதாரி? இப்ப என்ன செய்யிறது? வாய்க்குள்ளவேற தண்ணியிருக்கு' என்று எண்ணியவாறு மிகக் கஷ்டப்பட்டு 'அப்ப எங்க வாய் கொப்பளிக்கிறது?' என்று அவனிடம் சைகையில் கேட்டேன்.

''அண்ணை! இஞ்சை கை கழுவ மட்டும் தான் இடமிருக்கு. வாய் கொப்பளிக்க இல்லை. எல்லாரையும் வாய்கொப்பளிக்க விட்டால் 'வோஷ் பேசினில்' சாப்பாடு அடைச்சு , கழிவுத் தண்ணீதான் நிறைஞ்சு கிடக்கும்''

அவன் சொன்னது அப்போதைக்கு நியாயமாகப் பட்டாலும் வாய் கொப்பளிக்க வழியின்றித் தவித்தேன். இனியும் பொறுக்க முடியாதவனாய் சாப்பாட்டுக்கான காசைக் கொடுத்துவிட்டு, வெளியே வந்து வீதியில் கொப்பளித்த பின்னர்தான் நிம்மதி பிறந்தது.

யாழ்ப்பாணத்தில் உணவகங்களை நம்பியிருக்கும் பலருக்கு இவ்வாறான அனுபவங்கள் நேர்ந்திருக்கலாம். அனேகமான உணவகங்கள் தங்களுடைய வோஷ் பேசினுக்கு மேலே வாய்கொப்பளிக்க தடை என்ற வாசகங்களை அழகான எழுத்தில் தொங்கவிட்டுள்ளன. இதற்கு காரணம் உண்டு. கடைக்காரர்கள் தங்களுடைய வேலைச் சுகத்துக்காக சாப்பிட வருவோரின் உணவுத் தட்டங்களையும், கறி வைக்கும் கிண்ணங்களையும், டம்ளர்களையும் எடுத்துவந்து வோஷ் பேசினுக்குள் போட்டு விடுவார்கள். நேரம் கிடைக்கும்போது கழுவி எடுப்பார்கள். எனவே சாப்பாட்டுத் தட்டங்கள் போடப்படும் வோஷ் பேசினுக்குள் கை கழுவ மட்டுமே அனுமதி கொடுக்கப்படுகிறது. அதற்குள் வாய் கொப்பளித்தால் அது தட்டங்களை அசிங்கமாக்கி விடும். அத்துடன் அதன்போது வருகின்ற உணவின் எச்சங்கள் வோஷ் பேசினில் உள்ள துவாரங்களை அடைத்து விடுவதால் நீர் வழிந்தோட முடியாமல் தேங்கி நின்று விடுகின்றது. இதைத் தவிர்க்கவே பெரும்பாலான உணவகங்கள் வாய் கொப்பளிப்பதற்கு தடைபோடுகின்றன.


ஒரு நாளைக்கு மூன்றுதரமாவது பல் துலக்குங்கள், சாப்பிட்ட பின் கட்டாயமாகப் பற்களைச் சுத்தம் செய்யுங்கள் என பற் சுகாதாரம் பற்றி விழிப்புணர்வுக் கருத்துக்கள் பரவலாக முன்வைக்கப்படும் நிலையில் சாப்பிட்ட வாயைக் கழுவக்கூட முடியாத நிலையை உணவகங்கள் கொண்டிருப்பது சுகாதாரச் சீர்கேடான விடயமல்லவா?

## ஓடுகாலி

உண்மையில் வோஷ் பேசினுக்குள் உணவுத் தட்டங்களையோ கிண்ணங்களையோ போட்டுக் கழுவுவது கூட சுகாதாரத்துக்கு ஒவ்வாத செயல்தான். அவ்வாறான பாத்திரங்களைக் கழுவுவதற்கென தனியான இடத்தை அவர்கள் கொண்டிருக்க வேண்டும் என்பது சுகாதாரத் திணைக்களத்தின் கண்டிப்பான அறிவுறுத்தல்களில் ஒன்று. அத்துடன் தனியே கை கழுவுவதற்கு மட்டுமே அனுமதிக்கும் உணவக உரிமையாளர்கள் வாய்களைச் சுத்தம் செய்வதற்கென தனியானதொரு இடத்தை அமைத்து வைக்கலாம். அல்லாத பட்சத்தில் உணவு உண்டவர்கள் கைகழுவும் இடத்திலேயே வாயைக் கழுவுவதற்கும் அனுமதிக்க வேண்டும். அதற்குத் தடைபோடுதல் அல்லது அவ்வாறு வாயைக் கழுவுபவர்கள் மீது கடுமையான வார்த்தைகளைப் பிரயோகித்தல் என்பன அவர்களின் - வாடிக்கையாளர்களின் - சுகாதாரத்தைக் கெடுக்கும் நடவடிக்கையாகவே அமையும். இனியேனும் பற்சுகாதாரம், வாய்ச் சுகாதாரம் என்பவற்றை பேணும் வகையில் உணவகங்களின் வாயைக் கொப்பளிக்க இடம்கொடுக்க வேண்டும்.

---


(16ஆம் பக்கத் தொடர்ச்சி)

(25) 

சிறிய சதுரம் ஒன்றின் பரப்பளவு $4cm^2$ ஆகும். ஆகவே, பெரிய சதுரத்தின் பரப்பளவு?

(..................................)

(26) கீழ் உள்ள எண்சட்டங்களில் அதிகூடிய பெறுமானத்தினைக் காட்டும் எண்சட்டத்தின் கீழ்க் கீறிடுக.




(27) குடும்பம் ஒன்றில் உள்ள உறுப்பினர்களைச் சரியாகக் காட்டும் விடை எது?
1. நான், அப்பா, அண்ணா, அக்கா, தம்பி.
2. அப்பா, அம்மா, அண்ணா, அக்கா, நான், தம்பி.
3. அப்பா, அண்ணா, அக்கா, தம்பி, நான்.

(28) இவ்வுருவில் உள்ள முக்கோணிகள் எத்தனை?



1. 4 2. 5 3. 6

♦ 29ஆம், 30ஆம் வினாக்களில் தரப்பட்டுள்ள பழமொழிக்குரிய மிகப் பொருத்தமான கருத்தைத் தெரிந்து அதன்கீழ்க் கீறிடுக.


(29) ''சிறு துளி பெருவெள்ளம்''
1. சிறியதுளி பெரிதாகும். 2. சிறுக சிறுக சேமிப்பது பயனற்றது.
3. சிறுக சிறுக சேமிப்பது பெரும் செல்வமாகும்.

(30) ''இளமையில் கல்வி சிலையில் எழுத்து''
1. இளமையில் கற்பது பயனற்றது.
2. இளமையில் கற்றால் சிலைபோல் ஆவார்.
3. இளமையில் கற்பது சிலையில் எழுதுவது போல் அழியாது.

(31) ''திகதி'' என்னும் சொல் 858 என குறிக்கப்பட்டுள்ளது எனின், 'கத்தி' எனும் சொல் குறிக்கும் குறியீடு யாது?
1. 867 2. 578 3. 587

(32) WMN → MWN எனின், ABC என்பது .............................
1. CBA 2. BCA 3. BAC


(33) இந்த உருவின் சுற்றளவு யாது?





1. 12cm 2. 24cm 3. 32cm

(34) 8m நீளமான கம்பித்துண்டு ஒன்றை நான்கு சம துண்டுகளாக வெட் டினால் ஒரு துண்டின் நீளம் யாது?
1. 4m 2. 2m 3. 1m

♦ கீழே தரப்பட்ட கோலத்தில் அடுத்து வரவேண்டிய மிகப் பொருத்தமான உருவைத் தெரிந்து கோடிடுக.

(35) 


(36) 


(37) காலை 8 மணிக்குப் பயணத்தை ஆரம்பித்த ஒருவன் 4 மணித்தியாலம் பயணம் செய்தான் எனின், அவன் பயணத்தை நிறைவுசெய்த நேரம் யாது?
1. மு.ப 11.00 மணி 2. நண்பகல் 12.00 மணி 3. மு.ப 12.00 மணி

(38) நீர்த்தாங்கி ஒன்றில் 30□ நீர் இருந்தது. அதில் 1/3 பங்கு பயன்படுத்தப்பட்டுள்ளது எனின், மீதியாகவுள்ள நீரின் அளவு யாது?
1. 10□ 2. 20□ 3. 12 □

♦ கீழ் உள்ள வினாக்களுக்குரிய மிகப் பொருத்தமான விடையினைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

(39) நான் ஒரு பூச்சியினத்தைச் சேர்ந்தவன். தாவரங்களின் வளர்ச்சிக்கு உதவுவேன். சிலவேளையில் மனிதனுக்குத் தீமையும் செய்வேன். ஆனால், மனிதனுக்கு அருமருந்துப் பானத்தையும் கொடுப்பேன். நான் யார் ?
..........................................................................................

(40) நான் ஊர்ந்து செல்பவன். எதிரியைக் கண்டால் எனது உடலை சுருட்டிக் கொள்வேன் நான் யார்?
..........................................................................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
15 ஜூன் 2011 புதன்கிழமை

# மரண அறிவித்தல்

## திருமதி சவரிமுத்து நேசம்மா



நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் மெமோறியல் லேன், மானிப்பாய் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சவரிமுத்து நேசம்மா 12.06.2011 ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வய்த்திலன்பிள்ளை- இசபேல் தம்பதியரின் மகளும் காலஞ்சென்ற சவரிமுத்து, வின் அன்பு மனைவியும் சூசைமுத்து, சறோஜா (வேவி- நோர்வே), புஸ்பம், காலஞ்சென்ற அன்ரனிதாசன் (ராசன்), லில்லிமலர் (கனடா), யசிந்தா ரமணி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும் ஞானேஸ்வரி, நோபேட் (நோர்வே), சுலோசனா (வாவா - நோர்வே), மரியநாயகம், அன்ரனிதாசன் (கனடா), இராஜேஸ்வரன்(கனடா) ஆகியோரின் மாமியும் காலஞ்சென்ற இராசையா, பாக்கியநாதர், சவரிமுத்து, திரேசம்மா, மதலேனா (சின்னமணி), றொசம்மா (செல்லம்) ஆகியோரின் சகோதரியும் விஜீதா (பிரான்ஸ்), றீகன்(லண்டன்), டினேஸ்குமார்(மலேசியா), பாமா, ஜெந்தன் (நோர்வே), மேரிஸ்றெலா(கனடா), யசோ(நோர்வே), கனீஸ்ரன்(கனடா), றுசித்தா (கனடா), நுசாந்தி(கனடா), ஸ்தவனி (கனடா), ஜெனி (கனடா), ஜெனீவர் ஜெனணி (நோர்வே) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் சிந்தியா (கனடா), கீர்த்திகா (கனடா), ஜெரமி (கனடா), றெபேக்கா (நோர்வே), றெபோரா (நோர்வே), டானியல் (நோர்வே) ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இல்லத்தில் இன்று (15.06.2011) புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் ஜெப ஆராதனைகள் நடைபெற்று பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மெமோறியல் லேன்,
மானிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்.

(2027)(41)

## ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் நிறுவனத்தின் 24 ஆவது ஆண்டு நிறைவு விழா

யாழ்ப்பாணம், ஜூன் 15

யாழ்.ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் 24ஆவது ஆண்டு நிறைவு விழா அடுத்த மாதம் 16ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இந்த விழாவை முன்னிட்டு மாற்றுவலுவுள்ளோருக்கான முச்சக்கரவண்டி ஓட்டம், துவிச்சக்கர வண்டி ஓட்டம், ஜெய்ப்பூர் நிறுவன ஊழியர்கள் மற்றும் பயனாளிகள் இணைந்து வழங்கும் நாடகம், இசை நிகழ்ச்சி, நடன நிகழ்ச்சி, கலை நிகழ்ச்சிகள், நிறுவனத் தயாரிப்புக்களில் ஆன கண்காட்சி, விழிப்புணர்வுக் குறும் படத் தயாரிப்புக்கள் ஆகியன நடைபெறவுள்ளன. எனவே திறமைகளை வெளிப்படுத்த விரும்பும் மாற்றுவலுவுள்ளோர்கள் எதிர்வரும் 24ஆம் திகதிக்கு முன்னர் யாழ். ஜெய்ப்பூர் நிறுவனத்துடன் தொடர்பு கொள்ளுமாறு நிறுவனத்தின் முகாமைத்துவக் குழு அறிவித்துள்ளது. (ற)

## கொள்ளைக் கும்பல் கைது

கொழும்பு, ஜூன் 15

நீர்கொழும்பு சிறைச்சாலைக் கைதி ஒருவரின் தலைமையில் இயங்கும் கொள்ளைக் கும்பல் ஒன்றைச் சேர்ந்த இரு சந்தேகநபர்களைக் கண்டிபொலிஸார் கடந்த ஞாயிற்றுக்கிழமை கைது செய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட இந்தச் சந்தேக நபர்கள் அண்மையில் பிலிமத்தலாவ பிரதேசத்தில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவம் ஒன்றுடன் தொடர்புடையவர்கள் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இன்னும் 3 நாட்களே உள்ளன விரையுங்கள்

மல்டிமீடியா
அனிமேஷன் பயிற்சிக்கான புலமைப்பரிசில் பரீட்சை
June 18-19 (சனி-ஞாயிறு)
இலவச அனுமதிகளை
ASIAN CSC COMPUTER EDUCATION
யாழ்.நகர், சாவகச்சேரி மற்றும் நெல்லியடி பயிற்சி மையங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

தொழிற் பயிற்சிகள்

வெளிநாடுகளிலும், உள்நாடுகளிலும் தொழில்நுட்பத் துறையில் தொழில் வாய்ப்பைப் பெறுவதற்கேற்றவாறு பயிற்சியளிக்கப்பட்டு சான்றிதழ் வழங்கப்படும்

* Mobile Phone Repairing Software, Hard Ware
காலம்: 3 மாதம்

* றேடியோ, ரெலிவிசன், DVD Repairing
சகல இலத்திரனியல் உபகரணங்கள் திருத்தும் முறை பயிற்சியளிக்கப்படும்.
காலம்: 10 மாதம்

* எலக்றிக்கல் வயறிங்
வீட்டு மின்சுற்று, மின்சாரப் பொருள்கள் திருத்துதல் பயிற்சியளிக்கப்படும்.
காலம்: 3 மாதம்

* றீவைண்டிங்
மின்மோட்டர், ரான்ஸ்போமர், வைண்டிங் செய்தல் பயிற்சியளிக்கப்படும்.
காலம்: 5 மாதம்

* ஏயர் கொண்டிசனிங்
ஏயர் கொண்டிசனிங் திருத்துதல், சேவிஸ் செய்தல் பொருத்துதல் பயிற்சியளிக்கப்படும்.
காலம்: 6 மாதம்

சகல பயிற்சிகளும் சனி, ஞாயிறு நடைபெறும்.

Singala Class

அரச, அரசசார்பற்ற உத்தியோகத்தர்கள், மாணவர்களுக்கு சிங்களம் எழுத, வாசிக்க, கதைப்பதற்கு ஏற்றவாறு கற்பிக்கப்படும்.
ஆசிரியர்-சூரி

வகுப்புக்கள் ஆரம்பம் 18.06.2011 சனி

விபரங்களுக்கு:

JAFFNA TECHNICAL INSTITUTE

45, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 0718561654

கிளை : NEW ASIAN CENTER
56/15 B, ஸ்ரான்லி வீதி (சம்பத் வங்கியருகில்)
யாழ்ப்பாணம். T.P: 0779254078

குறிப்பு: வெளிமாவட்ட மாணவர்களுக்கு தங்குமிட வசதி செய்து கொடுக்கப்படும்.

(சி/855)

கோலாகலமான திறப்பு விழா

Hotel Romas

யா/கொழும்பில் இயங்கும் ஹொட்டல் றொலக்ஸின் இன்னுமோர் கிளை கொழும்பு வெள்ளவத்தையில் ஹொட்டல் றொமஸ் (Hotel Romas) என்னும் பெயருடன் புதுப்பொலிவுடன் இன்றுமுதல் (15.06.2011) புதன்கிழமை வெகு விமரிசையாகத் திறந்து வைக்கப்படவுள்ளதை அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் தெரிவித்துக்கொள்வதில் பெரும் மகிழ்ச்சி அடைகின்றோம்.

உரிமையாளர்களும், ஊழியர்களும்.
Hotel Romas & Hotel Rolex

(48,20,50)

# 21 ஆம் நாள் நினைவும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

## அமரர் சரவணமுத்து அருணாசலம்

*தாய் மடியில்: 07.12.1940*
*இறை அடியில்: 25.05.2011*
*திதி: வைகாசி அபரபக்க நவமி*



அருணோ தயமாய் இருந்தீர் அப்பா,
அளப்பல பணிகள் புரிந்தீர் அப்பா
இருளில் எம்மை இங்கே விட்டு
எங்கே மறைந்தீர் அருணா சலமே



கடந்த 25.05.2011 புதன்கிழமையன்று சிவபதமடைந்த எங்கள் தந்தை **அமரர் சரவணமுத்து அருணாசலம்** அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (15.06.2011) புதன்கிழமை மு.ப. 10 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

அ.கோபாலராஜன் (ராஜன்)
குடும்பம்
அ.இராஜ்குமார் (குட்டி)

*83, கண்டி வீதி,*
*சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.*

# மரண அறிவித்தல்

## திருநாவுக்கரசு பார்வதிப்பிள்ளை



ஆவரங்காலைப் பிறப்பிடமாகவும் இல.374, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருநாவுக்கரசு பார்வதிப்பிள்ளை 12.06.2011 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் இராமலிங்கம்- காசிப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மகளும் காலஞ்சென்ற சுப்பிரமணியம்- சின்னாச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் திருநாவுக்கரசுவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சிவனடியான் மற்றும் வள்ளிப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும் இராஜரட்ணம்- தங்கரட்ணம், இராஜேந்திரம்- நாகரட்ணம், முத்துகுமார்சாமி - இராசமணி (லண்டன்), காலஞ்சென்ற சிவானந்தம் மற்றும் தங்கரட்ணம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் பாலாம்பிகை, உமாமகேசன் (கனடா), ஞானாம்பிகை ஆகியோரின் பாசமிகு தாயும் காலஞ்சென்ற ஜெகதீஸ்வரன் மற்றும் துஷ்யந்தினி (கனடா), சிவபாஸ்கரன் (சாரங்கா நகை மாடம்) ஆகியோரின் மாமியும் சுதர்சன்- கௌரிதேவி (கனடா), ஸ்ரீரங்கன் (பிரான்ஸ்), மாதங்கி, பிருந்தாயினி (யாழ்/ இந்து மகளிர் கல்லூரி), பிருந்தா (கனடா), அனித்தா (கனடா), சேயோன் (கனடா), சாரங்கன் (யாழ்/ இந்துக் கல்லூரி), வைஸ்ணவி (யாழ்/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), வைதேகி (யாழ்/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (15.06.2011) புதன்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காகக் கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**374, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

தகவல்:
ப.சிவபாஸ்கரன்
(சாரங்கா நகை மாடம்)

*(சி/848) (20-50)*

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இயற்கைச் சூழலில் அமையப் பெற்ற சாதனை மிக்க மாணவர்களை உருவாக்கும் ஊரி.அ.மி.த.க.பாடசாலை

வீடுதோறும் கலையின் விளக்கம், வீதி முற்றிலும் பலபல பள்ளி என்ற செந்தமிழ்ப் புலவன் பாரதியின் வேணவாப் போல ஈழத் திருமண்ணில் கல்வி அறிவும் சமய ஞானமும் மிக்க காரைநகரின் தெற்குத் திசையில் இயற்கையான அமைதியான சூழலில் கடற்கரை அருகிலே அமைந்த இந்த ஊரிக் கிராமத்தில் கல்வியில் கலங்கரை விளக்காக அமைந்துள்ளது ஊரி. அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை.

இந்தப் பாடசாலை இற்றைக்கு 150 ஆண்டுகளுக்கு முன்னர் அதாவது 1858 இல் அமெரிக்க மிஷனரியினால் ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பத்தில் காரை நகர் தேவாலயத்துடன் சேர்ந்து இயங்கி வந்தது. பின்னர் 1890 களில் தற்போதைய இடத்துக்கு மாற்றப்பட்டு இயங்கி வருகின்றது. தொடர்ச்சியாக சிறப்பாக இயங்கி வந்த இப்பாடசாலை 1991 இல் தீவகத்தில் ஏற்பட்ட இடப்பெயர்வின் போது வலிகாமத்தில் சில வருடங்கள் இயங்கிப் பின் மூடப்பட்டிருந்தது.

1996 இல் மக்கள் மீளக் குடிய மர்ந்த போதிலும் இப்பாடசாலை மீள ஆரம்பிக்கப்படாமல் இருந் தது. இதனால் இந்தப் பிரதேச மாணவர்கள் பல மைல் தூரம் நடந்து சென்று அயற்பாடசாலைகளில் கல்விகற்க நேரிட்டதுடன் இந்தப் பிரதேசத்தில் இருந்து பாடசாலைக்குச் செல்லும் சிறார்களின் தொகையும் வீழ்ச்சியடைந்தது. இதனைக் கருத்தில் கொண்டு மீளக் குடியமர்ந்து ஒரு வருடங்களின் பின்னர் 30 மாணவர்களையும் இரண்டு ஆசிரியர்களையும் கொண்டு 2003 ஆம் ஆண்டு ஜூலை மாதம் மீள ஆரம்பிக்கப்பட்டது.

தற்போது காரைநகர் தெற்கு, காரை கிழக்கு, காரை தென் கிழக்கு ஆகிய மூன்று கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த 190 மாணவர்களுடன் ஊரி. அமெரிக்கன் மிஷன் தமிழ்க்கலவன்பாடசாலை தற்போது இயங்கி வருகின்றது. தரம் ஒன்று தொடக்கம் 5 வரையான வகுப்புக்கள் கொண்ட இப்பாடசாலையின் அதிபராக சி.சிறிதரன் கடமையாற்றுவதுடன் ஏழு ஆசிரியர்கள் கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபட்டு வருகின்றனர்.

அதிகஸ்ரப் பிரதேசப் பாடசாலையான இப் பாடசாலை யில் கல்வி கற்கும் மாணவர் களின்பெற்றோர்கள்கடற்றொழில் மற்றும் கூலித் தொழிலை மேற்கொள்ளும் மிகவும் வறிய பெற்றோர்களாகக் காணப்படுவதுடன் 30 வீதமான மாணவர்கள் தாய் அல்லது தந்தையை இழந்தவர்களாகக் காணப்படுகின்றனர். எனினும் அதிபர் மற்றும் ஆசிரியர்களின் விடா முயற்சியினால் மாணவர்கள் பாடசாலைக்கு ஒழுங்காகச் சமுகமளித்தல், கற்றலில் ஆர்வம் காட்டுதல், விளையாட்டுத் துறையில் பங்குபற்றுதல் என்பனவற்றில் நல்ல முன்னேற்றங் கண்டு வருகின்றனர். கோட்ட மட்ட, வலய மட்டப் போட்டிகள் மற்றும் பரீட்சைகளில் பங்கு பற்றி சாதனை புரியும் அளவிற்கு இப்பாடசாலை மாணவர்களை வளப்படுத்தி உள்ளமை சிறப்பான அம்சமாகும். இதன் ஊடாகப் பாடசாலையின் பெயரை வலய மட்டத்திற்கு உயர்த்தி உள்ளனர்.

கடந்த வருடங்களில் இடம்பெற்ற வலயமட்டச் சிறுவர் அரங்கு நிகழ்வில் நன்றாக ஆற்றுகைத் திறனை வெளிப்படுத்தி 16 மாணவர்கள் சான் றிதழ்களைப் பெற்றுக் கொண் டனர். அத்துடன் வலய மட்டத்தில் ஆக்கத்திறன் வெளிப்பாடு, கதைகூறல் போட்டிகளில் தரம் 5 ஐச் சேர்ந்த சி.துலக்ஷன் முதலாமிடத்தையும் மாவட்ட மட்டப் போட்டியில் இரண்டாம் இடத்தையும் பெற்றுக் கொண்டார்.

2010இல்மாகாண மட்டப் போட்டியில் கணித வினா விடைப் போட்டியில் தரம் 4 ஐச் சேர்ந்த து.விதுர்ஷன் இரண்டாமிடத்தைப் பெற்றுக் கொண்டார். காரைநகர் மணிவாசகர் சபை நடத்தும் சைவசமய பாடப் பரீட்சைகளிலும் குறிப்பிடத்தக்களவு பரிசில்களைப் பெற்று வருகின்றனர். இவ்வாறு மாணவர்கள் வலய, மாவட்ட மட்டங்களில் தங்கள் திறமைகளை வெளிக்கொணர்வதுடன் தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சைகளிலும் குறிப்பிடத்தக்களவு புள்ளிகளைப் பெற்றுவருகின்றனர். இவர்களில் அனேகமானோர் நூறுக்கும் மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றுள்ளமையை அவதானிக்க முடிகின்றது. இவ்வாறு கல்வியில் மட்டுமன்றி விளை யாட்டுத் துறையிலும் தங்கள் திறமைகளை வெளிக்கொணரத் தவறவில்லை.



### டர்னிகன்

கடந்த ஆண்டு நடைபெற்ற விளையாட்டுப் போட்டியில் தரம் 5 இல் கல்வி பயிலும் த.கோபிகா 100 மீற்றர் ஓட்டத்திலும் 75 மீற்றர் ஓட்டத்திலும் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டதுடன் தரம் 4 இல் கல்வி பயிலும் த.தபோதினி உயரம் பாய்தலில் முதலாமிடத் தையும், தரம் 5 இல் கல்வி பயின்ற தே.டிலானி 100 மீற்றர் ஓட்டத்தில் 2 ஆம் இடத்தையும் த.தனுஷியா நீளம் பாய்தலில் 2 ஆம் இடத்தையும் பெற்றுள்ளார்.

UNICEF நிறுவனத்தினால் தீவக வலயத்தில் தெரிவு செய்யப்பட்ட ஐந்து பிள்ளை நேயப் பாடசாலைகளில் ஒன்றாக இப்பாடசாலை தெரிவு செய்யப்பட்டது. இவ்வாறு கல்வியிலும் விளையாட்டிலும் உயர்வடைந்து வருகின்ற போதிலும் இதில் கல்வி பயிலும் மாணவர்கள் அனைவரும் வறுமைக் கோட்டுக்கு உட்பட்டவர்களாகவே காணப்படுகின்றனர்.

காரைநகர் வைத்தியசாலை வைத்திய அதிகாரி, பொதுச்சுகாதார பரிசோதகர் உள்ளிட்ட குழுவினர் பாடசா லைக்குச் சென்று மாணவர்களிடையே மருத்துவப் பரிசோதனை நடத்தியதன் விளைவாக 140 மாணவர்களில் 110 மாணவர்கள் போசாக்குக் குறைபாடு உடையவர்களாகக் காணப்படுவதுடன் உயரத்திற்கேற்ப நிறைகுறைவாக உள்ளமையும் கண்டறியப்பட்டதாக குறிப்பிட்டுள்ளனர். இங்குவரும் மாணவர்களில் பலர் காலை உணவினை உட்கொள்ளாமல் வருவதாகக் கூறப்படுகின்றது. இவ்வாறு போஷாக்குக் குறைபாட்டினால் மனதை ஒரு முகப்படுத்தி கற்றல் செயற்பாட்டினை மேற்கொள்வதில் சிரமங்களை எதிர் நோக்குகின்றனர்.

*(தொடரும்)*


## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான Prima No.1 புறொயிலர் கோழிக்குஞ்சுகள் Prima கொம்பனி உத்தரவாதத்துடன் நியாயமான விலையில் சிவப்புப் பேட்டுக் குஞ்சுகளும் 17.06.2011 காலை விநியோகிக்கப்படும் முன் பதிவு செய்யவும்.

★ சூட்டி பாம் சென்ரர், வட்டுக்கோட்டை - 0778996085
★ சன்னதி பாம் சென்ரர், தொண்டமானாறு - 0776904590
★ நெல்லியடி பல்பொருள் விற்பனை நிலையம், நெல்லியடி - 0774656377
★ நல்லூர் பாம் சென்ரர், பிரதான வீதி, பருத்தித்துறை - 0771392593

**நல்லூர் பாம் சென்ரர்**

*19, முருகேசர் லேன், நல்லூர். தொ.பே.இல. 021 222 6944*

## பாராட்டி நன்றி கூறுகின்றோம்



**M.T.S.இராமச்சந்திரன்**

வரணி வடக்கு, கும்பிட்டான்புலம் கற்பக விநாயகர் ஆலயத்தின் செயற்பாடுகள் சிலகாலமாகத் தடங்கியிருந்த நிலையில். இந்து சமய கலாசார இணைப்புச் செயலாளரும் சட்ட ஆலோசகருமான மாண்புமிகு M.T.S. இராமச்சந்திரன் ஐயா அவர்கள் பெருந்தன்மையுடன் எமது பகுதிக் கிராம உத்தியோகத்தர், சாவகச்சேரி பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் சகிதம் பொதுக்கூட்டத்தைக் கூட்டிப் பெரும்பான்மையான மக்களின் ஆதரவுடன் ஒரு பரிபாலன சபையை அமைக்க ஏற்பாடு செய்தார். அத்தோடு பரிபாலன சபையிடம் பொறுப்புக்களை ஒப்படைத்துத் தற்போது இரண்டு காலப் பூசை வழிபாடுகளுடன் இந்த வருட பெருந்திருவிழா வெகு சிறப்பாக நடைபெறவும் வழிவகுத்துள்ளார். இவர் தமது மேலான சமூக சேவை மூலம் பொதுமக்களின் நன்மதிப்பையும் பெற்றுள்ளார். தமது நேரத்தையும் பொருட்படுத்தாமல் எமது மக்களுக்குச்சேவை செய்தமைக்கு அப்பெருமகனுக்கு ஊர்மக்கள் சார்பிலும் பரிபாலனசபை சார்பிலும் நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**ஆலய பரிபாலன சபையினரும் உபயகாரர்களும், வரணி கும்பிட்டான்புலம் கற்பகவிநாயகர் ஆலயம்.**

## CAR FOR SALE

**DOCTOR SUNNY CAR** (FB-13) FULL OPTION 19-1778 WITH ALLOY WHEEL FOR 11Lks.
**at 173 Manipay Road, Jaffna.**
**T.P: 0772516160**

## கடைகள் வாடகைக்கு

பிறவுண் வீதி, ஆடியபாதம் வீதி ஆகியவைகள் சந்திக்கும் இடத்தில் நல்லூர் பிரதேச சபையின் உப அலுவலகத்துக்குப் பின்னால் யாழ். தொழில்நுட்பக் கல்லூரி, யாழ். பல்கலைக்கழகம் ஆகியவற்றுக்கு அருகில் மக்கள் நடமாட்டம் அதிகமுள்ள பகுதியில் 300 சதுர அடி விஸ்தீரணம் கொண்ட இரண்டு கடைகள் வாடகைக்குண்டு. தொடர்புகளுக்கு: 0770759874, 0773502612.

## இறைச்சிக் கோழி விற்பனை

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து காலை 6மணி தொடக்கம் இரவு 8மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.

**நல்லூர் பாம் சென்ரர்**
19, முருகேசர் லேன், நல்லூர்.

## நீரிழிவு விழிப்புணர்வு நிகழ்ச்சியும் இலவச நீரிழிவு பரிசோதனையும்

*நாளை (16.06.2011) வியாழக்கிழமை*
**சிற்றி மெடிக்கல் யாழ்ப்பாணத்திலும்**
*17.06.2011 வெள்ளிக்கிழமை*
**ராசீஸ் பாமசி**
கே.கே.எஸ்.வீதி, தாவடி கோண்டாவிலிலும் நடைபெறும்.

FBS (fasting blood sugar) சோதனை செய்ய விரும்புபவர்கள் 10 மணித்தியாலங்கள் உணவு உட்கொள்ளாமல் வரவும்.

விசேட விலைக்கழிவுடன் Blood Sugar Meter களை பெற்றுக்கொள்ளலாம்.

(48/21,23) Organizer: J.Dunstan Raj, 0774721501.

## காணி விற்பனைக்கு உள்ளது

கீரிமலை, பன்னாலை வீதியில் உள்ள நகுலேஸ்வரா வித்தியாலயத்துக்கு அருகில் கோணாவளை என்னும் காணியில் இருபது பரப்பளவில் விற்பனைக்கு உள்ளது. கொள்வனவு செய்ய விரும்புவோர் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு: 021 321 9906

## திருமணசேவை

டாக்டர்கள், பொறியியலாளர்கள், பட்டதாரிகள், ஆசிரியர்கள், வர்த்தகர்கள் உட்பட உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் பலரின் ஜாதகங்கள் எம்மிடம் உள்ளன. திருமணத்தை எதிர்பார்ப்போர் நேரில் தொடர்பு கொள்ளவும்.

**100, அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம் (யாழ்.இந்து மகளிர் கல்லூரி முன்பாக) 0778996281**

## வீடு விற்பனைக்கு

சண்டிலிப்பாய் மேற்கு, சண்டிலிப்பாய் (சம்பிலியோடை) தேனிப்புளியடி ஒழுங்கையில் 2¼ பரப்புக் காணியும் வீடும் விற்பனைக்கு உண்டு.

(2022) தொடர்பு: 0773907687

## Soft View
Academy for Computing & IT
Center For Information Technology (Pvt) Ltd

சிறைச்சாலை முன்பாக
102,Main Street, Jaffna.0212224885, 0779053545
MS Office, DTP, Hardware, Kids Program Internet & Email, Type Setting, Web Designing, Video Editing, Graphic Designing, Computerized Accounting

Note:-
மாணவர் ஒவ்வொருவரும் தாக்குந் தேவையான நேரத்தைத் தெரிந்தெடுக்கலாம். (7.30 a.m to 9.30 pm)

## வாடகைக்கு

ஏழாலை மேற்கில் பிரதான வீதிக்கு அண்மையில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்பு: 0775909205

(சி/856)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்நாட்டு அரிசியில் 'ஆசனிக்' நஞ்சு இல்லை என்கிறது விவசாய அமைச்சு

கொழும்பு,ஜூன் 14

உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் அரிசியில் ஆசனிக் நஞ்சுக் கலப்பு இல்லையென விவசாய அமைச்சர் மகிந்த அபேவர்த்தன யாப்பா தெரிவித்தார்.

அமைச்சின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடந்த ஊடகவியலாளர் மாநாட்டில் இத்தகவலை அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

உலகின் மிகப் பிரபலமான ஆராய்ச்சிக் கூடமொன்றினால் உள்நாட்டு அரிசிகளின் 60 மாதிரிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட பின் அவற்றில் ஆசனிக் நஞ்சு கலப்பு இல்லையென நிரூபணமாகியுள்ளது.

இயன்றவரை கிருமிநாசினிகளின் பிரயோகத்தைக் குறைத்துக்கொள்ளுமாறு எமது நாட்டு விவசாயிகளை நாம் வலியுறுத்தி வருகிறோம்.

சிறிதளவு ஆசனிக் கலந்த நாசினிகளால் ஆபத்து ஏற்படப்போவதில்லை. பெரும்பாலும் லீற்றருக்கு 300 மைக்ரோ கிராம் ஆசனிக் கிருமி நாசினிகள் அடங்கியுள்ளது. கிருமி நாசினிகளைப் பதிவுசெய்யும் போது இந்தக் கொள்ளளவை நாம் பார்ப்பதில்லை.

இறக்குமதிக் கட்டுப்பாடு அதிகார சபையின் மூலமாக வழங்கப்படும் அனுமதிப்பத்திரத்தின் மூலமாகவே நாசினிகள் இறக்குமதி செய்யப்படுகின்றன. எனினும் சுங்கத் திணைக்களம் நாசினிகளில் அடங்கியுள்ள மூலகங்களின் பிரமாணத்துக்கு ஏற்ப தீர்வை விதிக்கிறது.

இந்த நிறுவனங்கள் எம்முடன் தொடர்புகொண்டால் எனது அதிகாரிகளை சுங்கத்திணைக்களத்துக்கு அனுப்பி தருவிக்கப்பட்டுள்ள நாசினிகள் பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க முடியும் - என்றார்.

(ச-5)

## வந்தது கப்பல்...



தூத்துக்குடிக்கும் கொழும்புக்கும் இடையிலான கப்பல் சேவை நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை காலை 200 பயணிகளுடன் கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்தது. துறைமுகம் வந்தடைந்த கப்பலை இந்திய தூதர் அசோக் கே.காந்தா மற்றும் பிரதி அமைச்சர் ரோஹித அபேகுணவர்த்தன உள்ளிட்ட குழுவினர் பலூன் பறக்கவிட்டு வரவேற்கின்றனர்.(ச)

# ஊழல் துஷ்பிரயோகங்கள் அதிகரிப்பு 10 அரச திணைக்களங்கள் மாட்டின

கொழும்பு, ஜூன்15

லஞ்ச ஊழல் மற்றும் துஷ்பிரயோகங்கள் காணப்படும் பத்து அரச திணைக்களங்கள் இனங்காணப்பட்டுள்ளதாக லஞ்ச ஊழல் துஷ்பிரயோக விசாரணை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதற்கமைய பொலிஸ் துறை, கல்வித்திணைக்களம், இலங்கைச் சுங்கம், குடிவரவு குடியகல்வுத் திணைக்களம், மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் திணைக்களம், அரசியல் வட்டாரங்கள் போன்றவை இப்பட்டியலில் முன்னணி வகிப்பதாக ஆணைக் குழுவின் சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

சிறைச்சாலைகள் திணைக்களம், பிரதேச செயலாளர் அலுவலகங்கள், அரச வைத்தியசாலைகள், மாகாண சபைகள், உள்ளூராட்சி சபைகள் போன்றவையும் இந்தப் பட்டியலில் இடம்பிடித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஊழல், துஷ்பிரயோகங்கள் அதிகளவில் நடைபெறும் நிறுவனங்களின் மீது ஆணைக்குழு விசேட கவனத்தை செலுத்தவுள்ளதாகவும் இத்தகைய முறைகேடுகளை மக்கள் தமக்கு தெரிவிக்க வேண்டுமென வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

இதுவரை அந்த நிறுவனங்களில் பணிபுரியும் நூறு ஊழியர்கள் பற்றிய முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(ச-5)

## விவசாயப் பாடநெறிகள் ஆரம்பம்

விவசாயத்துறையில் அதிகரித்த அறுவடையைப் பெற நவீன தொழில்நுட்பங்களின் ஊடாக விவசாயிகளுக்கும் அதிகாரிகளுக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்த விவசாயப் பாடநெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. இந்தத் திட்டத்துக்கு அமைய நாடெங்கும் 142 விவசாயப்பாட நெறிகளை முன்னெடுக்க அனுராதபுரத்தில் அமைந்துள்ள தொழில்நுட்ப நிறுவனம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. அதற்கமைய அனுராதபுரத்தில் 16, பொலநறுவையில் 15, குருநாகலில் 18, அம்பாறையில் 18, காலியில் 21 அம்பாந்தோட்டையில் 19, கண்டியில் 20, நுவரெலியாவில் 15 என்ற அடிப்படையில் விவசாயப்பயிற்சி நெறிகள் முன்னெடுக்கப்படவுள்ளன என தெரிவிக்கப்படுகிறது.

## திருக்குறள் அறிவுப் போட்டி

யாழ்ப்பாணம், ஜூன்15

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் திருக்குறள் அறிவுப் போட்டி இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு யாழ். வேம்படி மகளிர் கல்லூரியிலும், கொழும்புத் தமிழ்ச் சங்கத்திலும் நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டிக்கு விண்ணப்பித்த மாணவர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஆ.இரகுபதி பாலசிறீதரன் அறிவித்துள்ளார்.

(ற)


## 6 ஆம் ஆண்டு கண்ணீர்ப் பூக்கள்

மண்ணில்: 15.04.1958

விண்ணில்: 14.06.2006




எமது குடும்பத்தின் குலவிளக்காய் அன்னையவள் விமலா என்னும் பெயருடையவள் பக்குவமாய் என்னை வளர்த்து ஆளாக்கி ஊர் உலகு உற்றார், உறவினர், போற்ற வாழ வழி சமைத்துள்ள உமக்கு என்றும் எம் கண்ணீர் பூக்கள் உரித்தாகட்டும்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

79/10, மாரியம்மன் கோயிலடி,
சுதுமலை தெற்கு, ஆனைக்கோட்டை.

கு.முரளிதாஸ்
(மகன் - லண்டன்)

(48.19.21)

## அருள்முருகன் திருமணப் பணியகம்

மணமகன் தேவை: கனடா குடியுரிமையுள்ள 1980, பரணி, செவ்வாய் 2இல் (ஆட்சி செவ்வாய்), கிரகபாவம் 39, O/L யாழிலும் A/L கொழும்பிலும் சித்தி, கனடா பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்று கௌரவ பதவியில் இருக்கும், தாயார், உடன்பிறந்தோருடன் வதியும் யாழ்.இந்து உயர்சமூக, கௌரவமான குடும்ப மணமகளுக்கு மணமகன் தேவை! 03, யாழ்.வீதி, சிறாம்பியடி லேன், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 0212229334.

## மிசின் மைன்டர் தேவை

கோட் மிசின் இயக்குவதில் அனுபவம் வாய்ந்தவர்கள் தேவை.
ஸ்ரீ சாயி பிறிண்டர்ஸ்
கே.கே.எஸ்.வீதி, கோண்டாவில்.
தொ.பே. 0772209474

## தவறிவிட்டது

மானிப்பாய் வடகிழக்கு, மானிப்பாய் கந்தசாமி நவநீதன் என்பவருடைய தே.அ.அ.(இல.730067314V) 2ATM அட்டைகள், வாகன ரக்ஸ், பொலிஸ் துண்டு, அலுவலக அ.அட்டை என்பன 2ஆம் குறுக்குத் தெருவிற்கும்(யாழ். மத்திய கல்லூரி முனீஸ்வரன் வீதி ஊடாக) மின்சார நிலைய வீதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் பின்வரும் T.P யில் (0771960062) தொடர்புகொண்டு ஒப்படைத்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

## வீடு வாடகைக்கு உண்டு

யாழ்.ரவுணில் (Town) இருந்து 1/2 Km தூரத்தில் மானிப்பாய் வீதி, ஐந்து சந்தியில், 129 A இலக்கமுடைய 2மாடி வீடு, 2ரூம் AC யுடனும் 2ரூம் Non AC யுடனும் Kitchen room, Dining room, grage போன்ற சகல வசதிகளோடு கூடிய வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 0776612444

## கொவிசெத

உத்தியோகப்பூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 811

சீட்டிழுப்பு திகதி 13.06.2011

எழுத்து: X

வெற்றி இலக்கங்கள்: 06 21 58 63

| | பொருத்தங்கள் | பரிசுத்தொகை | வெல்லப்பட்டோர் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில வழுத்துடன் 4 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 10,539,216.80 | 01 |
| 1ம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000,000/= | 01 |
| 2ம் பரிசு | ஆங்கில வழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 20,000/= | 10 |
| 3ம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 2,000/= | 339 |
| 4ம் பரிசு | ஆங்கில வழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000/= | 637 |
| 5ம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 100/= | 16392 |
| 6ம் பரிசு | ஆங்கில எழுத்துடன் ஒரு இலக்கம் சரியாயின் | ரூ. 40/= | 9414 |
| 7ம் பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரூ. 20/= | 233437 |
| 8ம் பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரூ. 20/= | 36649 |

இம்முறை வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 20,471,696.80

அடுத்த வார சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூபா. 10,000,000.00

வெற்றிப் பெறும் சீட்டுகள் மோதங்களுக்குள் மட்டுமே செல்லுப்படியாகும். ஐந்து இலட்சமோ இதற்குக்கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிச்சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவுதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663 அவசர தேவைக்கு: 2473360
இணையதளம்: www.nlb.lk

## வாகன சுத்திகரிப்பாளர்களுக்கான அறிவித்தல்



வாகனச் சுத்திகரிப்பின் போது பெறப்படும் ஒயில கலந்த கழிவு நீரை நவீன கருவிகளைப் பயன் படுத்தி எவ்வாறு நன்னீராக மாற்றி, சுற்றாடலை மாசடையாது பேணலாம்? எனும் தொழில்நுட்ப அறிவு சம்பந்தமான விளக்கமளிக்கும் பயிற்சிப் பட்டறை ஒன்று, இத்துறையில் மிகவும் அனுபவம் வாய்ந்த ஒரு நிறுவனத்தைக் கொண்டு எம்மால் ஒழுங்கு செய்யப்படுகிறது.



எனவே இதில் பங்கேற்க ஆர்வமுள்ள வாகன சுத்திகரிப்பாளர்களை பின்வரும் எமது முகவரியில் 24.06.2011 ஆம் திகதிக்கு முன்னர் பதிவு செய்யும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

தலைவர்,
வர்த்தகத் தொழில் துறை மன்றம்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகள் மீதான தடையை நீக்கக் கோரும் வழக்கை விரைவில் விசாரணை செய்க

## ம.தி.மு.க செயலாளர் வைகோ வலியுறுத்து



சென்னை,ஜூன்15

விடுதலைப் புலிகள் மீது விதிக்கப்பட்ட தடையை நீக்கக் கோரும் வழக்கை விரைவாக விசாரிக்க வேண்டும் என்று சென்னை மேல்நீதிமன்றத்தில் வைகோ நேரில் ஆஜராகி வலியுறுத்தினார்.

விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்கக் கோரிய வழக்கை விசாரிப்பதற்காக டில்லி மேல் நீதிமன்றம் தீர்ப்பாயம் ஒன்றை நியமித் திருந்தது. அதில் நடைபெற்ற விசாரணையில், ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ நேரில் ஆஜராகி வாதாடினார். அதன் போது விடுதலைப் புலிகள் மீதான தடையை நீடிக்க வேண்டும் என்று டில்லி மேல் நீதிமன்றம் தலைமையிலான தீர்ப்பாயம் தீர்ப்பளித்தது.

இந்த உத்தரவை எதிர்த்து சென்னை மேல்நீதிமன்றத்தில் வைகோ மனுதாக்கல் செய்திருந்தார். இந்த வழக்கு கடந்த 13ஆம் திகதி விசாரணை பட்டியலில் இடம்பெற்றிருந்தது.

இந்த நிலையில் வைகோ, சென்னை மேல் நீதிமன்ற தலைமை நீதிபதி எம்.ஒய்.இக்பால், நீதிபதி டி.எஸ்.சிவஞானம் ஆகியோர் முன்பு அன்றைய தினம் நேரில் ஆஜராகி, இந்த வழக்கை விரைவாக விசாரணை செய்ய வேண்டும் என்று முறையிட்டார்.

இதுதொடர்பாக தலைமை நீதிபதி கூறுகையில்:

முக்கியமான வழக்குகளை விசாரணை செய்ய வேண்டியிருப்பதால், ஓகஸ்ட் மாதம் முறையிடலாம் என்று தெரிவித்தார். (வ)

# இராமேஸ்வரம்-தலைமன்னார் இடையே விரைவில் பயணிகள் கப்பல் சேவை

## வாசன் தகவல்

தூத்துக்குடி,ஜூன் 15

இராமேஸ்வரம் - தலைமன்னார் இடையே விரைவில் பயணிகள் கப்பல் சேவை ஆரம்பிக்கப்படவுள்ளதாக மத்திய கப்பல் போக்குவரத்துத் துறை அமைச்சர் ஜி.கே. வாசன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக தூத்துக்குடியில் நேற்றுமுன்தினம் செய்தியாளர்களிடம் அவர் மேலும் கூறியதாவது:

தேசபக்தர் வ.உ.சிதம்பரனார், 1907ஆம் ஆண்டு கொழும்புக்கான கப்பல் சேவையை ஆரம்பித்தார். அந்தக் கப்பல் சேவை தடைப்பட்ட பின்னர் இப்போது மீண்டும் கொழும்புக்கு கப்பல் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இது அவரின் கனவை நனவாக்குவதாக உள்ளது.

இந்தப் பயணிகள் கப்பல் சேவையை வ.உ. சிதம்பரனாருக்கு இந்திய அரசு அர்ப்பணிக்கிறது.

இராமேஸ்வரத்துக்கும், இலங்கையில் இடையே உள்ள தலைமன்னாருக்கும் இடையே பயணிகள் கப்பல் போக்குவரத்தை ஆரம்பிக்க அனைத்து முயற்சிகளையும் மத்திய கப்பல் துறை அமைச்சகம் மேற்கொள்ளும்.

இதற்கான ஆயத்தப் பணிகள் நடைபெற்று கொண்டிருக்கின்றன. பணிகள் முடிந்த பின்னர் இராமேஸ்வரம்- தலைமன்னார் இடையே பயணிகள் கப்பல் போக்குவரத்து ஆரம்பிக்கப்படும் என்றார் வாசன். (வ)



டில்லிக்குப் பயணம் மேற்கொண்ட தமிழக முதல்வர் ஜெயலலிதா பிரதமர் மன்மோகன் சிங்கை நேற்று சந்தித்துப் பேசினார்.

## தூத்துக்குடி - கொழும்பு

# கப்பல் சேவை ஆரம்ப விழாவை தமிழக அரசு புறக்கணித்தது

தூத்துக்குடி,ஜூன்15

தூத்துக்குடி- கொழும்புக்கான பயணிகள் கப்பல் சேவையின் ஆரம்ப விழாவை தமிழக அரசு புறக்கணித்தது. தமிழக அரசு சார்பில் அமைச்சர், அதிகாரிகள் எவரும் விழாவில் பங்கேற்கவில்லை.

நேற்றுமுன்தினம் தூத்துக்குடி வ.உ. சிதம்பரனார் துறைமுகத்தில் ஆரம்பமான விழாவில், மத்திய கப்பல் போக்கு வரத்துத்துறை அமைச்சர் ஜி.கே. வாசன் கலந்துகொண்டு, கப்பல் போக்குவரத்தைக் கொடியசைத்து ஆரம்பித்து வைத்தார். இந்த விழாவில், தமிழக அரசு சார்பில் மாநில தொழிலாளர் நலம் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அமைச்சர் சி.த. செல்லப்பாண்டியன் கலந்துகொள்வார் என அறிவிக்கப்பட்டது. அழைப்பிதழில் அவரது பெயரும் இடம் பெற்றிருந்தது.

இரு தினங்களுக்கு முன்பு செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் செல்லப்பாண்டியன்: விழாவில் முதல்வரின் அனுமதியோடு கலந்துகொள்ள விருப்பதாகக் கூறினார். ஆனால், விழாவில் அவர் கலந்து கொள்ளவில்லை. இதேபோல் விழாவில், மாவட்ட நிர்வாகம் சார்பில் மாவட்ட ஆட்சியாளர்கள் கலந்துகொள்வர் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், அவரும் பங்கேற்கவில்லை. (வ)

# ஆட்சியில் இல்லாத காலத்திலேதான் தாடகைக்கு புத்தி கற்பித்தான் ராமன்

## கருணாநிதி

சென்னை ஜூன் 15

ஆட்சியிலேயே இல்லாவிட்டாலும் நம்முடைய குறிக்கோளை நாம் இழந்துவிட மாட்டோம். இராமாயணத் தில்கூட 14 ஆண்டு காலம் இராமன் ஆட்சியிலே இல்லை. ஆனால் அவன் ஆட்சியில் இல்லாத காலத்தில் தான் தாடகைக்குப் புத்தி கற்பித்தான்.

எனவே, ஆட்சியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் தவறுகளைச் சுட்டிக்காட்டி நாட்டுக்கு வருகின்ற கேடுகளைத் தடுத்து நிறுத்த வேண்டும்.

- இவ்வாறு திருமண விழா ஒன்றில் தி.மு.க. தொண்டர்களுக்கு முன்னாள் முதல்வர் கருணாநிதி வேண்டுகோள் விடுத்தார்.

கோவையில் நடந்த திருமண விழாவில் கருணாநிதி பேசியவை வருமாறு:

தமிழ் என்று சொல்வதற்கு இப் போது சிலருக்குத் தயக்கம் ஏற்பட்டிருக்கிறது. ஏனென்றால் தமிழ் வாழ்ந்தால் தமிழ் இன உணர்வு வளரும், இன உணர்வு வளர்ந்தால் திராவிடம் செழிக்கும்.

இந்த இரண்டு உணர்வுகளுக்கும் தமிழ்நாட்டில் இடம் இல்லாமல் செய்ய வேண்டுமென்று ஒரு சாரார் முயன்று வருகின்ற நேரத்தில் ஆத்திகப் பற்றுக் கொண்டவர்களும், நாத்திகராக தம்மைக் காட்டிக் கொள்ளாமல் இருப்ப வர்களும் கூட, தமிழ் வாழவும், தமிழர்களுடைய கலை கலாசாரம் வென்றிடவும் பாடுபட வேண்டிய சூழல் உருவாகியிருக்கிறது.

இப்போது நாம் ஆட்சியில் இல்லை என்று இங்கே பேசும் போது சொன்னார்கள். ஆட்சியிலேயே இல்லாவிட்டாலும் எம்முடைய குறிக்கோளை நாம் இழந்துவிட மாட்டோம்.

-இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# ஆஸ்திரேலியாவுக்கு செல்ல முயன்ற 13 ஈழ அகதிகள் கேரளாவில் கைது

சென்னை, ஜூன் 15

ஆஸ்திரேலியாவுக்குத் தப்பிச் செல்வதற்காக கேரளாவில் விடுதி ஒன்றில் தங்கியிருந்த இலங்கை அகதிகள் 13 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கேரளா மாநிலம் எர்ணாகுளத்தில் உள்ள ஒரு தனியார் விடுதியில் 13 இலங்கை அகதிகள் தங்கியிருக்கின்றனர் என கேரளா பொலிஸாருக்கு இரகசியத் தகவல் கிடைத்தது. அதன் பேரில், கேரளப் பொலிஸார் சம்பந்தப்பட்ட விடுதிக்கு திடீரென்று சென்று அறைகளில் சோதனை செய்தனர்.

அப்போது அங்கு தங்கியிருந்த 13 இலங்கை அகதிகளை பொலிஸார் கைது செய்தனர். பின்னர் அந்த 13 பேரையும் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து சென்று விசாரணை நடத்தினர்.

விசாரணையில், அனைவரும் தமிழகத்தைச் சேர்ந்த இலங்கை அகதிகள் என்பது தெரியவந்தது.

இவர்கள் 13 பேரும் கடந்த 3 ஆம் திகதி அந்தந்த முகாம்களில் இருந்து தப்பி கேரளா மாநிலம் எர்ணாகுளத்தில் உள்ள ஒரு விடுதியில் தங்கியுள்ளனர். பின்னர் அங்கிருந்து ஆஸ்திரேலி யாவிற்குத் தப்பி செல்லத் திட்டமிட்டு இருந்தது தெரியவந்தது.

அதைத்தொடர்ந்து கேரளப் பொலிஸார் 13 இலங்கை அகதிகளையும் எர்ணாகுளத்தில் இருந்து தனி வான் மூலம் வேலூர் மாவட்டம் வாலாஜா பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து வந்து அவர்களை வாலாஜா பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். (வ)

# தவறாக வெளியிட்ட இந்திய வரைபடம் மீளப்பெற்றது ஆஸி.

இந்தியாவின் எல்லை மாநிலங்களான ஜம்மு-காஷ்மீர் மற்றும் அருணாச்சலப் பிரதேசம் ஆகியவை இல்லாமல் இணையத்தளத்தில் வெளியிட்ட இந்திய வரைபடத்தை ஆஸ்திரேலியா திரும்பப் பெற்றுக் கொண்டது.

ஆஸ்திரேலியாவில் உள்ள இந்தியக் குழுக்களிடம் இருந்து முறைப்பாடுகள் வந்ததையடுத்து அந்த வரைபடம் திரும்பப் பெறப்பட்டதாக குடியுரிமைத் துறை செய்தித் தொடர்பாளர் ஒருவர் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் சபை வட்டாரங்களில் இருந்து அந்த வரைபடம் பெறப்பட்டு குடியுரிமைத் துறை இணையத் தளத்தில் தவறுதலாக வெளியிடப்பட்டு விட்டதாக அந்த செய்தித் தொடர்பாளர் மேலும் தெரிவித்தார்.

ஆஸ்திரேலிய அரசின் இந்த முடிவுக்கு சிட்னியை அடிப்படையாகக் கொண்ட வெளிநாடு வாழ் இந்தியர்கள் சங்கம் வரவேற்புத் தெரிவித்துள்ளது.

முன்னதாக ஆஸ்திரேலியாவில் வசிக்கும் இந்திய சமுதாயத்தினர் கடும் கண்டனம் தெரிவித்து அவுஸ்திரேலிய அரசுக்கும் இதுதொடர்பாக கடிதம் அனுப்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சோனியாவின் வெளிநாட்டுப் பயண விவரங்களை வெளியிடவேண்டும்

## பிரதமருக்கு மத்திய தகவல் ஆணையம் உத்தரவு

காங்கிரஸ் கட்சித் தலைவர் சோனியாகாந்தி வெளிநாட்டுக்கு மேற்கொண்ட சுற்றுப் பயணங்கள் மற்றும் அதற்கான செலவுகள் குறித்த தகவல்களை வெளியிட வேண்டும் என பிரதமர் அலுவலகத்துக்கு மத்திய தகவல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

இதுதொடர்பாக ரமேஷ் வர்மா என்பவர் தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழ் ஒரு மனு தாக்கல் செய்திருந்தார்.

தேசிய ஆலோசனைக் குழுத் தலைவர் சோனியா, வெளிநாடுகளுக்கு மேற்கொண்ட சுற்றுப் பயணங்கள் குறித்தும், இதற்கான செலவுகளை யார் ஏற்றுக் கொண்டது என்பது குறித்தும் விவரங்கள் தேவை என அந்த மனுவில் அவர் குறிப்பிட்டிருந்தார்.

இந்த மனு, பிரதமர் அலுவலக விவகாரங்களுக்கான அமைச்சகத்துக்கு கடந்த 2010 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் அனுப்பி வைக்கப்பட்டது.

இதுகுறித்து மத்திய தலைமை தகவல் ஆணையர் சத்யானந்த் மிஸ்ரா கூறியதாவது:

கடந்த 10 ஆண்டுகளாக சோனியா மேற்கொண்ட வெளிநாட்டு சுற்றுப் பயணத்துக்கான எந்த செலவையும், மத்திய [illegible] தெரிவித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

இருந்தாலும் இது தொடர்பான விவரங்கள், சம்பந்தப்பட்ட மனுதாரருக்கு கொடுக்கப்பட்டதாக மத்திய அமைச்சரவை செயலரிடம் இருந்து எந்த தகவலும் இல்லை. எனவே இது தொடர்பான விவரங்களை வெளிப்படையாக தெரிவிக்க வேண்டும் என்று மிஸ்ரா தெரிவித்தார். (வ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கடந்தகாலம் பற்றிய ஒரு பரந்த பரிசீலனைக்கு புதிய அணுகு முறையொன்று தேவைப்படுகின்றது

## முன்னர் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுக்கள் தோல்விகண்டுள்ளன

மனித உரிமை மீறல்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்களை உண்மையாக புலனாய்வு செய்வதற்கு மோதலின் காரண காரியங்கள் மீது கவனம் செலுத்தி கடந்த காலம் பற்றிய பரந்த ஒரு பரிசீலனையை மேற்கொள்ள புதியதோர் அணுகுமுறை தேவையென்று ஐ.நா. நிபுணர்குழு தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது .

*(நேற்றைய தொடர்ச்சி)*

(145)

433. மக்கள் தம் வாழ்வை மீளக் கட்டியெழுப்ப உதவி வழங்குவது என்பது பொருளினாலான நன்மைகளை மாத் திரம் வழங்குவது என்பதாக ஆத்தோடு, அவை தேவையாக இருந்தபோதிலும், உரிமைகள் பாதிக்கப்பட்ட மற்றும் தொடர்ந்து பாதிக்கப்பட்டு வருபவர்களின் நிலைமை பற்றி கட்டாயமாக அரசு பல நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. பொறுப்புக்கூறல் தொடர்பில் அரசு உண்மையான நடவடிக்கைகளை எடுப்பதையும் அது தேவைப்படுத்துகிறது.

### 7. கற்ற பாடங்கள் மற்றும் மீளிணக்கப்பாட்டு ஆணைக்குழு

434. 2002 ஆம் ஆண்டின் போர் நிறுத்த உடன்படிக்கை முதல் 2009 மே மாதம் யுத்தம் முடிவடைந்த காலம் வரையிலான கடந்த காலம் மீது கவனம் செலுத்துவதற்காக அதன் இன்றியமையாத கொள் கையாக அரசு கற்ற பாடங்கள் மற்றும் மீளிணக்கப்பாட்டு ஆணைக்குழுவை அமைத்துள்ளது. எல்.எல்.ஆர்.சி. இலங்கையின் போர் விட்டுச் சென்றது பற்றிய தேசிய கலந்துரையாடல் ஒன்றை ஆரம்பிப்பதற்கான பிரயோசனமாக சந்தர்ப்பத்துக்கான நிலைச்சக்தியை எல்.எல் . ஆர்.சி. பிரதிநிதித்துவப்படுகிறது. ஆணைக்குழு முன்னிலையில் தாமாகவே வந்து கதைப்பதற்காக, அதிக எண்ணிக்கையினர் குறிப்பாகப் பாதிக்கப்பட்டோர் முன்வந்தமை அத்தகையதொரு கலந்துரையாடலுக்கான தேவையை எடுத்துக்காட்டுவதாக வுள்ளது.

435. ஆயினும், ஆணைக்குழுவின் அமைப்பு மற்றும் அதன் சில அங்கத்தவர்களின் ஆழமான அக்கறை முரண்பாடு காரணமாக எல்.எல்.ஆர்.சி முக்கிய சர்வதேச தரங்களான சுயாதீனம் மற்றும் பக்கச்சார்பற்ற தன்மை ஆகியவற்றை நிறைவேற்றத் தவறியுள்ளது.

எல்.எல்.ஆர்.சியின் ஆணை மற்றும் இன்று வரையிலான அதன் நடவடிக்கைகள் மற்றும் முறைமை அது சர்வதேச மனிதாபிமான மற்றும் உரிமைகள் சட்டத்தின் பெரிய மீறல்கள் பற்றிய குற்றச்சாட்டுக்களை புலனாய்வு செய்வதற்கு அல்லது பல தசாப்தங்களாக நடைபெற்று வந்த இனத்துவ மோதலின் அடிப்படைக் காரண, காரியங்களைப் புலனாய்வு செய்வதற்காக வடிவமைக்கப்படவில்லை. மாறாக அவை மேலே குறிப்பிட்ட அரசியல் பொறுப்புப் பற்றிய பரந்ததொரு கருத்தில் கவனம் செலுத்துவதோடு அது அரசின் தவறான மற்றும் அரைவாசி மனுவுருவான பொறுப்புக்கூறலின் ஒரு பகுதியாக இருக்கிறது. யுத்தத்தின் இறுதிக்கட்டங்களில் என்ன நடந்தது என்பது பற்றிய உண்மையான உண்மையைக் கண்டறியும் முயற்சியை அல்லது யுத்தத்தில் ஈடுபட்ட இருதரப்பினரும் பெரிய குற்றச்சாட்டுக்களை ஒழுங்காகவும் பக்கச்சார்பு இன்றியும் புலனாய்வு செய்ய அது நடவடிக்கை எடுக்கவில்லை என்பதையும் , பாதிக்கப்பட்டவர்களை அவர்கள் கௌரவம் மற்றும் அனுபவித்த துன்பத்துக்காக முழுமரியாதையுடன் அவர்களை நடத்தும் அணுகுமுறை ஒன்றை மேற்கொள்ள வில்லை என்பதையும் அவர்கள் தமக்கு உண்மையான அச்சுறுத்தலை எதிர்நோக்கிய போதிலும் சாட்சிகளுக்குத் தேவையான பாதுகாப்பை வழங்கவில்லை. இது வரையிலான

**ஐ.நா. செயலாளரிடம் நிபுணர் குழு வழங்கிய அறிக்கை**
**பகுதி -41**

எல்.எல்.ஆர்.சியின் நடவடிக்கைகள் இதனை எடுத்துக்காட்டுகின்றன.

(146)

436. மேலும், பல பெரிய மனித உரிமைகள் விடயங்கள் பற்றி பரி சீலனை செய்வதற்காக மூன்று தசாப்தங்களாகப் பல விசாரணை ஆணைக்குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. முக்கியமாக உண்மையைக் கண்டறிவன வாக அவற்றுள் சில செயற்பட்டுள்ள போதிலும், அநேகமாக இனங்காணப்பட்ட மீறல்கள் தொடர்பாக முழுமையான பொறுப்புக் கூறல் பயன்களைப் பெற்றுக்கொடுப்பதில் அவை தோல்வியடைந்துள்ளன. பல ஆணைக்குழுக்கள் பகிரங்க அறிக்கையை வெளியிடத் தவறியுள்ளதோடு அவற்றின் பரிந்துரைகள் அமுல்செய்யப்படுவது அபூர்வமாக இருந்துள்ளது.

437. எல்.எல்.ஆர்.சி. இலங்கையருக்குத் தமது ஆதங்கங்கள் சிலவற்றை எடுத்துக் கூறுவதற்கானதொரு சந்தர்ப் பத்தை அளித்துள்ளது என்பதோடு, அதன் இடைக்கால மற்றும் எதிர்வரும் இறுதிப் பரிந்துரைகள் திரட்டாக எடுத்துக் கொள்ளப்படும் போது, அவை யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் சிலரின் வாழ்க்கை நிலைமைகளைச் சீராக்கக்கூடும். ஆயி னும், எல்.எல். ஆர். சி. பெரும் குறை பாட்டைக் கொண்ட தாகவும் பயனுறு பொறுப்புக் கூறல் பொறித்தொகுதிக் கான சர்வதேச தரங்களை நிறைவு செய்யவில்லை என்பதாலும் பொறுப் புக்கூறல் செயற்பாடு தொடர்பான இலங்கை ஜனாதிபதி மற் றும் செயலாளர் நாயகத்தின் இணைந்த உறுதிப் பாட்டை நிறைவுசெய்ய அதனால் முடியாதிருக்கிறது. தமிழீழ விடுதலைப் புலிகள் மற்றும் அரசு ஈடுபட்ட மீறல்கள் பற்றிய குறிப்பான குற்றச் சாட்டுக்களை உண்மையாகப் புலனாய்வு செய்வதை உறுதிப்படுத்துவதற்காகவும் மோதலின் முக்கிய காரண காரியங்கள் மீது கவனத்தைச் செலுத்தி கடந்த காலம் பற்றிய பரந்த ஒரு பரிசீல னையை மேற் கொள்வதற்காகவும் புதியதோர் அணுகு முறை தேவைப்படுகிறது.

### 8. இலங்கையின் நீதித்துறை அமைப்பு மற்றும் மனித உரிமைகள் ஆணைக்குழு

438. எல்.எல்.ஆர்.சியின் செயற்பாடுகள் மற்றும் அதன் விளைவுகள் எதுவாக இருந்தாலும், பொறுப்புக் கூறலைத் தொடர்வதில் நீதி அமைப்பு முறை முன்னணிப் பாத்திரமொன்றை வகிக்க வேண்டும்.

*(வளரும்)*







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துருக்கி நாடாளுமன்றத் தேர்தலில் ஆளும் கட்சி அமோக வெற்றி

## மூன்றாவது முறையாகப் பதவியேற்கிறார் பிரதமர் எர்டோயன்




இஸ்தான்புல், ஜூன் 15

துருக்கியில் சமீபத்தில் நடந்த பொதுத் தேர்தலில், பிரதமர் எர்டோயன் மூன்றாவது முறையாக வெற்றி பெற்றுள்ளார்.

துருக்கியில், பிரதமர் தலைமையிலான நாடாளுமன்ற அரசியல் அமைப்பு செயற்படுகிறது. இதற்கு, நான்காண்டுகளுக்கு ஒருமுறை பொதுத் தேர்தல் நடத்தப்படும். நேற்று முன்தினம், அங்கு பொதுத் தேர்தல் நடந்தது.

கடந்த 2003 இல் முதன் முறையாக ஆட்சியைப் பிடித்த நீதி மற்றும் மேம்பாட்டுக் கட்சியின் சார்பில், ரெட்ஜெப் டாயிப் எர்டோயன் பிரதமரானார். அதன் பின், 2007இல் நடந்த பொதுத் தேர்தலிலும் வெற்றி பெற்றார். தற்போது, மூன்றாவது முறையாகவும் அவரது கட்சி வெற்றி பெற்றுள்ளது.

நாடாளுமன்றின் மொத்தம் உள்ள 550 இடங்களில், அவரது கட்சி 325 இடங் களைப் பிடித்தது. ஆளும் கட்சிக்கு 50 சதவீத வாக்குகளும், பிரதான எதிர்க் கட்சியான குடியரசு மக்கள் கட்சிக்கு 22 சதவீதம் வாக்குகளும் மற்றொரு எதிர்க் கட்சிக்கு 13 சதவீத வாக்குகளும் கிடைத்தன.

ஏழு கோடி மக்கள் தொகையுள்ள அந்நாட்டில், ஐந்து கோடிப் பேர் வாக்களித்தனர். 84.5 சதவீதம் வாக்குகள் பதிவாகின. கடந்த முறை நாடாளுமன்றில் 50 பெண் எம்.பி.,க்கள் இருந்தனர். இம்முறை 78 ஆக அவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

மேலும், நாட்டின் அதிக அதிகாரம் உள்ளதாக அதிபர் பதவியை உருவாக்கி, அதில் எர்டோயன் அமரத் திட்டமிட்டுள்ளதாகவும், அதற்கேற்ப அரசியல் சாசனத்தைத் திருத்த அவர் திட்டமிட்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# மும்பைத் தாக்குதலுக்கு ஐ.எஸ்.ஐ. ஆயுதப் பயிற்சி; நீதிமன்ற விசாரணையில் ஹெட்லி வாக்குமூலம்

வாஷிங்டன்,ஜூன்15

ஐ.எஸ்.ஐ., எனக்கு எல்லாவித உதவிகளையும் அளித்தது என டேவிட் கோல்மன் ஹெட்லி நீதிமன்றில் வாக்குமூலம் அளித்தார்.

மும்பையில், 2008, நவம்பர், 26இல் பாகிஸ்தானைச் சேர்ந்த லஷ்கர்- இ-தொய்பா தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியதில், 166 பேர் பலியாயினர். இச்சம்பவத்தை நடத்துவதற்காக பலமுறை இந்தியா வந்து நோட்டமிட்டு சென்று, சதித் திட்டத்தை ஏற்படுத்திக் கொடுத்த அமெரிக்க வாழ் பாகிஸ்தானியரான டேவிட் கோல்மன் ஹெட்லி, 2009, ஒக்ரோபரில் சிக்காகோவில் கைது செய்யப்பட்டார். இவருக்கு உதவிய தகாவுர் ராணாவிடம் சமீபத்தில் விசாரணை நடந்தது.

இது தொடர்பாக ஹெட்லி, சிக்காகோ நீதிமன்றில் கூறியதாவது: லாகூர் விமான நிலையம் அருகே உள்ள இரண்டடுக்கு மாடியில் தான் எனக்கு உளவு பார்ப்பது, ரகசியமாகப் படம் எடுப்பது உள்ளிட்ட அனைத்து பயிற்சிகளும் அளிக்கப்பட்டன.

லஷ்கர்-இ-தொய்பா முகாமில் எனக்கு அளிக்கப்பட்ட பயிற்சிக் குறிப்புகளை பார்த்த ஐ.எஸ்.ஐ., அதிகாரி மேஜர் இக்பால் இந்தப் பயிற்சி உனக்குப் போதாது எனக்கூறி, மேஜர் அலி மூலம் கைபர் ரைபள் ரெஜிமண்ட்டில் ஆயுதப்பயிற்சி அளித்தார்.

என்னுடைய நண்பர்களுடன் ஐ.எஸ்.ஐ.,யை பற்றி குறிப்பிடும் போது, 'மிஸ்டர் பாலாஸ் கம்பெனி' என்ற சங்கேத வார்த்தையைத் தான் பயன்படுத்துவேன். மக்களை எப்படி ஏமாற்றுவது, உளவு பார்ப்பது, எப்படி பொழுது போக்குவது என்பதையெல்லாம் கற்றுத்தந்த ஐ.எஸ்.ஐ., என் பெயரை மாற்றவும் உதவி செய்தது. இவ்வாறு, ஹெட்லி, இரண்டு வாரத்துக்கு முன் சிக்காகோ நீதிமன்றில் வாக்கு மூலம் அளித்தார்

## சந்திப்பு....



ஜப்பான் வந்திருந்த டென்மார்க் இளவரசர் பிரடெரிக் அந்த நாட்டு மன்னர் அஹிஹிட்டோ (இடது) ராணி மிச்சிகோவை தலைநகர் டோக்கியோவில் உள்ள மன்னர் அரண்மனையில் சந்தித்தார்.

# அமெரிக்கா - உக்ரைன் ஒத்திகைக்கு அயல்நாடான ரஷ்யா கடும் எதிர்ப்பு

சோவியத் ரஷ்யாவில் இருந்து தனி நாடாகப் பிரிந்துள்ள உக்ரைனுடன் இணைந்து அமெரிக்க கப்பற்படை கருங்கடலில் போர் ஒத்திகை நடத்த உள் ளது. அதற்காக அமெரிக்காவின் அதிநவீன போர்க் கப்பல் அங்கு நிறுத்தப்பட உள்ளது. இதற்கு உக்ரைனின் பக்கத்து நாடான ரஷ்யா கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

ஐரோப்பிய நாடுகளில் உலகளாவிய ஏவுகணைத் தடுப்பு நடவடிக்கையில் அமெரிக்கா ஈடுபட்டுள்ளது. இதன்மூலம் ரஷ்யாவின் பாதுகாப்புக்கு ஆபத்து ஏற்படும் சூழ்நிலை உருவாகி உள்ளது என்று தெரிவித்துள்ளது.

இதனையடுத்து இந்த ஏவுகணை எதிர்ப்பு நடவடிக்கையில் தங்களையும் இணைத்துக் கொள்ள வேண்டும். அத்துடன்அமெரிக்காவின் நடவடிக்கையால் ரஷ்யாவுக்கு பாதிப்பு ஏற்படாது என்ற உத்தரவாதமும் வழங்க வேண்டும் என நேட்டோ நாடுகளை ரஷ்யா வலியுறுத் தியது.

ரஷ்யாவின் இந்தக் கோரிக்கையை ஏற்க நேட்டோ நாடுகள் மறுத்து விட்டன. இதைத் தொடர்ந்து அமெரிக்க போர்க் கப்பல் கருங்கடலுக்குள் நிலை நிறுத்தக் கூடாது என்று ரஷ்யா எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

# எரிமலை புகையினால் பான் கீ - மூனின் பயணம் பாதிப்பு

பயூனோஸ்,ஜூன்15

ஆர்ஜென்டீனா நாட்டில் சுற்றுப்பயணம் மேற்கொண்ட ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ-மூன் எரிமலை புகையினால் பாதிப்படைந்தார்.

சிலிநாட்டில் உள்ள எரிமலை ஒன்று வெடித்துச் சிதறியது. இதில் இருந்து வெளியேறிவரும் புகையால் அருகில் உள்ள நாடுகளின் விமான சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன. இந் நிலையில் ஐ.நா. பொது செயலாளர் பான் கீ - மூன் ஆர்ஜென்டீனா நாட்டுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டார். அப்போது அவரது பயணம் எரிமலைப் புகையினால் பாதிக்கப்பட்டது.

இதனையடுத்து அவர் தரைவழியாக ஆர்ஜென்டீனா நாட்டுக்கு சென்றார். இது குறித்து அவர் கூறுகையில்: சாலை வழியில் பயணத்தை தொடர்ந்ததால் நீண்டநேர ஓய்வு கிடைத்ததாகக் கூறினார்.நேற்று முன்தினம் தன்னுடைய 67 ஆவது பிறந்த நாளை கொண்டாடிய பான்கி -மூன் இரண்டாவது முறையாக ஐ.நா. பொது செயலாளர் தேர்தலில் போட்டியிடுவதற்கு பல்வேறு நாடுகள் ஆதரவு தெரிவித்து வருகின்றன.

# சீனாவின் தொழில் நுட்ப உதவியுடன் பாகிஸ்தான் அணு ஆயுதங்கள் தயாரிப்பு

வாஷிங்டன்,ஜூன்15

சீனாவின்தொழில் நுட்ப உதவியுடன் பாகிஸ்தான்அணு ஆயுதங்கள் தயாரித்து வருவதாக வாஷிங்டனில் நடைபெற்ற வெளியுறவுத்துறை குறித்த கருத்தரங்கில் அமெரிக்காவின் செனட்டர் ஜிம்வெப் தெரிவித்துள்ளார்.

சீனா-பாகிஸ்தான் இடையே நிலவிவரும் நீண்டகால நட்புறவே இதற்கு உதாரணமாகும் எனத் தெரிவித்தார்.

மேலும் பாகிஸ்தானில் இருந்து வெளியேற்றப்பட்ட அமெரிக்க அதிகாரி ஜோன் கெர்ரி பேசுகையில்; கடந்த சில மாதங்களுக்கு முன்னர் சீனாவிற்கு சென்றிருந்த பாகிஸ்தான் அதிபர் சீனா தலைசிறந்த நட்பு நாடு என்று பாராட்டியுள்ளதையும் குறிப்பிட்டார்.

# எரிமலை வெடிப்பால் ஆஸ்திரேலிய விமான சேவைகள் ரத்து

வெலிங்டன்,ஜூன்15

சிலி நாட்டின் புயேஹு எரிமலை வெடிப்புக் காரணமாக ஆஸ்திரேலியாவின் குவான் டாஸ் விமான நிறுவனம் நியூஸிலாந்து சென்று திரும்பும் அனைத்து விமான சேவைகளையும் ரத்துச் செய்துவிட்டது.

இதேபோல் குவான்டாஸ் நிறுவனத்தின் துணை நிறுவனமான ஜெட் ஸ்டார் நிறுவனமும் 60 க்கும் அதிகமான விமான சேவைகளை நிறுத்தியுள்ளது.

இதனால் ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து விமான நிலையங்களில் ஏராளமான பயணிகள் காத்திருக்கின்றனர்.

வர்ஜின் அவுஸ்திரேலியா விமான நிறுவனமும் நியூஸிலாந்து செல்லும் 2 விமானங்களை ரத்து செய்தது. ஆனால் எயார் நியூஸிலாந்து விமான நிறுவனம் மாற்றுவழியில் விமானத்தை இயக்குகின்றன.

எரிமலை சாம்பல் விமான ஜெட் இன்ஜினுக்குள் சென்றால் அதன் செயற்பாடு மோசமாகப் பாதிப்படையும் என [illegible] துள்ளது.

# லிபிய அரசு தொலைக்காட்சியில் செஸ் விளையாடும் கடாபி



ஜாவியா, ஜூன் 15

லிபிய அரசு தொலைக் காட்சி, நேற்று முன்தினம் கடாபி தொடர்பான சில காட்சிகளை ஒளிபரப்பியது. அதில், உலக சதுரங்க கூட்டமைப்பின் தலைவரும் ரஷ்யருமான கிர்சன் இலியும்ஷ்னோவ், கடாபியுடன் சதுரங்கம் விளையாடுவது இடம்பெற்றிருந்தது.

லிபியாவில் கடாபி தரப்பு மற்றும் எதிர்தரப்புக்கு இடையிலான மோதல், கடந்த நான்கு மாதங்களாகத் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது.

ஜாவியா, பரிகா, ஜின்டான் ஆகிய நகரங்களில் இரு தரப்புக்கிடையிலான மோதல்கள் வலுப் பெற்றுள்ளன. கடாபி ராணுவத்தின் இரு வெடி பொருள் கிடங்குகள் மீது, 'நேட்டோ' விமானப் படைகள் குண்டு வீசி தாக்கி அழித்தன.

இந்நிலையில், இதுகுறித்து செய்தியாளர்களிடம் பேசிய கிர்சன், ''கடாபி லிபியாவை விட்டு வெளியே போகப் போவதில்லை'' என்று உறுதியாகத் தெரிவித்தார்.


எந்தப் பதவியையும் வகிக்காத தன்னை பதவி விலகச் சொல்வது விசித்திரமாக உள்ளதாகவும் அவர் கூறினார்'' என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
15 ஜூன் 2011 புதன்கிழமை

# ஜொலிஸ்ரார் கிண்ண இறுதியாட்டம் இன்று





யாழ்ப்பாணம், ஜூன் 15

ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையில் ஜொலிஸ்ரார் வெற்றிக் கிண்ணத்துக்காக நடத்திவரும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் இன்று காலை 9.30 மணிக்கு யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இறுதியாட்டத்தில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி பண்பாட்டு அலுவலக விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் எஸ்.இளங்கோவனும் சிறப்பு விருந்தினராக பொன்மனச்செம்மல் ஈ.ஸ்.பி. நாகரெட்ணமும் கலந்து கொள்ளவுள்ளனர். (ஐ-86-23)

## கிளிநொச்சிப் பிரதேச எல்லே இறுதியாட்டம்; கரைச்சி, கண்டாவளை சம்பியன்கள்

கிளிநொச்சி பிரதேச செயலகங்களுக்கு இடையிலான எல்லே போட்டியில் ஆண், பெண் இருபாலாருக்கும் இடையில் இடம்பெற்ற எல்லே இறுதியாட்டத்தில் ஆண்கள் பிரிவில் கரைச்சி பிரதேச செயலக பிரிவு அணியும் பெண்கள் பிரிவில் கண்டாவளை பிரதேச செயலக பிரிவு அணியும் வெற்றி பெற்றன.

கிளிநொச்சி மத்திய விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் ஆண்கள் பிரிவில் கரைச்சிப் பிரதேச செயலகபிரிவு அணியை எதிர்த்து கண்டாவளை பிரதேச செயலக பிரிவு அணி மோதிக் கொண்டன.

கரைச்சிப்பிரதேச செயலக பிரிவு அணிஎதிர்த்து விளையாடிய கண்டாவளை பிரதேச செயலக அணி 11:4 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி கொண்டது.

பெண்களுக்கான இறுதியாட்டத்தில் கண்டாவளைப் பிரதேச செயலக பிரிவு அணியை எதிர்த்து கரைச்சிப் பிரதேச செயலகபிரிவுஅணி மோதிக்கொண்டது.

கண்டாவளை பிரதேச செயலகப் பிரிவு அணி, எதிர்த்து விளையாடிய கரைச்சிப் பிரதேச செயலகப் பிரிவுஅணியை 2:1 என்றகோள் கணக்கில் வெற்றி கொண்டது. (ஐ- 23)

## மாற்றுத்திறன் உடையோரின் விளையாட்டு; சிவபூமிப் பாடசாலை சம்பியனானது

யாழ்ப்பாணம், ஜூன் 15

வலிகாமம் கல்வி வலய விசேட கல்வி நிலையத்தின் ஏற்பாட்டில் மாற்றுத்திறனுடையோருக்காக நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டியில் சிவபூமி பாடசாலை சம்பியனானது.

அளவெட்டி அருணோதயக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் விசேட கல்வித் தேவையுடைய மாற்று வலுவுள்ள 922 மாணவர்கள் பங்கேற்று தமது திறன்களை வெளிக்காட்டினர்.

வலிகாமம் வலயக்கல்விப் பணிப்பாளர் ஆ.ராஜேந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் திருமதி செல்வின் இரேனியஸ் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் மு.இராதா கிருஷ்ணன், மாகாண உதவிக் கல்விப் பணிப்பாளர் மணிமாறன், மாகாண உதவிக்கல்விப் பணிப்பாளர் க.கமல்ராஜன் ஆகி யோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கடவுளின் குழந்தைகள் நிறுவன பணிப்பாளர் திருமதி ஜசிந்தா அன்ரன் கௌரவ விருந்தினராகவும் பங்குபற்றினர். சிறப்பு நிகழ்வான விசேட பாடசாலை மாணவர் களின் உடற்பயிற்சிக் கண்காட்சிகள் பார்ப்போர் மனதைக் கொள்ளை கொண்டன.

இந்த ஆண்டின்சம்பியன்கிண்ணத்தை சிவபூமி பாடசாலை தட்டிச் சென்றது. அனைத்து ஒழுங்குகளையும் வலிகாமம் கல்வி வலயப் பிரதேச விசேட கல்வி வள நிலைய முகாமையாளர் நி.முருகானந்தன் மேற்கொண்டிருந்தார். (ஐ)

## மாகாண மட்டத்திலான மென்பந்தாட்டம் நாளையும் மறுநாளும் வவுனியாவில்

வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான பெருவிளையாட்டுப் போட்டிகளில் ஆண், பெண் இருபாலாருக்குமான மென்பந்து துடுப்பாட்டப் போட்டி நாளை வியாழக்கிழமையும் மறுநாளும் வவுனியாவில் இடம்பெறவுள்ளது.

யாழ்.மாவட்டத்திலிருந்து ஆண்கள் பிரிவில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம், கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி ஆகியனவும், பெண்கள் பிரிவில் - விக்ரோறியாக் கல்லூரி, வட்டு. இந்து மகளிர், மெதடிஸ்த மகளிர் உயர்தரப் பாடசாலை ஆகியனவும் பங்குபற்றுகின்றன. (ஐ-23)

## வெள்ளிப் பதக்கம் வென்ற யாழ்.வீரன்

யாழ்ப்பாணம் செ்ன.பற்றிக்ஸ் கல்லூரி வீரன் எஸ்.லிவிங்டன் அகில இலங்கை மெய்வன்மைச் சங்கத்தால் அகில இலங்கை வீர, வீராங்கனைகளுக்கு இடையே நடத்திய கனிஷ்டபிரிவு தடகளப் போட்டியில் இரண்டாமிடத்தைப் பெற்று வெள்ளிப் பதக்கத்தைப் பெற்றுக் கொண்டார். கடந்தவாரம் கொழும்பு தியகமவில் உள்ள மகிந்த ராஜபக்ஷ சர்வதேச விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற 19 வயதுப் பிரிவு ஆண்களுக்கான ஈட்டி எறிதல் போட்டியில் லிவிங்டன் இரண்டாமிடத்தைப் பெற்று கல்லூரிக்கும் யாழ். மாவட்ட மெய்வன்மைச் சங்கத்துக்கும் பெருமை சேர்த்துக் கொடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (ஐ-86)

## 96 ஓட்டங்களால் வென்றது செ்ன.ஜோன்ஸ்

யாழ்ப்பாணம், ஜூன் 15

செ்ன.ஜோன்ஸ்கல்லூரி, செ்ன. பற்றிக்ஸ் கல்லூரி ஆகியவற்றின் 17 வயதுப் பிரிவினருக்கு இடையில் இடம்பெற்ற சிநேகபூர்வமான கிரிக்கெட் ஆட்டத்தில் செ்ன. ஜோன்ஸ் கல்லூரி அணி 96 ஓட்டங்களால் வென்றது.

கடந்த சனிக்கிழமை செ்ன. பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் முதலில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற செ்ன. ஜோன்ஸ் கல்லூரி அணி துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

48.2 பந்து பரிமாற்றம் நிறைவில் அனைத்து இலக்குகளையும் இழந்து 223 ஓட்டங்களைப் பெற்றது.

கிருந்திகன் 50 ஓட்டங்களையும், எட்வின் ஜோய் 51 ஓட்டங்களையும் கவாஸ்கர் 44 ஓட்டங்களையும் பிருந்தாபன் ஆட்டம் இழக்காமல் 14 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றனர்.

செ்ன.பற்றிக்ஸ் கல்லூரி அணி வீரர்களான அஜித்டார்வின் 54 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் தனுசங்கர் 19 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் தனுசன் 27 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும் ஜான்ஸ்சன், 25 ஓட்டங்களுக்கு ஓர் இலக்கையும் கஜிந்திரன் 34 ஓட்டங்களுக்கு ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

224 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியெனப் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய செ்ன. பற்றிக்ஸ் கல்லூரி அணி 34.5 பந்து பரிமாற்றம் முடிவில் 127 ஓட்டங்களை மட்டும் பெற்றது. மொரிஸ் ஆட்டம் இழக்கா மல் 33 ஓட்டங்களையும் கஜீந்தி ரன் 24 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றுக் கொடுத்தனர்.

செ்ன.ஜோன்ஸ் கல்லூரி அணி வீரர்களான கஜன் 9 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும் எட்வின் ஜோய் 15 ஓட்டங்க ளுக்கு ஓர் இலக்கையும் பிரிந் தாபன் 23 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் கவாஸ்கர் 31 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் சிவ லக்ஸ்சன் 10 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் கைப்பற்றினர். (ஐ-23)

## கிளிநொச்சி பிரதேச தடகளப் போட்டி

யாழ்ப்பாணம் ஜூன் 15

கிளிநொச்சி மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான தடகளப் போட்டிகள் எதிர்வரும் சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

தடகளப் போட்டியின் பரிசளிப்பு வைபவ நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராகக் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரனும் சிறப்பு விருந்தினராக வடமாகாண விளையாட்டுத்துறைப் பணிப்பாளர் சி.அண்ணாத்துரையும் கலந்து கொள்ளவுள்ளனர். (ஐ-23)

## மாகாண அரை மரதன் ஓட்டம்; கிளிநொச்சி வீராங்கனை முதலிடம்

வலி.வடக்கு, ஜூன் 15

வடமாகாண கல்வித் திணைக்களத்தால் வட மாகாண கல்வி வலயப் பாடசாலைகளின் வீராங்கனைகளுக்கு இடையே கடந்த சனிக்கிழமை காலை நடத்தப்பட்ட 16 இற்கும் 19 வயதுக்கும் இடைப்பட்ட வீராங்கனைகளுக்கான அரை மரதன் ஓட்டப் போட்டியில் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த பாரதி வித்தியாலய மாணவி பி.விமலாதேவி முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

வடமாகாணக் கல்வித் திணைக்களத்தால் முதல் தடவையாக அரை மரதன் ஓட்டப் போட்டி அறிமுகம் செய்யப்பட்டு இடம்பெற்றது. வட மாகாணத்துக்கு உட்பட்ட பன்னிரண்டு கல்வி வலயங்களில் இருந்தும் 27 வீராங்கனைகள் இந்தப் போட்டியில் கலந்து கொண்டார்கள்.

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் இருந்து ஆரம்பிக்கப்பட்ட ஓட்டப்போட்டி கரவெட்டி பிரதேசசபை முன்றிலில் முடிவடைந்தது. இந்தப் போட்டியில் கலந்து கொண்டு முதல் பத்து இடங்களைப் பெற்ற வீராங்கனைகளின் விவரங்கள் வருமாறு:

பி.விமலாதேவி (கிளிநொச்சி பாரதிவித்தியாலயம் -1:37:06), சிவசுப்பிரமணியம் தீபா(கிளிநொச்சி தர்மபுரம் ம.வி-1:38:20), இராஜசுரேந்திரன் சாலினி (வவுனியா சுந்தரபுரம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை -1:39:10), யேசுதாசன் மரியகொறற்றி (யாழ்.எழுவைதீவு முருகவேள் வித்தியாலயம் -1:42:10), முருகையா ஜெயந்தினி (கிளிநொச்சி இராமநாதபுரம் கிழக்கு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை-1:43:40), ஜெ.வனோஜா (வவுனியா கல்மடு மகா வித்தியாலயம்), எஸ்.மேரிசுஸ்மிதாடயஸ் (மன்னார் புனிதவளனார் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை), எ.ரேணுகா (கொடிகாமம் கச்சாய் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை), எ.அனா (மன்னார் எழுத்தூர் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை), பி.ரேணுகா (வவுனியா ஓமந்தை மகாவித்தியாலயம்), வடமாகாணத்தில் முதல் தடவையாக இந்த அரை மரதன் ஓட்டப்போட்டி இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. போட்டிகளுக்கான ஏற்பாடுகளை வட மாகாண உற் கல்விப் பணிப்பாளர் கே.சத்திய பாலன் மேற்கொண்டு இருந்தார். (ஐ-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான் தகுதியானவன் அல்ல....!



- அம்லா

அணித்தலைவர் பதவிக்கு நான் தகுதியானவன் அல்ல என்று தென்னாபிரிக்க அணியின் துணைத் தலைவர் அம்லா தெரிவித்துள்ளார்.

சமீபத்தில் நடந்த உலகக் கிண்ணத் தொடருக்கு பின்னர், தென்னாபிரிக்க அணியின் ஒரு நாள் மற்றும் 'ரி- 20' போட்டிகளுக்கான தலைமைப் பொறுப்பில் இருந்து ஸ்மித் விலகினார். இதனால், ஒருநாள் மற்றும் 'ரி- 20' போட்டிகளுக்கு டி. விலியர்ஸ் புதிய தலைவராக சமீபத்தில் நியமிக்கப்பட்டார். துணைத் தலைவராக ஹசிம் அம்லா அறிவிக்கப்பட்டார்.

இது குறித்து அம்லா கூறியதாவது, தென்னாபிரிக்க அணியின் தலைமைப் பொறுப்புக்கு டி. விலி யர்ஸ் மிகவும் தகுதியானவர். தலைவர் பதவி என்பது சாதாரண விடயமல்ல. இதற்கு நிறைய பொறுப்புகள், கடமைகள் உள்ளன. எனவே இந்தப் பதவிக்கு நான் தகுதியானவன் அல்ல. துணைத் தலைவர் பதவி போதுமானதாக கருதுகிறேன்.

ஸ்மித் தலைமைப் பொறுப்பில் இருந்து விலகியவுடன், நான் தலைவராக நியமிக்கப்படலாம் என்று ஊடகங்களில் கருத்து வெளியாகின. இது மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது. ஆனால் தற்போது எனது கவனம் முழுவதையும் துடுப்பாட்டத்தில் செலுத்தியுள்ளேன். இதன்மூலம் 'ரி-20' போட்டிகளில் நிரந்தர இடம் பிடிக்கலாம்.

அடுத்து வரும் நாள்களில் நிறைய 'ரி- 20' மற்றும் ஒரு நாள் போட்டிகளில் பங்கேற்று, வரும் 2015 இல் நடக்கவுள்ள உலகக் கிண்ணத் தொடரில் சாதிக்க விரும்புகிறேன் என்று அம்லா தெரிவித்தார். (15)

## ஆறுதல் வெற்றி அபார வெற்றி

இந்தியாவுக்கு எதிரான நான் காவது ஒரு நாள் போட்டியில், 103 ஓட்டங்கள் வித்தியாசத்தில் மேற்கிந்தியத்தீவுகள் அணி அபார வெற்றி பெற்றது.

மேற்கிந்தியத்தீவுகள் சென் றுள்ள இந்திய அணி 5 ஆட்டங்கள் கொண்ட ஒரு நாள் தொடரில் பங்கேற்கின்றது. முதல் 3 ஆட்டங்களில் வென்ற இளம் இந்திய அணி, தொடரை(3-0) எளிதாக கைப்பற்றியது. நேற்று முன்தினம் அன்டிகுவாவில் முக்கியத்துவமில்லாத நான்காவது ஆட்டம் நடந்தது. இதில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணித் தலைவர் ரெய்னா முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தார்.

### ஆரம்பம் மோசம்

மேற்கிந்தியத்தீவுகள் அணி மீண்டும் ஒரு முறை திணறல் துவக்கம் கண்டது. இஷாந்த் வேகத்தில் டான்சா ஹியாத் (1) காலியானார். பிரவீன் குமார் பந்தில் சர்வான் (1) ஆட்டமிழந்தார். அப்போது 2 விக்கெட்டுக்களுக்கு வெறும் 12 ஓட்டங்கள் எடுத்து தத்தளித்தது. பின் டரன் பிராவோ, லெண்டில் சிம்மொான்ஸ் இணைந்து போராடினர். அதிரடியாக ஆடிய சிம்மொன்ஸ், இஷாந்த் சர்மா ஓவரில் ஒரு பவுண்டரி, சிக்சர் அடித்தார். தொடர்ந்து அமித் மிஸ்ரா ஓவரில் அடுத்தடுத்து இரண்டு இமாலய சிக்சர்கள் விளாசினார். மிஸ்ரா சுழலில் பிராவோ (15), மர்லான் சாமுவேல்ஸ்(8) சிக்கினர். ஒரு பக்கம் விக்கெட்டுக்கள் சரிந்தாலும் மறுபக்கம் பொறுப்பாக ஆடிய சிம்மொன்ஸ் அரைசதம் கடந்தார். இவர் 67 ஓட்டங்களுடன் ரன் அவுட்டாக, நிலைமை மோசமானது. இதற்கு பின் பொலார்ட், கார்ல்டன் பாக் இணைந்து அணியை மீட்டனர். மனோஜ் திவாரி ஓவரில் பொலார்ட் ஒரு சிக்சர், பவுண்டரி அடித்தார். தொடர்ந்து மிஸ்ரா ஓவரிலும் ஒரு சிக்சர், பவுண்டரி அடித்தார். அரை சதம் கடந்த பொலார்ட் (70), அஷ்வின் சுழலில் வீழ்ந்தார். கடைசி கட்டத்தில் கார்ல்டன் பாக், அன்ட்ரு ருசல் இணைந்து அதிரடி காட்டினர். இஷாந்த் ஓவரில் ருசல் ஒரு பவுண்டரி, பாக் 2 பவுண்டரி அடிக்க, மொத்தம் 14 ஓட்டங்கள் எடுக்கப்பட்டன. அமித் மிஸ்ரா வீசிய அடுத்த ஓவரில் ருசல் ஒரு பவுண்டரி, சிக்சர் அடிக்க, 'ஸ்கோர்' விரைவாக உயர்ந்தது.

### நழுவிய 'ஹட்ரிக்'

பிரவீன் குமார் வீசிய ஆட்டத்தின் 49 ஆவது ஓவரில் கார்ல்டன் பாக்(39), ருசல்(25) அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர். இதையடுத்து 'ஹட்ரிக்' வாய்ப்புக் காத்திருந்தது. அடுத்து வந்த அணித்தலைவர் டரன் சமி ஒரு ஓட்டங்கள் எடுக்க, பிரவீன் வாய்ப்பு பறிபோனது. மேற்கிந்தியத்தீவுகள் அணி 50 ஓவரில் 8 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 249 ஓட்டங்கள் எடுத்தது. டரன் சமி(1), ரோச்(4) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

### விக்கெட்டுக்கள் சரிவு

சுவாலான இலக்கை விரட்டிய இந்திய அணிக்கு முன்னணி துடுப்பாட்ட வீரர்கள் ஏமாற்றம் அளித்தனர். டரன் சமி வேகத்தில் மனோஜ் திவாரி (2), பார்த்திப் பட்டேல்(26) ஆட்டமிழந்தனர். ருசல் பந்தில் பத்ரிநாத் (12) வெளியேறினார். மார்ட்டின் வலையில் விராட் ஹோக்லி(22) சிக்கினார். தொடர்ந்து ரோகித் சர்மா 39 ஓட்டங்களில் வெளியேற, அடுத்து வந்த வீரர்கள் சொற்ப ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தனர். இறுதியில் இந்திய அணி, 39 ஓவர்களில் 146 ஓட்டங்கள் மட்டுமே எடுத்து, 103 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது. ஆட்டநாயகன் விருதை மார்டின் தட்டிச் சென்றார். தொடரின் 5 ஆவது மற்றும் இறுதி ஆட்டம் நாளை இடம்பெறவுள்ளது.

### 100 ஆவது ஆட்டம்

இந்தியா - மேற்கிந்தியத்தீவுகள் அணிகள் இடையே நேற்று 100 ஆவது ஒரு நாள் ஆட்டம் நடந்தது. இதன் மூலம் நான்கு அணிகளுக்கு எதிராக 100 ஆட்டங்களில் விளையாடிய ஆஸ்திரேலிய அணியின் சாதனையை இந்தியா சமன் செய்தது. இந்திய அணி ஏற்கனவே இலங்கை, பாகிஸ்தான், ஆஸ்திரேலியாவுக்கு எதிராக 100 ஆட்டங்களில் பங்கேற்றுள்ளது. இந்தியா, மேற்கிந்தியத்தீவுகள், நியூசிலாந்து, இங்கிலாந்து அணிகளுக்கு எதிராக 100 ஆட்டங்களில் ஆஸ்திரேலிய அணி விளையாடியுள்ளது. (15)

## ஏ— வென்றார் சானியா

ஏகான் சர்வதேச ரெனிஸ் தொடரின் தகுதிச் சுற்றில் இந்திய நட்சத்திர வீராங்கனை சானியா மிர்சா வெற்றி பெற்றார்.

இங்கிலாந்தில் உள்ள ஈஸ்ட்போர்ன் நகரில், ஏகான் சர்வதேச ரெனிஸ் தொடர் நடக்கின்றது. இதன் ஒற்றையர் பிரிவு தகுதிச் சுற்றுக்கான இரண்டாவது சுற்றுப் போட்டியில் இந்தியாவின் சானியா மிர்சா, ஜார்ஜியாவின் அனா டடிஷ்விலியை சந்தித்தார்.

முதல் செட்டை 6-2 என்று கைப்பற்றிய சானியா, இரண்டாவது செட்டை 3-6 எனக் கோட்டைவிட்டார். பின் எழுச்சி கண்ட சானியா, வெற்றியாளரை நிர்ணயிக்கும் மூன்றாவது செட்டை 6-3 என்று தன்வசப்படுத்தினார். இறுதியில் சானியா மிர்சா 6-2, 3-6, 6-3 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்றார். இதன்மூலம் தகுதிச் சுற்றுக்கான மூன்றாவது சுற்றுக்கு முன்னேறினார். இதில் ஆஸ்திரியாவின் தமிரா பசக்கை எதிர் கொள்கிறார். இதில் வெற்றி பெறும் பட்சத்தில் ஒற்றையர் பிரிவில் விளையாடும் வாய்ப்பு பெறலாம். (15)



- சானியா -

சிம்மொன்ஸ் -

## சோதனை மேல் சோதனை

இலங்கை கிரிக்கெட் சபையிலுள்ள ( 'ஸ்ரீலங்கா கிரிக்கெட்') கிரிக்கெட் உலகக் கிண்ண அலுவலகத்தை நேற்று முன்தினம் மாலை சுற்றிவளைத்துள்ள இரகசிய பொலிஸ் குழு வொன்று, அங்கு பல மணிநேரங்கள் வரையில் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

உலகக் கிண்ண சுற்றுப்போட்டி குறித்து முக்கிய தகவல்கள் அடங்கிய கணினி 'ஹார்ட் டிஸ்குகள்' காணாமல் போயுள்ளதாக இலங்கை கிரிக்கெட் சபையினால் பொலிஸாரிடம் செய்யப்பட்ட முறைப்பாட்டை அடுத்தே இந்தச் சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது.

இலங்கை கிரிக்கெட் சபையின் பாதுகாப்பு ஆலோசகர் மேஜர் ஜெனரல் லோரன்ஸ் பெர்ணான்டோ உள்ளிட்ட அதிகாரிகளினாலேயே மேற்படி முறைப்பாடு செய்யப் பட்டுள்ளது. இந்த நிலையில், கொழும்பு, மெட்லண்ட் வீதியிலுள்ள குறித்த அலுவலகத்துக்குச் சென்ற இரகசிய பொலிஸார், அங்குள்ள அனைத்துக் கணனி இயந்திரங் களையும் பாரிய சோதனைக்கு உட்படுத்தியதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. கைவிரல் அடையாளங்களையும் அவர்கள் பதிவு செய்துள்ளனர்.

மேற்படி 'ஹார்ட் டிஸ்க்' காணாமல் போனமையானது [illegible] வடிக்கையின் வெளிப்பாடாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரிலேயே இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக இலங்கை கிரிக்கெட் சபையின் இடைக்கால நிர்வாக குழுவின் செயலாளர் நிஷாந்த ரணதுங்க தெரிவித்தார்.

குறித்த 'ஹார்ட் டிஸ்க்' காணாமல் போனமை தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டினை அடுத்தே மேற்படி சுற்றிவளைப்புத் தேடுதலுக்கு உத்தரவிடப்பட்டதாக இரகசிய பொலிஸ் பிரிவின் தலைவர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் விஜய அமரசிங்க தெரிவித்துள்ளார். நான்கு 'ஹார்ட் டிஸ்குகள்' காணாமல் போயுள்ளன. இவற்றில் உலகக்கிண்ண சுற்றுப்போட்டி ரிக்கெற்று விநியோகம் தொடர்பான முக்கிய தகவல்கள் அடங்கியிருந்தாக தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை, இந்தியா, பங்களாதேஷ் நாடுகளில் நடைபெற்ற உலகக் கிண்ண சுற்றுப்போட்டிக்காக கொழும்பிலும் ஐ.சி.சி. அலுவலகமொன்றை திறந்திருந்தது. ரிக்கெற் விற்பனை மூலமான 2 கோடி ரூபாவை ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனம் இன்னும் எதிர்பார்த்து காத்திருக்கிறது. கடந்த ஏப்ரல் 2 ஆம் திகதி உலகக்கிண்ணப் போட்டிகள் முடிவுற்ற போதிலும் ஸ்ரீலங்கா கிரிக்கெட் ஊழியர்களுக்கு மேற்படி உலகக்கிண்ண அலுவலகம் இன்னும் பணத்தை கையளிக்கவில்லை.

உலகக்கிண்ண அலுவலகத்திலிருந்து பணத்தை எதிர்பார்த்து காத்திருப்பதாக ஸ்ரீலங்கா கிரிக்கெட் சபை நிதி பணிப்பாளர் கூறியுள்ள நிலையில் தமது ஜூன் மாத சம்பளம் குறித்து ஸ்ரீலங்கா கிரிக்கெட் ஊழியர்கள் ஏற்கெனவே அச்சம் கொண்டிருந்ததனர். இந்த நிலையிலேயே இந்த ஹார்ட் டிஸ்க் திருட்டு சம்பவம் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Knowledge Universe

College of Business and IT

100% வெற்றி

A1/B1/B2
IELTS
Spoken English

நொலிட்ஜ் யூனிவேர்ஸ்

City & Guilds
Approved Centre



இல 75,கோவில் வீதி,யாழ்ப்பாணம்.

www.kugroup.info 0776458253


## மணிவிழாக்காணும் மகத்தான சேவகியை மனதார வாழ்த்துகிறோம்



கல்விப்பணியில் நல்ஆசிரியையாய், ஆலோசகராய், பணிப்பாளராகப் படிப் படியாகப் பதவிகள் வகித்து கல்வி உலகின் கலங்கரை விளக்காய் திகழ்ந்து அகவை அறுபதில் ஓய்வுபெறும்

**திருமதி அருளேஸ்வரி வேதநாயகம்**
(ஓய்வுபெற்ற கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாணம்)

அவர்கள் கல்விப் புலத்துக்கு ஆற்றிய சேவையை நன்றி உணர்வுடன் பாராட்டி வாழ்த்துவதுடன் அவரது ஓய்வுக் காலம் மகிழ்ச்சிகரமாக அமைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வாழ்த்துவோர்:
அதிபர், ஆசிரியர்கள், ஊழியர்கள், மாணவர்கள், பாடசாலை சமூகத்தினர்.

யா/ கோண்டாவில்
இராமகிருஷ்ண மகாவித்தியாலயம்,
கோண்டாவில். (சி/876)

## மணிவிழா நாயகியை பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது அச்சுவேலி மண்ணில் பிறந்து எமது கல்லூரி மாணவியாக கல்வி பயின்று ஆசிரியராய், ஆசிரிய ஆலோசகராய், உதவி கல்விப் பணிப்பாளராய் கோட்டக் கல்விப் பணிப்பாளராய் வலய கல்விப் பணிப்பாளராய் பல்வேறு நிலைகளிலும் வடக்கு, கிழக்கு மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு அயராது உழைத்து, உயர்ந்து நின்று 40 வருடகாலம் அளப்பெரும் பணியாற்றி ஓய்வு பெற்ற

**திருமதி அருளேஸ்வரி வேதநாயகம்**
(ஓய்வுபெற்ற யாழ். கல்வி வலய கல்விப்பணிப்பாளர்)

அவர்களை எமது கல்லூரி சமூகம் மனதார பாராட்டி வாழ்த்துகின்றது. ஓய்வுபெற்ற பின்னரும் பல்வேறு வழிகளிலும் கல்வி, சமூக பணியாற்றி பல்லாண்டு காலம் வாழ இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்தி சங்கம், பழைய மாணவர் சங்கம்.
யா/ அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி,
அச்சுவேலி.
(சி/881)

## கண்ணீர் அஞ்சலி



எமது கழக ஆலோசகரும் அனுதாபியுமான கந்தையா இராமநாதன் அவர்களின் அன்புத்துணைவியார்

**திருமதி செல்வராணி இராமநாதன் (கிச்சி)**

அவர்களின் மறைவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

வளர்மதி முன்னேற்றக்கழகமும்
வளர்மதி நிறைவாழ்வகமும்,

சம்பியன் லேன்,
கொக்குவில். (2057)

## கண்ணீர் அஞ்சலி



எமது உற்ற நண்பன்

**விஸ்வலிங்கம் சுந்தரலிங்கம்**

அவர்களின் மறைவினால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பெரிய அரசடி,
சங்கத்தானை, சாவகச்சேரி.
(2057)
நண்பர்கள்.

## சாயி நிலையத்தில் நகர சங்கீர்த்தனம்

யாழ்.பல்கலைக் கழகத்துக்கு முன்பாக அமைந்துள்ள சத்திய சாயி சேவா நிலையத்தில் இன்று புதன் கிழமை அதிகாலை 4.45 மணிக்கு நகர சங்கீர்த்தனம் இடம் பெறவுள்ளது.

தொடர்ந்து காலை 8.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும் ஆன்மீக நிகழ்வில் காயத்திரி மந்திரம், தியானம், விசேட சொற்பொழிவு பஜனை ஆகியன இடம்பெறும்.

இந்த நிகழ்வில் சுவாமியின் அற்புத இறை அனுபவங்கள் எனும் தலைப்பில் யாழ்.பல்கலைக் கழகத்தின் இசைத் துறைத் தலைவர் கலாநிதி ந.வி.மு.நவ ரத்தினம் சொற்பொழிவை நிகழ்த்துவார். (ற)

## கூட்டம்

காங்கேசன்துறை உதயசூரியன் சன சமூக நிலையத்தின் பொதுச்சபைக்கூட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கோண்டாவில் வேதபாராயண சனசமூக நிலைய மண்டபத்தில் வ.முருகேசு தலைமையில் நடைபெறவுள்ளது. (ற)


# 2011 இற்கான புதிய அனுமதிகள்

புதிய மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் கொழும்பு பல்கலைக்கழகத்தால் கோரப்பட்டுள்ளன

BIT Bachelor of Information Technology

ESOFT The Leader in Professional ICT Education

Join Sri lanka's#1

University of Colombo School of Computing

உங்ககள் நுழைவுக்கான வழி
3 A/L Passes (Any Stream) → BIT DEGREE
Without A/Ls → FIT

கொழும்பு பல்கலைக்கழக நுழைவு, பரீட்சைப் பதிவுகள் அனைத்தும் எம்மால் மேற்கொள்ளப்படும்.

உங்கள் பாட நெறியினை தெரிவு செய்யும் வழிகள்
- BIT Plus Programme (முழுநேரம்)
- BIT Year 1 (பகுதிநேரம்)

புதிய 2ஆவது பிரிவு 18.06.2011

- ★ 10வருட அனுபவமிக்க ஆசிரியர் குழாம்
- ★ மீட்டல் பயிற்சி நெறிகள் தலைமையக விரிவுரையாளர்களால் வழங்கப்படும்.
- ★ ISO தரச் சான்றிதழ் பெற்ற இலங்கை அரசால் அங்கீகரிக்கப்பட்ட கணினிக் கல்லூரி.
- ★ சிறந்த விரிவுரையாளர்களால் உருவாக்கப்பட்ட 30 பாடவிதானங்கள் வினாக் கொத்துக்கள் இலவசம்.
- ★ பயிற்சி முடிவில் கொழும்பு பல்கலைக்கழகச் சான்றிதழும் தொழில்வாய்ப்பை உறுதிப்படுத்தும் சான்றிதழும்.

25% Discount For University, Tec Students Government Employees

கடந்த 4ஆண்டுகளாக எமது மாணவர்களே தங்கப்பதக்கம், முதற்தர சித்திகளைப் பெற்றுள்ளார்கள்



Danuka Lakmal 2009
Ravith Bothejue 2008

ESOFT Computer Studies (PVT) Ltd.
No.166/3,
Navalar Road, Jaffna.
T.P: 021 222 4142
Web: www.esoft.lk

வடமாகாணக் கிளைகள்:-

| | | |
|---|---|---|
| ★ கிளிநொச்சி | 021 2285444 | இல.1, கனகபுரம் வீதி. |
| ★ வவுனியா | 024 2226060 | 115, மில் வீதி. |
| ★ மன்னார் | 023 2223377 | Convent வீதி, சின்னக்கடை. |
| ★ சாவகச்சேரி | 021 2270333 | பெரிய அரசடி. |

(49,23,24)


## நெல்லியடி ம.வியில் மென்பந்தாட்டம் இன்று ஆரம்பம்

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தின் 90 ஆவது ஆண்டு நிறைவையொட்டி வடமராட்சி பகுதிக்கு உட்பட்ட பகுதிக்கு அரச, அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு இடையிலான மென்பந்து துடுப்பாட்டப்போட்டி இன்று காலை 8.30 மணியளவில் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகின்றது. வடமராட்சியைச் சேர்ந்த 19 அணிகள் இந்தப் போட்டியில் பங்கு கொள்ளவுள்ளன.

### உடன் தேவை

கணினி அச்சகம் ஒன்றுக்கு கணினி வடிவமைப்பாளர் தேவை.
383/16, கோயில் வீதி, நல்லூர்.
தொ.பே:0777165589.

### விற்பனைப் பிரதிநிதிகள், வேலையாள்கள் தேவை

Coca Cola குளிர்பானங்களை யாழ். நகரில் விநியோகம் செய்வதற்கு விற்பனைப் பிரதிநிதிகள், வேலையாள்கள் தேவை. தகுதியானவர்கள் பின்வரும் முகவரியில் தொடர்புகொள்ளவும்:- Coca Cola விநியோகத்தர்கள், சிவா பிறதர்ஸ், இல.205, ஆஸ்பத்திரி வீதி, யாழ். தொ.பே:0212225497, 0212225688.

### வீடு விற்பனைக்கு

கோண்டாவில் மேற்கு, K.K.S வீதியில் அமைந்துள்ள 1½ பரப்புக் காணியுடன் கூடிய வீடு உடனடியாக விற்பனைக்குண்டு. உப தபால் கந்தோர், கூட்டுறவுச் சங்கக் கடைக்கு முன்னால், கே.கே.எஸ். வீதியிலிருந்து 35 மீற்றர் நீளமுள்ள பெரிய வாகனங்கள் செல்லக்கூடிய 15" அடி பாதை கொண்டுள்ளது.
தொடர்பு: 0772492301, 0213216320.

### காணி விற்பனைக்குண்டு

நல்லூர், செட்டித்தெரு லேனில் 11 அடி பாதை, சுற்று மதில், நன்னீர் பங்குக் கிணற்றுடன் 1¾ பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0772007836.

### வேலையாள் தேவை

யாழ். நகரில் பிரபல தனியார் நிறுவனம் ஒன்றுக்கு Clerk பதவிக்கு உடனடியாக வேலையாள்கள் தேவை. யாழ். நகருக்கு மிக அருகில் [illegible] முக்கியமானது. தொடர்புகளுக்கு:- 0775361774.

ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி
பழைய மாணவர்சங்க
**அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்**

| | |
|---|---|
| * முதலாம் பரிசு | - சீட்டு இலக்கம் 873 |
| * இரண்டாம் பரிசு | - சீட்டு இலக்கம் 1083 |
| * மூன்றாம் பரிசு | - சீட்டு இலக்கம் 517 |

ஆறுதல் பரிசு இலக்கங்கள்

பரிசுக்கான 1069, 1159, 1145, 1905, 1197, 2611, 2952 இலக்க சீட்டுக்களை வைத்திருப்போர் கல்லூரி பழைய மாணவர் சங்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

(2048) பழைய மாணவர் சங்கம்,
புனித அந்தோனியார் கல்லூரி, ஊர்காவற்றுறை.

## மரண அறிவித்தல்

பிரம்மஸ்ரீ
**தி. கார்த்திகேச சர்மா**

கீரிமலை, நகுலேஸ்வரர் ஆதீனத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற சிவஸ்ரீ கா. தியாகராஜக் குருக்கள் புவனேஸ்வரி அம்மாள் தம்பதியரின் மகன் பிரம்மஸ்ரீ தி. கார்த்திகேச சர்மா (வாகீஸ் ஐயா) (13.06.2011) திங்கட்கிழமை பின்னிரவு 4 மணிக்கு இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் கிரிஜாவின் அன்புக் கணவரும் கம்சத்வனியின் அன்பு தந்தையும் மகாலட்சுமி, காலஞ்சென்ற சபேசசர்மா மற்றும் இ. சிவாஜினி காலஞ்சென்ற தேவசேனா ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் ஆத்ம சாந்திக்கிரியைகள் இன்று (15.06.2011) புதன்கிழமை மு.ப. 10 மணிக்கு வடலியடைப்பு விநாயகர் ஆலயத்துக்கு அருகிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் விளாவெளி இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
மனைவி, மகள்,
மைத்துனர்கள்,
சித்தப்பாமார்.

வடலியடைப்பு
பிள்ளையார் ஆலயம்,
வடலியடைப்பு.
(3152)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போர்க்குற்றம்...(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தடுக்கும்முகமாக கச்சதீவை இலங்கையிடம் இருந்து மீண்டும் பெறவேண்டும் எனவும் அவர் பிரதமரை வலியுறுத்திக் கேட்டுக்கொண்டார். அதேசமயம் தமிழக சட்டமன்ற உறுப்பினர்கள் கொண்ட குழு ஒன்றை இலங்கைக்கு அனுப்பிவைக்க வேண்டும் என்ற முதல்வரின் கோரிக்கையை பிரதமர் மன்மோகன் சிங் ஏற்றுக்கொண்டார். பிரதமரிடம் தமிழகத்தின் கோரிக்கைகள் அடங்கிய கோப்பு ஒன்றையும் ஜெயலலிதா கையளித்தார்.

அதில் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

இலங்கைப் போரின் கடைசி நேரத்தில் ஏராளமான அப்பாவி பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர் எனத் தகவல்கள் வெளிவந்துள்ளன. இந்த மோதல் குறித்து ஊடகங்கள் சுதந்திரமாக செய்திகள் சேகரிக்கவும் அனுமதிக்கப்படவில்லை.

பரவலான குண்டுவீச்சு மூலம் பொதுமக்கள் படுகொலை, வைத்தியசாலை மற்றும் நிவாரண முகாம்கள் மீது தாக்குதல், மனிதாபிமான உதவிகள் மறுப்பு, மனித உரிமை மீறல்கள், ஊடகம் மற்றும் அரசுக்கு எதிரான விமர்சகர்கள் மீது தாக்குதல் ஆகியவை குறித்து ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, இத்தகைய போர்க்குற்றங்களில் ஈடுபட்டவர்களைப் போர்க்குற்றவாளிகளாக அறிவிக்க, இப்பிரச்சினையை இந்திய அரசு ஐ.நா. சபையிடம் கொண்டு செல்லவேண்டும்.

இலங்கையில் தமிழர்கள் பாரம்பரியமாக வாழ்ந்துவரும் வடக்கு, கிழக்குப் பகுதிகளின் நிர்வாகத்தில் அவர்கள் முழுமையாக இடம்பெற வழி ஏற்படுத்தவேண்டும். இதுகுறித்து, நடவடிக்கைகளை எடுக்குமாறு இலங்கை அரசை இந்தியா வலியுறுத்த வேண்டும். இலங்கையில், தமிழர்கள் நீண்டகாலமாக இரண்டாம்தர குடிமக்களாக நடத்தப்படுகின்றனர். அரசியல் சட்டத்திருத்தம் மூலம் அவர்களுக்கு சம உரிமை வழங்குவதை இலங்கை அரசு தவிர்த்து வருகிறது.

சிங்களவர்களுக்கு இணையாக தமிழர்களுக்கு அரசியல் ரீதியான சம உரிமை வழங்கவேண்டும். முகாம்களில் உள்ள தமிழர்கள் முழுமையாக அவர்களது சொந்த இருப்பிடங்களில் குடியமர்த்தப்படும் வரை, இலங்கை மீது பொருளாதாரத் தடை விதிக்கப்பட வேண்டும். இதற்கான முயற்சிகளை மற்ற நாடுகளுடன் இணைந்து இந்தியா எடுக்க வேண்டும்.

- இவ்வாறு ஜெயலலிதா பிரதமரிடம் அளித்துள்ள கோப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (ஒ-சி)

## தூத்துக்குடியிலிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முதல் வகுப்பில் 11 அறைகளும், அங்கவீனர்களுக்கான வசதிகளுடன் கூடிய இரண்டு அறைகளும், மலசலசகூட வசதிகளுடன் கூடிய 22 டிலக்ஸ்(Deluxe) அறைகளும், மலசலகூடம் மற்றும் குளியலறை வசதிகளைக் கொண்ட 169 டிலக்ஸ் அறைகளும், சாதாரண வகுப்பு 111 அறைகளும் (Economy) உள்ளன.

அத்துடன் மது பிரியர்களுக்கான அனைத்து வசதிகளையும் கொண்ட மதுபானசாலையும் இக்கப்பலில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. 250 ஆசனங்களைக் கொண்ட புறோட்வே பார் (Broadway Bar) இக்கப்பலில் உள்ளது.

9 மாடிகளைக் கொண்ட இக்கப்பலின் ஐந்தாவது மாடியில் 322 அறைகள் உள்ளன. 7ஆவது மாடியில் இணையத்தள வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. தொலைக்காட்சி, குளிர்பானம், கஸினோ, முதலுதவிச்சிகிச்சை அறைகள் மற்றும் தீர்வையற்ற விற்பனை நிலையங்களும் இக்கப்பலில் உள்ளன.

அத்தோடு, இக்கப்பலில் வாகனங்கள் உள்ளே, வெளியே செல்லும் வசதிகளும் காணப்படுகின்றன. மேலும் இசைக்கருவிகள் உள்ள அறைகளும் உள்ளன.

இந்தக் கப்பலில் பயணிகளின் உதவிகளுக்காக 40க்கும் அதிகமான உதவியாளர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். அது தவிர, நிர்வாக நடவடிக்கைகள், பாவனையாளர் உதவி வசதிகள் பொருள்கள் நிறைபார்த்தல் உள்ளிட்ட சேவைகளை ஏ[illegible]துவதற்காக 25க்கும் மேற்பட்ட உதவி வழங்குநர்கள் குழு ஒன்று சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

ஸ்கொட்டியா பிரின்ஸ் கப்பலில் மொத்தமாக 300தொன் எடை உடைய பொருள்களைக் கொண்டுசெல்லமுடியும். காலதாமதமின்றி ரிக்கட்டுக்களை ஒதுக்கிக்கொள்வதற்கு 49 அமெரிக்க டொலர்களும் சற்றுத் தாமதமா[illegible] ஒதுக்கீட்டுக்கு 65 அமெரிக்க டொலர்களும் அறவிடப்படும்.

இந்தக் கப்பலில் பயணிக்கும் அனைவரையும் கவரும் விதத்தில் பிரசித்தமான பாடகர்கள், விநோதம் மற்றும் மகிழ்வூட்டும் பல்வேறு நகைச்சுவைகளை மேற்கொள்கிறவர்களும் அழைத்துவரப்பட்டு கப்பலினுள் பயணிகளை மகிழ்விக்கவுள்ளனர்.

பிளெமிங்கோ டியூட்டி பிறீ ஷொப் பிறைவேட் லிமிட்டெட் (Flemingo duty free shop (pvt) Ltd) என்ற முதல் தர பயணிகள் மற்றும் சரக்கு போக்குவரத்துச் சேவை வழங்குநர் நிறுவனத்துக்கும் சொந்தமான 'ஸ்கொட்டியா பிரின்ஸ்'(Scotia prince) கப்பல் தூத்துக்குடி - கொழும்புக்கு இடையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. (ஒ-சி)

## குடாநாட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கின்றார்.

நேற்றுமுன்தினம் கோப்பாய் பிரதேசத்தில் இராணுவத்தினர் மக்களைப் புகைப்படம் எடுத்து பதிவு செய்யும் நடவடிக்கைகளை மேற்கொண்டனர் எனச் செய்திகள் வெளிவந்துள்ளன.

வட பிராந்தியத்துக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் காமினி சில்வாவிடம் இது தொடர்பாகத் தொடர்பு கொண்டு கேட்டபோது, மக்கள் தொடர்பான விடயங்களை கணினி மயப்படுத்தும் நடவடிக்கையே இதுவென்றும், இது தொடர்பாக மக்களுக்கு ஆட்சேபனை ஏதுமிருந்தால் பொலிஸ் நிலையங்களுக்குச் சென்று முறைப்பாடு செய்யலாம் எனவும் தெரிவித்தார். வடமாகாணத்தில் மட்டும் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்றும் நாடு முழுவதும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்றும் அவர் தெரிவித்தார்.

இராணுவத்தினர், பொலிஸார் ஆகியோர் வீடுகளுக்குச் சென்று புகைப்படம் எடுத்து பதிவு செய்வது தொடர்பாகத் தொடரப்பட்ட வழக்கில் உயர் நீதிமன்றம் பதிவு செய்யும் நடவடிக்கைகளை நிறுத்தும்படி பணிப்புரை விடுத்திருந்தது. இதேவேளை, அவசரகாலச் சட்டத்தில் பதிவு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வகையிலான ஷரத்துகள் நீக்கப்பட்டுவிட்டன.

யாழ். குடாநாட்டின் சில பகுதிகளில் இராணுவத்தினரும், பொலிஸாரும் புகைப்படம் எடுத்து பதிவு நடவடிக்கைகளை மேற்கொள்வது மக்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

படையினர் மேற்கொள்ளும் பதிவு நடவடிக்கைகள் குறித்து தமக்கு அறிவிக்கப்படவில்லை என்று யாழ். மாவட்ட அரச அதிபர் இமெல்டா சுகுமார் 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

இராணுவத்தினரோ பொலிஸாரோ பதிவு நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை என்றும் பதிவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகக் கூறப்படுவது அப்பட்டமான பொய் என்றும் பாதுகாப்பு தொடர்பான ஊடக மத்திய நிலையப் பணிப்பாளர் லக்ஷ்மன் ஹுலுகல, இது தொடர்பாக கேட்டபோது தெரிவித்தார்.

நவாலி மற்றும் கோப்பாய் பகுதிகளில் பிரதேசத்தில் நேற்று முன்தினம் இராணுவத்தினர் வீடுகளுக்குச் சென்று மக்களைப் புகைப்படம் எடுத்து பதிவு செய்யும் நடவடிக்கையை மேற்கொண்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-சி)


## மரண அறிவித்தல்

### திருமதி ஜெயந்தி முரளிதரன்

தாவடியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஜெயந்தி முரளிதரன் 12.06.2011 ஞாயிற்றுக் கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் உரும்பிராயைப் பிறப்பிடமாகவும், தாவடியை வசிப்பிடமாகவும் தற்பொழுது கனடாவில் வசிப்பவர்களுமாகிய பத்மாநாதன் (C.T.B) விஜயலட்சுமி தம்பதியரின் மகளும், முரளிதரனின் அன்பு மனைவியும், பிரவீனா, பிரகாந்தன் ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சனிக்கிழமை கனடாவில் நடைபெறும்.

தகவல்:
க.திருநாவுக்கரசு (மாமன்),
உரும்பிராய் கிழக்கு.

கனடா
தொ.பே.-0019055684835




சீட்டிழுப்பு இலக்கம் 758 திகதி 13-06-2011

வெற்றி எண்கள்

06 16 34 39 X (ஆங்கில எழுத்து)

ஜக்பொட் பரிசு ரூ. 14,301,890/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | - | 14,301,890/= | - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 02 | 400,000/= | 800,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 13 | 50,000/= | 650,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 339 | 1,000/= | 339,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 633 | 1,000/= | 633,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 15237 | 60/= | 914,220/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 7896 | 40/= | 315,840/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 199741 | 20/= | 3,994,820/= |
| ஆங்கில எழுத்து | 29064 | 20/= | 581,280/= |
| | | மொத்தம் ரூ. 8,228,160/= | |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 08 | 50,000/= | 400,000/= |

ரூபா 50,000 வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| குருநாகல் | 600160347-1-01 |
| திருகோணமலை | 600168373-1-41 |
| கம்பஹா | 600177144-9-49 |
| கண்டி | 600162569-9-29 |
| கேகாலை | 600167821-3-13 |
| கண்டி | 600171456-8-08 |
| மொனராகலை | 600160140-2-02 |
| நுவரேலியா | 600167006-2-22 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 8,628,160/=

இந்த வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொ

ரூ. 14,693,070/=

செம்மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2011 ஜூன் 16 ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை,
யூனியன் பிளேஸ், கொழும்பு-02
தொ.பே. 2333546/7

Enriching Your Life
Development Lottery

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் ஆசிரியை
திருமதி. அன்னமேரி வென்சஸ்லாஸ் அவர்களது
அன்புத் தந்தையார்

அமரர்

### சீமாம்பிள்ளை செபஸ்தியாம்பிள்ளை

14-06-2011 இறைபதம் அடைந்துள்ள நிலையில் துயரில் ஆழ்ந்திருக்கும் அவர்களது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர், மாணவர்.
கிளி., பளை றோ.க.த.க., பளை.
(சி-888) (52,54)

## கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்



அன்பொளி கல்வியக ஆரம்பக் கல்விச் சிறார்களின் கல்விக்குக் களம் அமைத்துக் கொடுத்த சமூக நலன் விரும்பும் பண்பாளர்களான சாரங்கா நகைமாட உரிமையாளர் **சிவபாஸ்கரன்** அவர்களின் மாமியும், திருமதி. ஞானாம்பிகை அவர்களின் தாயுமாகிய

அமரர்

### திருநாவுக்கரசு பார்வதிப்பிள்ளை

அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு ஆழ்ந்த துயர் அடைகின்றோம். அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்குகொண்டு, எமது கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்கி, அவரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அன்பொளி கல்வியகம்,
இந்துக்கல்லூரி வீதி,
யாழ்ப்பாணம்.
(சி-883) (52,54)

அன்னாரின் பிரிவால் துயருறும்
ஆசிரியர்கள், உதவி ஆசிரியர்கள்,
மாணவர்கள்.

## மரண அறிவித்தல்

### கணபதிப்பிள்ளை மகாலிங்கம்



வேலணையைப் பிறப்பிடமாகவும் சோதிவேம்படி லேன், மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை மகாலிங்கம் (11.06.2011) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் இராசமணியின் அன்புக் கணவரும் ஆதவன், சங்கீதா (லண்டன்), றமணன், கார்த்திகா, நர்மதா, அகிலன் (மலேசியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுகந்தினி, உதயகுமார் (லண்டன்), பாகேஸ்வரி, சிவகுமார் (சிவா ரெயிலறிங் சென்ரர்), கபில்ராஜ் ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.06.2011) வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
சோதிவேம்படி லேன், மானிப்பாய்.
T.P.: 0044 2088936624

(1917)(38)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமராட்சியில் நேற்று மாலைவேளையில் திடீரென கடும் காற்றுடன் கூடிய மழை

யாழ்ப்பாணம், ஜூன் 15

வடமராட்சிப் பகுதியில் நேற்று மாலை திடீரென ஏற்பட்ட கடும் காற்றுடன் கூடிய மழையால் அந்தப் பகுதிக்கான மின்சாரம் தடைப்பட்டதுடன் கட்டடங்களின் கூரைகள் தூக்கி வீசப்பட்டும் பயன்தரு மரங்கள் முறிந்து வீழ்ந்தும் நாசமாகியுள்ளன.

நேற்று மாலை 6.30 மணியளவில் வடமராட்சிப் பகுதியில் திடீரென ஏற்பட்ட காற்றுடன் கூடிய மழையின் போது சில இடங்களில் மின்கம்பங்கள் கூட முறிந்து சரிந்தன. புலோலிப் பகுதியில் பனைமரம் முறிந்து வீட்டின் மேல் விழுந்ததில் அந்த வீட்டின் கூரை சேதமடைந்தது.

வடமராட்சி, மயிலிட்டி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச அலுவலகக் கூரைகளும் தூக்கி வீசப்பட்டுள்ளன.

### வீட்டின் கூரைகள் பறந்தன; மரங்கள் பல முறிந்து சரிந்தன

இவற்றை விட வடமராட்சிக் கடற்கரையோரக் குடியிருப்புக்களின் கூரைகள் பலவும் காற்றில் பறந்தன.

குழப்பமான காலநிலை காரணமாக கடல் தொழிலுக்குச் செல்லத் தயாராகிய பலர் இடைநடுவில் வீடு திரும்பியதுடன், கடலில் தொழிலில் ஈடுபட்டிருந்தவர்கள் வலைகளை விட்டுவிட்டுக் கரை திரும்பியதாகவும் தெரிவித்தனர்.

மின்சாரக் கம்பங்கள், தொலைத் தொடர்புக் கம்பங்கள் முறிந்து வீழ்ந்ததால் மின்சாரம், தொலைத்தொடர்பு சேவைகள் தடைப்பட்டன.

இதில் கரையோரப் பகுதிகள் தவிர ஏனைய இடங்களுக்கு இரவு 9 மணியளவில் மின்சாரம் மீள வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-10-236)

## பஸில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த நிலையில் எதிர்வரும் 20 ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்கு வருகை தரும் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ கடந்த 11 ஆம் திகதி வடமராட்சி கிழக்கில் பிற்போடப்பட்ட மீள்குடியேற்றத்தையும் ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

அத்துடன் வலி.வடக்கு மக்களை நேரடியாகச் சந்திப்பதுடன் மேற்கொள்ளப் பட்டுவரும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பிலும் ஆராயவுள்ளார்.(ஒ-15)

## நாடாளுமன்ற....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உட்பட அரசில் அங்கம் வகிக்கும் அர சியல் கட்சிகளின் தலைவர்கள் சர்வகட்சி நாடாளுமன்றத் தெரிவுக்குழு மூலம் தீர்வுக்கான வரைவொன்றைத் தயாரிக்கும்படி அரசுக்கு ஆலோசனை தெரிவித்திருந்தனர்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கடந்த வாரம் நாடாளுமன்றத்துக்கு விஜயம் செய்திருந்தபோது இந்த விடயம் குறித்து ஆராயப்பட்டது எனவும் தெரியவருகிறது.

சர்வகட்சி நாடாளுமன்றத் தெரிவுக் குழு மூலம் ஒரு குறிப்பிட்ட கால வரையறைக்குள் இனப் பிரச்சினைத் தீர்வுக்கான வரைவைத் தயாரித்து, நாடாளுமன்றத்தின் ஒப்புதலையும்பெற்று அமுல்படுத்த அரசு தீர்மானித்துள்ளதுஎனவும்தெரிவிக்கப்படுகிறது.(ஒ-சி)

## வலி.வடக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரச திணைக்களத் தலைவர்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள் உடனடியாக வேலைகளை ஆரம்பிக்க வேண்டும். இன்றிலிருந்து ஒருவார காலத்துக்குள் சகல வேலைத்திட்டங்களும் ஆரம்பித்தாக வேண்டும். இல்லாவிட்டால் அவற்றின் ஒப்பந்தங்கள் இரத்துச்செய்யப்படும் என்றார் ஆளுநர். அத்துடன் இந்த வேலைத்திட்டங்களை ஆரம்பிப்பதில் ஏதாவது தடைகள் இருக்குமானால் அவற்றை தெரியப்படுத்துமாறும் கேட்டுக்கொண்டார்.

அதனைத் தொடர்ந்து சகல திணைக்களங்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் வேலைத்திட்டங்கள் தொடர்பாக கேட்கப்பட்டது. ஆளுநரின் கடுமையான- காரமான- கேள்விகளுக்கு அதிகாரிகள் தடுமாற்றத்துடன் பதிலளித்தனர்.

மின்சாரவிநியோகம் மக்களுக்கு தேவையாக இருப்பதால் ஒருவாரத்தினுள் அவற்றை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் ஆளுநர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

இந்தக் கலந்துரையாடலில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, மேலதிக அரச அதிபர் ரூபினி வரதலிங்கம், தெல்லிப்பழை பிரதேச செயலர் எஸ். முரளிதரன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

கலந்துரையாடலின் பின்னர் பலாலி வீமன்காமம் மகாவித்தியாலயத்தின் புனரமைப்பு வேலைகளுக்கான பெயர்ப் பலகையை ஆளுநரும், அமைச்சரும் திரைநீக்கம் செய்து வைத்தனர். தொடர்ந்து பிரதேச மக்களுடனான சந்திப்பு இடம்பெற்றது. இந்த நிகழ்வுகளினைத் தொடர்ந்து மாவிட்டபுரம் அரசடி வீதியின் புனரமைப்பையும் இருவரும் இணைந்து ஆரம்பித்து வைத்தனர்.

கலந்துரையாடலில் முடிவுற்றதாக மற்றும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்ட வேலைத்திட்டங்களை அமைச்சர், ஆளுநர், அரச அதிபர் ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டனர்.

பின்னர் மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட மாவைக்கலட்டி கிராமத்து மக்களை நேரில் சென்று சந்தித்து அவர்களின் குறைகளை கேட்டறிந்து கொண்டனர். இறுதியாக தெல்லிப்பழை வைத்தியசாலைக்குச் சென்று 15 மில்லியன் ரூபா செலவில் மேற் கொள்ளப்பட இருக்கும் வேலைத்திட்டத்தையும் அங்குரார்ப்பணம் செய்து வைத்தனர். (ஒ-15)

## கப்பல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

பிரதமர் மன்மோகன்சிங்கின் வாசஸ்தலத்தில் இடம்பெற்ற இச்சந்திப்பின்போது பல விடயங்கள் தொடர்பாக இருவரும் 20 நிமிடங்கள் பேசினர் என்று இந்திய செய்திகள் தெரிவிக்கின்றன.

இச்சந்திப்பின் பின்னர் முதல்வர் ஜெயலலிதா ஊடகவியலாளர்களைச் சந்தித்து உரையாடினார். தமிழக மீனவர்கள் பிரச்சினை, இலங்கைத் தமிழர் விவகாரங்கள் ஆகியன பற்றி தாம் பிரதமருடன் பேசினார் என ஜெயலலிதா ஊடகவியலாளர்களிடம் கூறினார்.

இலங்கைத் தமிழர்களின் வாழ்வை வழமைக்குக் கொண்டுவருவதற்காக இந்திய அரசு இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும் என்று தான் பிரதமர் மன்மோகன்சிங்கிடம் கேட்டுக்கொண்டார் என்றும் அவர் கூறினார்.

இச்சந்திப்பின்போது தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர்மேனனும் கலந்துகொண்டார் என்று ஜெயலலிதா மேலும் கூறினார். (ஒ-சி)

**வாகனம் விற்பனைக்கு**

CPGB XXXX
தொடரிலக்கமுடைய
LEYDAN LORRY லீசிங்குடன்
விற்பனைக்குண்டு.
தொடர்புக்கு: 0777749875

City & Guilds **UK ENGINEERING CLASSES**

நுழைவுத் தகுதி: G.C.E.A/L Maths/Bio
**DIPLOMA/ADVANCED DIPLOMA**
in Telecommunication/Electrical/Electronic/
Civil Engineering & Quantity Surveying.
கொழும்பு பிரபல்ய விரிவுரையாளர்களால் வகுப்புக்கள் நடாத்தப்படுகின்றது
Civil Engineering By:Eng.B.Thavendrakumar(C.Eng(Civil) தவா Sir
Telecom/Electrical & Electronic Engineering
By: Prof. K. Chandirabose.
**APSS Engineering** Dr.Subramaniam Road, Chunnakam.TP.021 224 1731

அரச, தனியார் அலுவலர்கள், பட்டதாரிகள், பல்கலைக்கழக மற்றும் உயர்கல்வி மாணவர்கள், இளைஞர், யுவதிகளுக்கான
**English Workshop (ஆங்கில பயிற்சிபட்டறை)**
அமைப்புக்கள், பிரயோகங்கள், இணைப்புச்சொற்கள், "என்று" அமைப்புக்கள், பிறர்கூற்று மற்றும் செயற்பாட்டு வசனங்கள், Cauative வசனங்கள் உட்பட ஆங்கிலம் கதைத்தலுக்கு தேவையான அனைத்து விடயங்களும் கற்பிக்கப்படும்
காலம் : 15.06.2011 புதன்கிழமை
பிரிவுகள் : 8-10, 10-12, 2-4, 4-6
(ஏதாவதொரு பிரிவில் கலந்துகொள்ளலாம்)
அனுமதி இலவசம்
கலந்துகொள்வோருக்கு புத்தகம் மற்றும் சான்றிதழ் இலவசம்
**MyWay English** 182, Stanley Rd, Jaffna. Ph : 0773363456

**BRITISH COLLEGE OF HIGHER STUDIES**
BCHS
**வழங்கும் கற்கை நெறிகள்**
மாணவர்கள், தொழில்புரிவோர், உயர்கல்வி கற்போர், நல்ல தொழில்வாய்ப்பைத் தேடுவோர் மற்றும் ஆங்கிலத்தில் இலகுவாக கதைக்க / பேச ஆர்வமுடையோர் அனைவரதும் நன்மை கருதி British College of Higher Studies இனால் பின்வரும் கற்கைநெறிகள் மிகவும் பிரத்தியேகமாக அனைவரும் எளிதில் கற்கக்கூடிய முறையில் நடைபெற இருக்கின்றது.
**Diploma in English** → 3 Months
Sat & Sun - 10.00 -12.00 Starts On :18-06-2011
2 Months
Mon,Wed,Thu- 4.00 -6.00 Starts On :20-06-2011
BCHS இல் Spoken English பயின்ற மாணவர்களும் இதில் இணைந்து கொள்ளலாம். அவர்களிற்கு விசேட கட்டணக் கழிவு உண்டு.
**Spoken English with Grammar Quick Learning / Fast Track Course** → 1 1/2 Months
Sat & Sun - 10.00 -12.00 Starts On :18-06-2011
Mon,Wed,Thu- 04.00- 06.00 Starts On :20-06-2011
எமது அனைத்துக் கற்கை நெறிகளும் Video, Audio Visuals மூலமாகவே நடத்தப்படுவதினால் புரிந்துகொள்ள இலகுவானது.
Second Floor, No.15, Sriampiyadi Lane (Off Stanley Road)
Tel: 021 222 4550 Hotlines: 0777222422, 0777585913, 0714299935

## மரண அறிவித்தல்

### கந்தையா கதிர்காமதாஸ்

(ஓய்வுபெற்ற மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர் - (M.L.T)



கந்தரோடையைப் பிறப்பிடமாகவும், கரந்தன் நீர்வேலியை வசிப்பிடமாகவும் தற்போது லண்டன் இங்கிலாந்தில் வசித்தவருமான கந்தையா கதிர்காமதாஸ் நேற்று (14.06.2011) செவ்வாய்க்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - சின்னம்மா தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான பொன்னையா - அன்னலட்சுமி தம்பதியரின் பாசமிகு மருமகனும், இரதிமதியின் அன்புக் கணவரும், ரவிதாஸ், சுரேதா, சுபாஜினி, சுதாஜினி ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெகதீஸ்வரி, தயாளன், நரேஸ் குமார், ஆனந்தராஜ் ஆகியோரின் அன்பு மாமனும், அனித்தா, அருண், சீமன், வேந்தன், லக்ஸ்மன், சகானா, சகான், அரவிந்தன், அபிராமி ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர் களான நாக லிங்கம், கனகரட்ணம், தவமணி ஆகியோரின் அன்பு சகோதர னும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கரந்தன்
நீர்வேலி

(2046)

தகவல்:
குடும்பத்தினர்.

**VAN FOR HIRE**



யாழ். நகரிலிருந்து குடும்பத்துடன் கொழும்பு சென்று வர மற்றும் சுற்றுலா மேற்கொள்வதற்கான மற்றும் விசேட வைபவங்களுக்கான வான் வாடகைக்கு (A/C) உண்டு.
T.P. 0777289283
0778096873
தொடர்புகளுக்கு: S.மதன்.

SPH
**ஷாம் தனியார் மருத்துவமனை**
புலோலி மேற்கு, பருத்தித்துறை
(தும்பசிட்டி பாடசாலை முன்பாக)
மேற்படி வைத்தியசாலையில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள வைத்திய நிபுணர்களின் வைத்தியசேவை
★ கண் சத்திரசிகிச்சை வைத்திய நிபுணர். 19.06.2011, பி.ப. 2.00 மணி (யாழ். போதனா வைத்திய சாலை)
★ குழந்தை வைத்திய நிபுணர் (யாழ். போதனா வைத்தியசாலை)
02.07.2011 பிற்பகல் 1.00 மணி
முற்பதிவுகளை மேற் கொள்ளலாம்.
T.P-0217200178, 0217201028

**LCD T.V வழங்கல் நிகழ்வு**





எமது நிறுவனத்தில் புதுவருட தினத்தன்று நடைபெற்ற விசேட விற்பனை (Packege ) இல் உழவு இயந்திரங்களை கொள்வனவு செய்த வாடிக்கையாளர் அனைவருக்கும் LCD T.V வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 16.06.2011 வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு எமது நிறுவனத்தில் இடம்பெறும். இப் பகேஜில் உழவு இயந்திரங்களை கொள்வனவு செய்த வாடிக்கையாளர் சகலரையும் அன்போடு அழைக்கின்றோம்.

மேலும் எமது பிரதேசத்திற்கேற்ப நவீன முறையில் உருவாக்கப்பட்ட அரிவு வெட்டி சூடடிக்கும் இயந்திரம் , Supper DANXIA 2200 இனை எந்நேரமும் பார்வையிடலாம். வாடிக்கையாளர்களின் ஒத்துழைப்பிற்கு எமது நன்றிகளை தெரிவித்துக்கொள்வதுடன் தொடர்ந்தும் உங்களது ஒத்துழைப்பினை தந்துதவுமாறு அன்போடு கேட்டுக்கொள்கின்றோம்.

JOHN DEERE
MASSEY FERGUSON
SAJE MOTORS
DEALES IN Brand-new & Recondition Tractors, Motorcycle, Spareparts, and Agriculture products
121,KANDY ROAD,KILINOCHCHI. Tele No:- 94-492-5623/4, Fax No :-+94-228-5376 , Email:- sajeemotors@live.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 15.06.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org